# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 027 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 08, திங்கள் 23.12.2013

பக்கம் : 24

வன்னி : ரூபா.20

யாழ். : ரூபா.20

கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை

29 C 24C



பக்கம் 06

மோடி அலை வெறும் பிரமை



பக்கம் 07

ஈரானுக்கு எதிராக புதிய தடைகள் தேவையில்லை



பக்கம் 22

சதுரங்க போட்டியில் பங்கேற்பதற்காக தமிழ் மாணவன் ஹரிகிசன் டுபாய்க்கு



பக்கம் 23

ஆசியக் கிண்ணத்தைப் புறக்கணித்து நெருக்கடி கொடுக்குமா பாகிஸ்தான்?

# மன்னாரில் மனிதப் புதைகுழி

## நேற்றுவரை 10 சடலங்களின் எச்சங்கள் மீட்பு

## நாளையும் தொடர்கிறது தோண்டும் பணி

மன்னார், டிசெம்பர் 23

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று வரை 10 சடலங்களின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனால் புதை குழியை தோண்டும் பணிகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை குடி தண்ணீர் குழாய் இணைப்பு வேலைகளுக்காக மன்னார் திருக்கேதீஸ்வரத்தை அண்டிய பகுதியில் மண்ணைத் தோண்டியபோது அங்கு மனித எச்சங்கள் இருப்பதைப் பணியாளர்கள் அவதானித்தனர்.



அந்தக் குழியில் இருந்து 3 மனித மண்டை ஓடுகளும் அதன் பாகங்களும் மீட்கப்பட்டன. உடனடியாக இது குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பொலிஸார் இது குறித்து மன்னார் நீதிவான் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் மனித புதை குழி தென்பட்ட பகுதியை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் நீதிவான்

2 l ஆம் பக்கம் பார்க்க

## அடுத்த பிரதமர் யார்? அரசுக்குள் குழப்பம்

கொழும்பு, டிசெ.23

பிரதமர் பதவிக்கு ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் வெற்றிடம் ஏற்படுமானால் அந்தப் பதவிக்கு அடுத்து யாரை நிய மிப்பது என்பது தொடர்பில் அரசுக்குள் தற்போது பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

இந்தப் பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதால் அடுத்த பிரதமராக யாரை நியமிப்பது என்ற விடயத்தில் அரச தலைமைக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதனால், கட்சி உறுப்பினர்களின் கருத்துக்கள் கோரப்பட்டுள்ளதாகவும், இதன் அடிப்படையிலேயே இது விடயத்தில் இறுதி முடிவொன்று எடுக்கப்படும் என்றும் அரச தரப்பு வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

ஆரம்பம் முதலே சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர் ஒருவருக்கே பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற வாதத்தை சிலர் முன்வைத்துள்ளனர் என்றும்

2l ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேசத்தை ஏமாற்றவே பேச்சுகளுக்கு திடீர் அழைப்பு

### அரசு கபட நாடகம்; எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.23

அனைத்துலக சமூகத்தை ஏமாற்றி ஜெனிவாக் கூட்டத் தொடரில் அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதற்காக மஹிந்த அரசு அரங்கேற்றியுள்ள நாடகமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பாகும் என பிரதான எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

அத்துடன், தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணவேண்டும் என்ற உண்மையான மனோநிலை இந்த அரசிடம் இல்லை என்றும் அவை சுட்டிக்காட்டின.

நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிதியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் நிதியமைச்சர் என்ற வகையில் பதிலுரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,

"உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குப் பிற நாடுகளில் தீர்வைத் தேடுவதை விட தேசிய நல்லிணக்கத்துக்கும் அபிவிருத்

2l ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு முதலமைச்சருக்கு புதிய புலிகளால் ஆபத்து

### பகிரங்கமாக அவரே தெரிவித்தார்

யாழ்ப்பாணம், டிசெ. 23



புதிய புலிகளால் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்துள்ள வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன், கடந்த கால அரசியல் தலைமைகள் எதிர்நோக்கிய நிலைமைகளை தானும் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்று அச்சம் வெளியிட்டுள்ளார்.

புதிய புலிகள் அமைப்பானது அரசின் பின்னணியுடன் உருவாகலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வோதய அமைப்பின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கடந்த சனிக்கிழமை உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி ஒருவரே புதிய புலிகளை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதற்கு அரசு பின்னணியாக உள்ளது. இதன் மூலம் மீளவும் வெள்ளை வான் கடத்தல்கள் புதிய முறையில் தொடரலாம் எனவும் அவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

போர் முடிந்த பின்னரும் வடக்கில் இராணுவத்தினர்

2l ஆம் பக்கம் பார்க்க

## வயோதிபப் பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து நேற்று மீட்பு

### கொலை செய்யப்பட்டபின் வீசப்பட்டாரா? கிளி.திருவையாற்றில் பரபரப்பு

கிளிநொச்சி, டிசெ. 23

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் உள்ள வீட்டுக்கிணறு ஒன்றில் இருந்து சாவகச்சேரியைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கையை முறித்து கொலை செய்யப்பட்ட பின்னர் கிணற்றுக்குள் வீசப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் கல்வயலைச் சேர்ந்த சண்முகநாதன் செல்லம்மா (வயது - 71) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். திருவையாற்றில் உள்ள தனது காணியைப்

2l ஆம் பக்கம் பார்க்க

## வாள்வெட்டில் மாணவன் காயம்

வலி.வடக்கு, டிசெ. 23

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் ஒருவன் இளைஞர் குழுவொன்றின் வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை ஐயனார் கோயில் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற இந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த பாலசூரியன் உதயகரன் (வயது -19) என்ற மாணவனே படுகாயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

ஐயனார் கோயிலடிப் பகுதியிலுள்ள வயற்கிணற்றில் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுவொன்று மதுபோதையில் நிர்வாணமாக நின்று குளித்துள்ளனர். இது தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து பொலிஸாரால் குறித்த இளைஞர்

2l ஆம் பக்கம் பார்க்க

## அடுத்த மாதம் அவசரமாக அரச குழு தென்னாபிரிக்காவுக்கு

### உண்மை நல்லிணக்க ஆணைக்குழுதொடர்பில் ஆராய

கொழும்பு, டிசெ. 23

அடுத்த வருடம் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதஉரிமைகள் சபைக் கூட்டத்தொடருக்கு முன்னதாக, உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பது குறித்து இலங்கை அரசு ஆராய்ந்து வருகிறது இதற்காக அவசரமாக அரச குழு ஒன்று தென்னாபிரிக்காவுக்கு அடுத்த மாதம் பயணமாக உள்ளது என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பாக தென்னா பிரிக்காவின் உதவியையும், ஆலோசனையையும் இலங்கை அரசு கோரியுள்ளது.

இதுதொடர்பாக பேச்சுக்களை நடத்துவதற்கு அடுத்த மாதம் அரசின் குழுவொன்று தென்னாபிரிக்கா செல்லவுள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க,

"நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடை

2l ஆம் பக்கம் பார்க்க

## இடமாற்றம் செய்யப்பட்டார் பூநகரிப் பிரதேச செயலர்

### புலன்விசாரணைகளை அடுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 23

பூநகரி பிரதேச செயலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச செயலராக கடமையாற்றிய பா.வசந்த குமார், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் புலன் விசாரணைப் பிரிவினால் அண்மையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேச செயலருக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அது குறித்து பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் புலன் விசாரணைப்பிரிவுக்கும்முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைவாக கடந்த ஒரு மாத காலமாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கொழும்பிலிருந்து வருகை தந்த அதிகாரிகள் பிரதேச செயலகத்திலும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இந்த நிலையில் கடந்த

2l ஆம் பக்கம் பார்க்க

# தரமற்ற உணவுப்பொருள் கண்டால் அறிவிக்கலாம்

கொழும்பு, டிசெ. 23

உணவகங்களில் தரமற்ற உணவுப் பொருள்கள் விற்பனை செய்வதை இனங்கண்டால் சுகாதார அமைச்சின் விசேட தொலைபேசி இலக்கங்கள் ஊடாகதகவல்கொடுத்து அவற்றைத் தடுத்து நிறுத்த முடியுமென சுகாதார அமைச்சு அறிவித் துள்ளது.

குறித்த தொலைபேசி இலக்கங்களுடன் 24 மணித்தியாலங்களும் முறைப்பாட்டைத் தெரிவிக்க முடியுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி 011-3071073, 011-2676161, 1977 ஆகிய இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடு செய்ய முடியும்.

நாடு முழுவதிலுமுள்ள உணவு விற்பனை நிலையங்களை சோதனையிடவுள்ள சுகாதார அமைச்சு இந்த இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த விசேட செயற்திட்டம் இன்றுதொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை நடைபெறும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)



வரவு - செலவுத் திட்ட விவாதம் நிறைவேறியதன் பின்னர் சபாநாயகர் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கும் இரவு விருந்துபசாரம் வெள்ளிஇரவு சபாநாயகர் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. விருந்துபசாரத்தில் பங்குபற்றிய ஜனாதிபதி - த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோருடனும் இலங்கைக்கு வருகை தந்துள்ள பாகிஸ்தான் சபாநாயகருடனும் உரையாடுவதைப் படங்களில் காணலாம்.

# ஈழத்தமிழருக்கு தனி நாடு தவிர்க்க முடியாத ஒன்றே

### *மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக் குறித்து மே 17 இயக்கம் கருத்து*

சென்னை, டிசெ.23

தேசிய இனங்கள் பிரிந்து போவதற்கான உரிமையை ஐ.நா. வழங்குகிறது. அதன் படி, ஈழத்தமிழர்கள் எதிர்காலத்தில் தனி நாடு அமைப்பதற்கான உரிமை இருக்கிறது. இவ்வாறு இலங்கைப் போர் குறித்து ஜேர்மனியில் விசாரணை நடத்திய மக் கள் தீர்ப்பாயம் அளித்துள்ள தீர்ப்பு முக்கியமானது - என்று மே 17 இயக்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் டில்லியில் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அந்த அமைப்பின் தமிழக ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசும் இராணுவமும் இணைந்து நடத்திய இனப் படுகொலை, மனித உரிமை மீறல்கள் ஆகியவை குறித்து மக்கள் தீர்ப்பாயம் இம்மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை ஜேர்மனியில் உள்ள பிரெமன் நகரில் விசாரணை நடத் தியது.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் டென்னிஸ் ஹேலிடே தலைமையிலான அந்தத் தீர்ப்பாயத்தில் சர்வதேச சட்ட நிபுணர்கள், இனப்படு கொலை வழக்குகளை விசாரிக் கும் சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர்.

விசாரணையின்போது, இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையை இந்தியா எவ்வாறு முன்னின்று நடத்தியது என்பதற்கான ஆதாரங்களை மே 17 இயக் கம் சார்பில் நாம் அளித்ளதோம். நேரடிச் சாட்சிகளையும் தீர்ப்பாயம் விசாரித்தது.

இலங்கையில் இன அழிப்பு சம்பவத்தில் இந்தியா ஆயுத உதவி செய்தது. இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளித்தது. தமிழர்களுக்கு எதிரான போரில் தலையிடாமல் இருப்பதற்காக சர்வதேச நாடுகளுக்கு இந்தியா நெருக்குதல் கொடுத்தமை,

ஐ.நா.வில் உள்ள இந்திய அதிகாரிகள் உதவியுடன் இலங்கையில் இனப்படு கொலை நடப்பதற்கான சூழ் நிலையை உருவாக்கியமை உட்பட பல்வேறு தகவல்களுடன் கூடிய ஆதாரங்களை அளித்தோம்.

குறிப்பாக இந்தியாவின் மூன்று மிக முக்கிய உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் தமிழர்க்ளுக்கு எதிரான போரை முன்னின்று வழி நடத்திச் சென்றனர் என்ப தற்கான ஆதாரங்களையும் அளித்தோம்.

விசாரணையின் முடிவில், இலங்கையில் நடைபெற்றது தற்செயலான போர்க் குற்றமல்ல; அது ஒரு திட்டமிட்ட இனப்படுகொலை. இந்தியா, பிரிட்டன், அமெ ரிக்கா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாமல் இந்தப் படுகொலை நடந்திருக்க முடியாது என்று மக்கள் தீர்ப்பாயம் தெரிவித்தது.

இந்தப் போரின்போது தமிழ் இன மக்கள் கொல்லப் படுவார்கள் என்பதை அறிந்தே இலங்கைக்கு இந்த மூன்று நாடுகளும் உதவியுள்ளன. அந்தத் தீர்ப்பில் படுகொலை செய்யப்பட்ட வர்கள் ஈழத் தமிழர்கள் என்றும் அவர்கள் இலங்கையின் தேசிய இனத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தீர்ப்பு சர்வதேச அளவில் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பெரிய அவமானமாகும்.

தேசிய இனங்கள் பிரிந்து போவதற்கான உரிமையை ஐ.நா. வழங்குகிறது.

அதன் படி, ஈழத் தமிழர்கள் எதிர் காலத்தில் தனி நாடு அமைப்பதற்கான உரிமைக்கு மக்கள் தீர்ப்பாயம் அளித்துள்ள இந்தத் தீர்ப்பு முக்கியமானதாக இருக் கும் என்று நாம் கருதுகிறோம் - என்றார். (வ)

## எண்ணெய்க் குதங்களை மீளப்பெறுவதற்கு முயற்சி

இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட திருகோணமலையில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் மிக்க 99 எண்ணெய் சேகரிப்புக் குதங்களை குதங்களையும் மீண்டும் பெற்றுக்கொள்வதற் கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் இந்த எண்ணெய் சேகரிப்புக் குதங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி அதிருப்தி வெளியிட்டுள்ளார். எனவே குறித்த எண்ணெய் சேகரிப்புக் குதங்களை இந்திய நிறுவனத்திடமிருந்து மீட்டெடுத்து அரசு சொத்தாக மாற்றுவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில்தெரிவித்துள்ளார்.

"திருகோணமலையில் அமைந்துள்ள எமது எண்ணெய் சேகரிப்புக் குதங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை மீண்டும் அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான பேச்சுக்களில் நாம் ஈடுபட்டுள்ளோம்." என.2014க்கான வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது நிதி அமைச்சர் என்ற வகையில் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது 2002 இல் திருகோணமலையில் உள்ள குறித்த 99 எண்ணெய் சேகரிப்புக் குதங்கள் இந்திய நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ங-5)

## ஈரானிய கடற்படை மீது தாக்குதல்

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் ஈரானியக் கடற்படை கப்பல் ஒன்றில் பணியாற்றும் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் மீது கல்வீசி தாக்குதல் நடத்தப்பட்டது.

ஈரானியக் கடற்படையினர் நடந்து சென்று கொண்டிருந்த போது, நேற்றுமுன்தினம் மாலை புறக்கோட்டை கான் மணிக்கூட்டுக் கோபுரம் அருகே வைத்து வீதியோரத் தில் நின்ற ஒருவர் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளார். இதில் ஈரானியக் கடற்படை வீரர் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

# ஜனாதிபதியின் படப்பிடிப்பாளர் டுபாயில் திருடினார் கமெராவை

### *மாட்டியதால் பதவியும் பறிபோனது*

யாழ்ப்பாணம், டிசெ. 22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சென்றிருந்த அவரது உத்தியோகபூர்வ ஒளிப்படப் பிடிப்பாளர், டுபாய் சர்வதேச விமானநிலையத்தில் 3 லட்சம் ரூபா பெறுமதியான சீ.சீ.ரிவி (கண்காணிப்பு காணொலி) கருவியைகளவாடமுற்பட்டபோது அதிகாரிகளிடம் சிக்கி யுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

நெல்சன் மண்டேலாவின் இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் பங்கெடுப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் தென்னாபிரிக்காவுக்குச் சென்றிருந்தார். அதன் பின்னர் கென்யாவுக்குச் சென்று அங்கிருந்து, டுபாய் சர்வதேச விமான நிலையம் ஊடாக கொழும்பை வந்தடைந்தார்.

இதன்போது டுபாய் விமான நிலையத்தில் ஜனாதிபதி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த வேளையில், அவரது ஊடகக் குழுவில் இடம்பெற்றிருந்த ஒளிப்படப் பிடிப்பாளர் விமான நிலையத்திலுள்ள சுங்கத் தீர்வையற்ற வர்த்தக நிலையத்துக் சென்றிருக்கின்றார். அங்கிருந்த 2 ஆயிரத்து 325 டொலர் (3 இலட்சம் ரூபா) பெறுமதியான, கண்காணிப்பு காணொலிப்பதிவு கருவியை திருடியுள்ளார்.

அவர் அதனை தனது பையில் மறைத்துக் கொண்டு வேகமாக வெளியே செல்லமுயன்ற போது, அதனை கண்காணிப்பு காணொலிக் கருவி ஊடாக அவதானித்த பாதுகாப்பு அதிகாரிகள் அவரைத் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

தொடர்ந்து, நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, ஜனாதிபதியின் ஊடகக் குழுவில் இடம் பெற்றிருந்தவர் என்று விபரம் தெரிய வந்ததை அடுத்தே, குறிப்பிட்ட ஒளிப்படப்பிடிப்பாளரை டுபாய் அதிகாரிகள் விடுவித்தனர்.

நாம் இலங்கை ஜனாதிபதிக்கு உயர்ந்த மதிப்பளிப்பதால் தான், விடுவிக்கிறோம் என்றும், இல்லாவிட்டால் சிறையில் அடைத்திருப்போம் 'என்றும் டுபாய் பாதுகாப்பு அதிகாரிகள் அவரை எச்சரித்துள்ளனர். கொழும்பு திரும்பியதும் குறிப்பிட்ட ஒளிப் படப்பிடிப்பாளர் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெலாரஸ் சென்றிருந்த போது, அவருடன் சென்றிருந்த ஊடகப் பணிப்பாளர் ஒருவர், அங்குள்ள விடுதியில் இருந்து போர்வை ஒன்றைத் திருடிக் கொண்டு வந்து விட்டதாக, வெளிவிவகார அமைச்சுக்கு இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக முறைப்பாடு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## தென் சூடானுக்கு செல்லாதீர் இலங்கை அரசு அறிவிப்பு

தென் சூடானில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக மறுஅறிவித்த வரை இலங்கை பணியாளர்களை அங்கு அனுப்புவதை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக இலங்கை வெளிநாட்டுவேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

தென்சூடானில் இலங்கை பணியாளர்கள் 70 தொடக்கம் 75 பேர் வரையில் பணியாற்றுவதாகவும் நெருக்கடி நிலை தொடருமானால் அவர்களை நாட்டுக்கு திரும்ப அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் பணியகம் அறிவித்துள்ளது. (ஐ)

## புலமைப்பரிசில் பரீட்சை நிறுத்தம்: விசேட அறிக்கை வெளியிட முடிவு

### *அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நடவடிக்கை*

2016ஆம் ஆண்டில் இருந்து தரம் 5 புலைமைப் பரிசில் பரீட்சையை நிறுத்தவுள்ளதாக கல்வி அமைச்சு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

கல்வி அமைச்சின் இந்த தீர்மானத்திற்கு தாம் இணங்குவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் நவீந்த சொய்சா தெரிவித்தார்.

எனினும், கல்வி அமைச்சோ கல்வி அமைச்சரோ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்க அதிகாரிகளிடம் எந்தவொரு கலந்துரையாடலையும் மேற்கொள்ள வில்லை என அவர் குறிப்பிட் டார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நிறுத்தம் குறித்த கல்வி அமைச்சின் தீர்மானம் தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எதிர் தீர்மானித்துள்ளதாக நவீந்த சொய்சா மேலும் தெரிவித்தார்.

## மின் விநியோகம்



வடமராட்சி, டிசெ. 23

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய பிரதேசங்களுக்கான மின் விநியோகம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பகுதிகளுக்கான மின் விநியோகப் பணிகள் கடந்த வருட பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவை நிறைவடைந்ததை ஆடுத்து இன்று மின்விநியோகம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் முதற்கட்டமாக 20 வீடுகளுக்கு மின் இணைகப்பு வழங்கப்படவுள்ளது. எஞ்சிய வீடுகளுக்கு மிக விரைவில் மின் இணைப்பு வழங்கப் படும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-400-8)

## ரோந்து சென்ற சிப்பாய் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், டிசெ.23
சைக்கிளில் ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் மீது பின்புறமாக வேகமாகச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியது சிப்பாயும், மோட்டார் சைக்கிளில் வந்தவரும் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க் கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மல்லாகம் கே.கே. எஸ்.வீதியில் இடம்பெற்றது.

ரோந்து நடவடிக்கைக்காக சைக்கிளில் சென்று கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் மீது பின்னால் எதிர்பாராத விதமாக மோட்டார் சைக்கிளில் வந்த நபர் மோதியதில் இருவரும் வீதியில் விழுந்து படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த யாழ். சிறைச் சாலைக் காவலர் எஸ்.சர்வானந்தம் (வயது -34) என்பவரும் இராணுவச் சிப்பாயான எம்.தங்கொடகெதர (வயது-21) என்பவரும் சிகிச் சைக்காக தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். (வ-14-86)

## புதிய வடிவமைப்புடன் கொடுப்பனவு அட்டை

*உதவிப் பணம் பெறும் முதியோருக்கு*

யாழ்ப்பாணம், டிசெ.23
ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறும் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு புதிய வடிவிலான கொடுப்பனவு அட்டைகள் ஜனவரி மாதம் வழங்கப்படவுள்ளன. சமூக சேவைகள் அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள புதிய அட்டைகள் மூலம் ஜனவரி மாதம் தொடக்கம் கொடுப்பனவுகளைப் பெறுவதற்காக முதியோருக்கு அந்தந்தப் பிரதேச செயலகங் களால் விநியோகிக்கப்படவுள்ளது.

இதேவேளை பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரில் 70 வயதை அடைந்த மேலும் ஒரு தொகுதியினர் இந்தத் திட்டத்தில் இணைக்கப்படவுள்ளனர். அதற்கான விண்ணப்பப் படிவமும் அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறும் அனைத்து 70 வயதுக்கு மேற்பட்டோரின் விவரங்கள் கோரப்பட்டு விண்ணப்பப் படிவங்கள் அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (வ-9)

## சிதம்பரபுரத்தில் நடமாடும் சேவை

*எதிர்வரும் 27 ஆம் திகதி*

வவுனியா,டிசெ.23
வவுனியா சிதம்பரபுரத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடமாடும் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் ஆசிகுளம், சமணங்குளம் ஆகிய கிராம சேவையாளர்கள் பிரிவுகளுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிதம்பரபுரம் நாகராசா வித்தியாலய மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இடம்பெறவுள்ளது என அந்தப் பகுதி சிவில் பாதுகாப்பு குழு அறிவித்துள்ளது. இந்த நடமாடும் சேவையில் திருமணப் பதிவு, பிறப்பு, இறப்புப் பதிவு மற்றும் அடையாள அட்டை புதுப்பித்தல், விண்ணப்பித்தல் ஆகிய நடவடிக்கைகள் இடம்பெறுமெனத் தெரிய வருகின்றது. (க-421)

## ஒரே சூலில் 3 பெண் குழந்தைகள் யாழ்.ஆஸ்பத்திரியில் சுகப் பிரசவம்





*யாழ்ப்பாணம், டிசெ.23*
*அச்சுவேலி பத்தைமேனியைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.44 மணிக்கு ஒரே சூலில் மூன்று பெண் குழந்தைகளைப் பிரசவித்தார்.*

*யாழ்.போதனா வைத்திய சாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்த சந்திரலிங்கம் சுஜாத்தா (வயது-40) என்ற பெண்ணே இந்தக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.*

*சுஜாதாவுக்கு சுகப் பிரவசம் நடந்து தாயும் குழந்தைகளும் நலமாக இருக்கிறார்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.*

*இந்தத் தம்பதியருக்கு ஏற்கனவே ஓர் ஆண் பிள்ளை யும் ஒரு பெண் பிள்ளையும் உள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.*

*இதேவேளை, கணவர் கூலி வேலைக்குச் செல்பவர் என்பதால் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு சிரமம் இருப்பதாகவும் பால்மா மற்றும் உதவிகளை தொண்டு நிறுவனங்கள் மற்றும் நல்லெண்ணம்கொண்டவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். (ஓ-7)*



பிரபல கவிஞரும் யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், ஆஸ்திரேலியாவில், சிட்னியில் இயங்கும் யாழ்.இந்து பழைய மாணவர் சங்கத்தினரால் மகுடம் சூட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (அ)

## யன்னல் உடைத்து 9 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.23
ஏழாலை வடக்கு மாரியப்புலம் பகுதியில் உள்ள வீடொன்றில் யன்னல் உடைத்து 9 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் 10 ஆயிரம் ரூபா பணமும் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த வீட்டில் உள்ளவர்கள் உறக்கத்தில் இருந்தவேளை வீட்டில் உள்நுழைந்த திருடர்கள் யன்னலை உடைத்து அங்கிருந்த நகைகள் மற்றும் பணத்தையும் திருடியுள்ளனர்.

இதன்போது 9 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் 10 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

சத்தம் கேட்டு வீட்டில் உள்ளவர்கள் விழித்துக் கொண்டதை அவதானித்த திருடர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இதன்போது கைதவறி கீழே விழுந்த சிறு சிறு நகைகளை வீட்டின் முற்றத்தில் இருந்து வீட்டார் மீட்டுள்ளனர்.

அத்துடன் வீட்டின் அருகில் உள்ள தோட்டக் காணியில் மதுபானப் போத்தல்களும் கொத்துரொட்டிப் பொதிகளும் இருந்ததையும் வீட்டிலுள்ளோர் அவதானித்துள்ளனர்.

"–"

**நகை கொள்ளையடித்துச் சென்றபோது கைதவறி கீழே விழுந்த சிறு சிறு நகைகளை வீட்டின் முற்றத்தில் இருந்து வீட்டார் மீட்டுள்ளனர்.**


இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-14-86)

## ஆழிப்பேரலை இடரை நினைவு கூரும் நிகழ்வு

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் காவு கொள்ளப்பட்டவர்களை நினைவு கூர்ந்து சுடரேற்றும் நிகழ்வை வவுனியா மறவன்குளம் பகுதியில் விடிவெள்ளி விளையாட்டுக்கழகம், மறவன்குளம் நற்பணி இளைஞர் மன்றம் என்பன இணைந்து நடத்தவுள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் ஆழிப்பேரலையால் இறந்தவர்களின் நினைவு தினம் பொ.தனுஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது. இங்கு 300 இற்கும் மேற்பட்ட சுடர்கள் ஏற்றிவைக்கப்படவுள்ளன.


இந்த நிகழ்வில் ஆழிப் பேரலையின்போது இறந்தவர்களின் உறவுகள், விடிவெள்ளி விளையாட்டுக்கழக அங்கத்தவர்கள், மறவன்குளம் நற்பணி இளைஞர்மன்ற அங்கத்தவர்கள், பொலிஸார், இராணுவத்தினர், மதகுருமார், கிராம அலுவலர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (க-402)




"–"

**இங்கு 300 இற்கும் மேற்பட்ட சுடர்கள் ஏற்றிவைக்கப் படவுள்ளன.**

## நல்லாயன் அரங்கு திறப்பு





தென்மராட்சி, டிசெ.23
அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபையின் நுணாவில் தேவாலய வளாகத்தில் பங்கு மக்களால் நிர்மாணிக்கப்பட்ட 'நல்லாயன் அரங்கு' நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப் பட்டது.

தேவாலய பங்குத்தந்தை போதகர் வண. தேவராஜா அடிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு அரங்கினைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபைத் [illegible]லவர் வண.ஈனோ புனிதராஜா, செயலாளர் வண.தேவதாஸ் அடிகள், யாழ்.பிராந்தியத் தலைவர் வண.ராஜ்குமார், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (வ-9)

## பா.ஜ.க. விரைவில் பாம்பனில் போராட்டம்

*ஈழத்தமிழருக்கு வாழ்வுரிமைகோரி*



சென்னை, டிசெ.23
இலங்கைத் தமிழர்களுக்கு வாழ்வுரிமை பெற்றுத்தரவும் தமிழக மீனவர்களுக்கு நிலையான பாதுகாப்பு வழங்கக் கோரியும் பாம்பனில் போராட்டம் நடத்த இருப்பதாக பாரதிய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவர் பொன்.ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இலங்கைத் தமிழர்களுக்கு அந்தநாட்டு அரசு வாழ்வுரிமை வழங்க வேண்டும். அதனைத் பெற்றுத்தர இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டு வருகின்றனர். தமிழக மீனவர்களுக்கு நிலையான பாதுகாப்பு வழங்க மத்திய அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி இராமநாதபுரம் மாவட்டம் பாம்பனில் கடல்தாமரைப் போராட்டம் நடைபெறவுள்ளது. இதில் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் கலந்து கொள்வார் - என்றார்.

## உளநல விருத்திக்கான ஆன்மிகப் பயிற்சி




யாழ்ப்பாணம்.டிசெ.23
யாழ்.சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் இளைஞர்கள், சிறுவர்களது உளநல விருத்திக்கான ஆன்மிக பயிற்சி முகாம் கடந்த வாரம் காரை நகரில் நடத்தப்பட்டது.

யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத் சைத்தன்ய தலைமையில் நடத்தப்பட்ட ஒரு வாரகால பயிற்சி முகாமில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இந்தப் பயிற்சி முகாமில் "நம்மால் முடியும்" எனும் தலைப்பில் ஆலோசனைக் கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன் செய்முறை ரீதியான விளக்கமும் வழங்கப்பட்டன. (வ-14)

## மரங்களை எவரும் வெட்ட முடியாது

*துணுக்காய்ப் பிரதேச செயலகம் அறிவிப்பு*



அக்கராயன், டிசெ.23
துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் மரங்களை வெட்ட அனுமதி வழங்க முடியாதென துணுக்காய் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

வீட்டுத் திட்டத்துக்கு மரங்களை வெட்ட முடியாது எனவும் ஒட்டுசுட்டானில் உள்ள மரக்காலையிலேயே மரங்களை வாங்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் துணுக்காய் பிரதேச செயலகம் அறிவித்தல் விடுத்துள்ள போதிலும் களவாக மரங்களை வெட்டும் சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. மரங்களை அழித்தல் சூழலி யல்ரீதியாகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தொடர் பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண் டும் என சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-18)

## உணவு தவிர்ப்பில் குதித்தார் முருகன்

இந்தியாவின் முன்னாள் பிர தமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் சிறையில் அடைக்கப் பட்டுள்ள முருகன், தனது மனைவி நளினியைச் சந் திக்க விடவில்லை என்று கூறி, உணவு தவிர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டார். நீதிமன்ற உத்தரவுப்படி 15 நாள்களுக்கு ஒருமுறை நளினியை முரு கன் சந்திக்க சிறை நிர்வாகம் ஏற்பாடு செய்யும்.

அந்த வகையில் நேற்று முன் தினம் நளினி அடைக்கப் பட்டுள்ள பெண்கள் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட முருகன், நளினியைச் சந்திக்க விடவில்லை. பேசக்கூட முடியவில்லை. சந்திப்பு என்ற பெயரளவுக்கு என்னை பெண் கள் சிறைக்கு அழைத்துச் சென்று 30 நிமிடம் கழித்து திரும்ப அழைத்து வந்துவிட்டனர். எனவே, முறைப்படி எங்களது சந்திப்பு நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். அவரிடம் சிறை அதிகாரிகள் பேச்சு நடத்தினர்.

CHEMISTRY
S.VASU
A/L DAY CLASS
BATCH - I
Mon to Fri - 5.00 - 6.00 pm
BATCH - II
Sat, Sun 9.00 - 10.30 am
ஆரம்பம் : 23.12.2013 ( Mon - 5pm)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்.நகர்

## மரண அறிவித்தல்



### திருமதி சறோஜாதேவிஅம்மா மார்க்கண்டு ஐயா

அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜா தேவி அம்மா மார்க்கண்டு ஐயா நேற்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை கால மாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு ஐயாவின் (பிரதம குரு சோலை அம்மன் ஆலயம், சாவகச்சேரி) அன்பு மனைவியும், காலஞ் சென்றவர் களான நடராஜா ஐயா-மீனாட்சி சுந்தரம் அம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற சிவத்திரு மனோகரன் ஐயா மற்றும் சிவத்திரு விஜயரட்ணம் ஐயா, சிவஸ்ரீ சிவநேசக் குருக்கள் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23/12/2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணிக்கு. நடைபெற்று பூதவுடல் மு.ப.10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


"கஜானஸ்தான்" அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ கு. மங்களேஸ்வரசர்மா (மூர்த்தி ஐயா)

(முன்னாள் அர்ச்சகர், மட்டுவில் வேரற்கேணி கந்தசாமி கோயில், விடத்தல்தீவு பிள்ளையார் கோயில், கோப்பாய் முத்துமாரி அம்மன் கோயில், நல்லூர் வாலையம்மன் கோயில்)



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ கு. மங்களேஸ்வரசர்மா நேற்று (22.12.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் பிரம்மஸ்ரீ இ.குமாரசாமிக் குருக்கள் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், இலட்சுமியின் அன்புக் கணவரும், ராஜினியின் (விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ராஜகோபாலசர்மா, பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வரசர்மா, காலஞ்சென்ற நித்தியாநந்தசர்மா, பராசக்தி, ஜெகதீஸ்வரி, கமலாம்பிகை, வசந்தராணி ஆகியோரின் அன்புச்சகோதரரும், இணுவில் தாணு, மகாதேவக்குருக்கள் (தர்மசாஸ்தாகுருகுலம்) வாசுதேவக்குருக்கள், சுப்பிரமணியக்குருக்கள் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23/12/2013) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

224/6, பத்திரகாளி கோயில் வீதி,
பிறவுன் றோட், யாழ்ப்பாணம்.

தகவல் : ம.ராஜினி


## 31 ஆம் நாள் 1 ஆம் ஆண்டு

தோற்றம் 06 . 10 . 1940



மறைவு 23 . 11 . 2013

தோற்றம் 20 . 01 . 1977



மறைவு 20 . 12 . 2012

இராசலிங்கம் சத்தியலீலா (மலர்)

இராசலிங்கம் காந்தலிங்கம் (காந்தன்) B.A Dip

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா முன்பள்ளி முன்னாள் ஆசிரியர்

23.12.2013

யா/ கொக்குவில் ஞானபண்டிதா வித்தியசாலை முன்னாள் ஆசிரியர்

அன்னைக்கும், சகோதரருக்கும் ஆசைச்செல்வமடா
தோழமைக்கு தோழனடா தம்பி நீ
மறைவின் ஒராண்டுக்கு முன் அரவணைத்தாயோ அன்னையை
உற்ற துணையோடு நீ மாறாத்துயரோடு நாம்

இன்று (23.12.2013) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காந்தலிங்கபவனம்
கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய கல்வித்துறைசார் விரிவுரையாளர் **செல்வி ராஜினி மங்களேஸ்வரசர்மா** அவர்களின் பாசமிகு தந்தையார்.

### குமாரசாமிஐயர் மங்களேஸ்வரசர்மா

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியைக்கேட்டு ஆழ்ந்த துயர் கொள்வதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பிறவுண் வீதி, கொக்குவில்.

திறந்த பல்கலைக்கழக
யாழ்.பிராந்திய நிலையச்சமூகத்தினர்.


# நேர அட்டவணை மூலம் பஸ் சேவையை நடத்துக

### சாவகச்சேரி சங்கானை மார்க்கத்துக்காக

சாவகச்சேரியிலிருந்து சங்கானைக்குச் செல்லும் 775 மார்க் கத்தில் இ.போ.சபையும் தனி யார் சிற்றூர்தி சேவைகள் சங்க மும் நேர அட்டவணை தயாரித்து வாகனங்களை சேவையில் ஈடுபடுத்துமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இ.போ.ச. பஸ் புறப்படும் நேரத்துக்கு 10 நிமிடங்களுக்கு முன்பாக தனியார் மினிபஸ் சேவையில் ஈடுபடுகிறது.

ஒரேயொருசேவைநடைபெறும் 775 மார்க்கத்தில் அந்த சேவைக்காக வீதிக்கு வரும் பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்த பஸ்கள் ஒன்றன் பின் ஒன்றாக வருவதால் மக்கள் எந்த பஸ்ஸில் பயணிப்பது என்று குழப்பமடைகின்றனர். இந்த நிலையில் குறித்த மார்க்கத்தில் பயணிகள் நலன் கருதி இருபகுதியினரும் பயண சேவைக்கான அட்டவணையைத் தயாரித்து சேவைகளை நடத்தினால் பயணிகள் பயனடைவதுடன் இரு பகுதியினரும் போதுமான வருமானத்தைப் பெறமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)



யாழ்.ரயில் நிலையத்தைப் புதிதாக நிர்மாணிப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய சேதமடைந்திருந்த பழைய ரயில் நிலையக் கட்டடத்தை இடித்து அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (வ-135)

# தென்மராட்சி வயல்களில் கைவிடப்படுமா நெற்செய்கை?

### உரிய மழை வீழ்ச்சி இன்மையால்

தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை வயல்களில் நெற்பயிர்களில் கதிர்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. பெரும்பாலான வயல்களில் நீரின்றி பயிர்கள் வளராத நிலை காணப்படுவதால் இந்த வயல்களில் கதிர்கள் வருவது சந்தேகம் என்றும் பயிர்கள் முற்றாத நிலையில் உள்ளதால் வெளிவரும் கதிர்கள் பெரும்பாலும் ஓரிரு காம்புகள் மட்டும் வெளிவரலாம். இதனால் உரிய விளைச்சல் கிடைக்காமல் போகலாம் என்று கூறப்பட்டது.

இதேவேளை வயல்களில் நீரில்லாததால் வாங்கிய உரங்கள் பயிர்களின் வளர்ச்சிக்கு போட முடியாத நிலையில் உள்ளதாகவும் மார்கழி மாதத்தில் மழையைபெரிதாக எதிர்பார்க்க முடியாததால் அநேகமாக இந்த நெல் விதைத்த வயல்களில் 70 வீதமானவற்றில் மாடுகளையே கட்ட வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

தாழ்வான பகுதிகளில் ஆரம்ப மழையின் போது விதைப்புச் செய்தவர்கள் தவிர ஏனைய நெற்செய்கையாளர்கள் வயல்களைக் கவனிக்காமல் கைவிடலாம் என்றும் கவலை தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# கைவிடப்பட்ட கோவா செய்கை

### உள்ளூர் சந்தைகளில் விலை வீழ்ச்சி ஏற்பட்டதால்

வலி.வடக்கு, டிசெ.23

யாழ்.மாவட்டத்தில் கோவா செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பயிர்களை அறுவடை செய்யாது தோட்டத்திலேயே அவற்றைக் கைவிட்டுள்ளார்கள்.



பருவம் தப்பிய மழை உள்ளூர் உற்பத்தி அதிகரித்தமை மற்றும் தென்னிலங்கையில் இருந்து அதிகளவான கோவா உள்ளூர் சந்தைகளுக்குக் கொண்டு வரப்பட்டமை போன்ற காரணங்களினால் கோவாவின் விலை கடும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

சுமார் எழுபது கிலோ நிறையுடைய கோவாவை யாழ்ப்பாணச் சந்தைகளில் முந்நூறு ரூபாவுக்கும் குறைந்த விலைக்கே வியாபாரிகளுக்கு கொடுக்கவேண்டிய நிலைமை காணப்படுகிறது.

அதேசமயம் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்தாலும் அங்கும் மிகவும்குறைந்த விலைக்கே வியாபாரிகளிடம் விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வியாபாரிகள் சந்தையில் சில்லறை விலைக்கு இரு மடங்கு, மூன்று மடங்கு விலையில் கோவாவை விற்பனை செய்கின்ற போதிலும் சந்தைகளில் விவசாயிகளிடம் கொள்வனவு செய்வது கிலோவுக்கு ஏழு ரூபா முதல் ஒன்பது ரூபா வரையில்தான்.

இத்தகைய நிலையில் பல நூற்றுக் கணக்கான பரப்பில் கோவா செய்கையில் ஈடு பட்ட புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், இணுவில், மல்லாகம், ஏழாலைப் பகுதி விவசாயிகள் அவற்றை அறுவடை செய்யாது தோட்டத்திலேயே கைவிட்டுள்ளார்கள். (ஒ-86)

# பட்டம் விட்ட சிறுவனின் சடலம் கிணற்றில் மீட்பு

### புலோலி மேற்கில் பரிதாபம்

பருத்தித்துறை,டிசெ.23

பட்டம் ஏற்றச் சென்ற சிறுவன் தோட்டக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை புலோலி மேற்குப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் புலோலி மேற்கைச் சேர்ந்த தம்பசிட்டி வித்தியாலயத்தில் தரம் -4 இல் கல்வி கற்கும் சிவலிங்கம் - சங்கீதன் (வயது -10) என்ற மாணவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் இந்தச்சிறுவன் தோட்டக்காணிக்குள்பட்டம் ஏற்றச் சென்றுள்ளார். வெகு நேரமாகியும் மகன் வீடு திரும்பாததையிட்டு பெற்றோர் அவனைத் தேடிச் சென்றுள்ளனர்.

இதன் போது பட்டத்தின் நூல் தோட்டத்திற்குள் இருப்பதாகக் கண்டுள்ளனர். ஆயினும் சிறுவனை அங்கு காண வில்லை. பட்டத்தின் நூல் செல்லும் பாதையில் சென்ற போது அது அங்கிருந்த பாதுகாப்பு கட்டு இல்லாத கிணற்றுக்குள் சென்றது. உள்ளே பார்த்த போது சிறுவன் சடலமாகக் காணப்பட்டான். அயலவர்களின் உதவியுடன் கிணற்றுக்குள் கிடந்த சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுபருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் இரவு 7 மணியளவில் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இறப்பு விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு, அதன் பின்னர் சடலத்தைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு பணித்தார். (த-8-422)




சுவிற்சர்லாந்தின் குடியமர்வுப் பிரிவின் உயர் அதிகாரிகளான கிறிஸ்ரினா லொப்பெஸ் மற்றும் டேவிட் விக்னாற்றி ஆகியோரும் கொழும்பில் அந்தநாட்டின் தூதுவர் அலுவலகத்தைச் சேர்ந்தவர்களும் கடந்த வாரம் உதயன் அலுவலகத்துக்கு வருகை தந்தனர். வடக்கின் களநிலைமைகள் மற்றும் உதயன் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள், மக்களின் எதிர்பார்ப்புகள் குறித்தும் பிரதம ஆசிரியருடன் கலந்துரையாடினர். (அ - 10)

# முகமாலை வரையில் தண்டவாளம்

தென்மராட்சி, டிசெ.23

பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் பாதை அமைக்கும் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன.

பளையிலிருந்து எழுதுமட்டுவாழ் வரை கொங்கிறீற் சிலிப்பர் கட்டைகள் வைக்கப்பட்டு முகமாலை வரை தண்டவாளம் பொருத்தப்பட்டுள்ளது.

கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி ஆகிய இடங்களில் ரயில் நிலையக் கட்டடங்களை நிர்மாணப் பணிகளும் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

எழுதுமட்டுவாழ், மிருசுவில், மீசாலை, சங்கத்தானை, தச்சன்தோப்பு ஆகிய இடங்களிலும் கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி ரயில் நிலையங்களில் ரயில் தரிக்கக் கூடிய மேடைகள் அமைப்பதற்கான கொங்கிறீற் வேலைகள் ஒரு பகுதி முடிவடைந்த போதிலும் மேடைகள் அமைக்கப்படாமல் உள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணம் வரை ரயில் பாதைக்கான வீதி அமைக்கும் பணிகள் பெரும்பாலும் முடிவடையும் நிலையில் உள்ளன. (ஒ-9)

# வலி.மேற்கு மயானங்கள் விரைவில் புனரமைக்கப்படும்

### பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஜங்கரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மயானங்கள் விரைவில் மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக சங்கானை கரைச்சி மயானத்தில் 5 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் எரிகொட்டகை, மயான மண்டபம் மற்றும் உள்ளக வீதி என்பன 2014 இல் மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இதற்கான நிதி ஒதுக்கீட்டை மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் அபிவிருத்தி பிரிவு விரைவில் மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஜங்கரன் தெரிவித்தார்.

புனித பூமிகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வலி.மேற்கு பிரதேச சபைகளின் நிர்வாக பிரிவுக்குட்பட்ட 18 மயானங்கள் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

எமது பரிபாலனத்திற்குட்பட்ட வீதிகள், மயானங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றோம்.

2014 இல் மயானங்களை ஒரு வலைப்பின்னல் திட்டத்தின் கீழ்கொண்டுவரவுள்ளோம்.

எமது சபையின் கீழ் 18 மயானங்கள் அராலி, வட்டுக்கோட்டை, சுழிபுரம், சங்கானை ஆகிய உப அலுவலக பிரிவுக்குள் உள்ளன.

2014 இல் சங்கானை கரைச்சி மயானம் நவீன தரம் கொண்டதாக புனரமைக்கப்படும்.

அடுத்தகட்டத்தில்வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானம் மீள் புனரமைப்பு செய்யப்படும்.

புனரமைப்புச் செய்யப்படும் போது சுற்றுமதில், ஜங்கோண மண்டபம், எரிகொட்டகை, மயானக் கிணறு மற்றும் சிறு ஆலயம் உள்ளக வீதி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும். தொடர்ந்து ஏனைய மயானப் புனரமைப்பு பணிகளும் படிப்படியாக முன்னெடுக்கப்படும். வடமாகாண சபை மயானங்களின் மீள் புனரமைப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதில் வடக்கு முதலமைச்சரின் கவனத் துக்கு கொண்டு வந்துள்ளேன். இதேவேளை தென் பகுதி களில் உள்ளூர் சபைகளுக்கு கூடுதல் வருமானம் தரும் துறைகளில் ஒன்றாக மயானங்களே உள்ளன. (வ-41)

## பதவி விலகினார் ஜெயந்தி நடராஜன்


புதுடில்லி, டிசெ.23

இந்திய மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சரான தமிழகத்தைச் சேர்ந்த ஜெயந்தி நடராஜன் தமது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

மத்திய அமைச்சரவையில் தனிப்பொறுப்புடன் கூடிய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் பதவியை வகித்து வந்தார் ஜெயந்தி நடராஜன். அவர் சில நாள்களுக்கு முன்னர் தனது பதவி விலகல் கடிதத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு அனுப்பியிருந்தார். அவரின் பதவிவிலகலை ஏற்றுக் கொண்ட பிரதமர் அந்தக் கடிதத்தை இந்தியஜனாதிபதிக்கும் அனுப்பிவைத்திருந்தார். நேற்று ஜெயந்தி நடராஜனின் பதவி விலகலை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அடுத்தாண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான கட்சிப் பணிகளை மேற்கொள்ளுமாறு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி கேட்டுக் கொண்டதன் பேரிலேயே ஜெயந்தி நடராஜன் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

ஜெயந்தியைத் தொடர்ந்து. கட்சிப் பணிக்கு திரும்புவதற்காக மேலும் சில மத்திய அமைச்சர்களும் பதவி விலகக் கூடும் என்று கூறப்படுகிறது. இதுவரை ஜெயந்தி நடராஜன் வசம் இருந்த சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறைஅமைச்சக பொறுப் புகள். பெற்றோலியத் துறை அமைச்சர் வீரப்ப மொய்லி வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (ற)



*இந்தியாவில் முற்றுமுழுதாகத் தயாரிக்கப்பட்ட தேஜாஸ் போர் விமானம் வெற்றிகரமான சோதனைப் பறப்பின் பின்னர் விமானியுடன்.*

# மோடி அலை வெறும் பிரமை

## *தயாநிதி மாறன் கூறுகின்றார்*

சென்னை, டிசெ.23

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தல்களின் பின்னர் பா.ஜ.கவின் கை ஓங்கிவிட்டது என்று கூறுவதெல்லாம் வெறும் பிரமையே என்று தெரிவித்துள்ளார் தயாநிதி மாறன்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பா.ஜ.கவின் கை ஓங்கி இருக்கிறது. மோடி அலை வீசுகிறது என்ற ஊடகங்களின் பரப்புரை வெறும் பிரமை மட்டுமே. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு இருக்காது. தமிழகத்துக்கு எந்த நன்மையும் கிடைக்காது. தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அ.தி.மு.க. மக்களுக்காக எந்தவொரு திட்டத்தையும் செயற்படுத்தவில்லை. மாறாக மின் கட்டணம், பஸ் கட்டணம், பால் விலையை உயர்த்தியுள்ளது. மக்களுக்கான திட்டங்களைச் செயற்படுத்துவது தி.மு.க. மட்டுமே என்பதை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மக்களைவத் தேர்தல்களில் தி.மு.கவுக்கு ஆதரவு கொடுத்த போதெல்லாம் தமிழகத்துக்கு ஏராளமான திட்டங்கள் கிடைத்துள்ளன." என்று தெரிவித்துள்ளார். (ற)

# இந்தியாவைப் பார்த்து கற்க வேண்டும் அமெ.

## *வெளியுறவுத் துறை செயலாளர் சுஜாதா சிங் கூறுகின்றார்*

புதுடில்லி, டிசெ.23

வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளை நடத்தும் விடயத்தில் இந்தியாவைப் பார்த்து அமெரிக்கா பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் சுஜாதா சிங்.


இந்திய பெண் துணை தூதர் தேவயானி அவமதிக்கப்பட்ட விவகாரத்தில் இந்திய மற்றும் அமெரிக்க நாட்டு அரசுகளுக்கு இடையேயான கருத்து மோதல் தொடர்ந்து நீடிக்கிறது.

இந்த நிலையில் புதுடில்லியில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே வெளியுறவுத் துறை செயலாளர் சுஜாதா சிங், "தூதரக அதிகாரிகளைநடத்துவது பற்றி இந்தியாவிடமிருந்து அமெரிக்காபாடம்கற்றுக்கொள்ளவேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, குறித்த விவகாரத்தில் மன்னிப்புக் கேட்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றுதிட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது அமெரிக்கா. வீட்டுப் பெண் பணியாளருக்கு விஸா பெற்றதில் தேவயானி பொய்யான ஆவணங்களைத் தாக்கல்செய்துள்ளமையை அமெரிக்கச் சட்டங்களின்படி அலட்சியப் படுத்த முடியாது என்று அந்த நாடு தெரிவித்துள்ளது.

அதனையடுத்து தேவயானியை பாதுகாப்பாக திரும்ப கொண்டு வருவது குறித்து மாநிலங்களவையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் இந்திய அரசுக்குப் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (ற)

# ஓராண்டு நினைவலைகள்



யாழ். புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் கலாநிதி**

**சரவணமுத்து சிவலிங்கம்**

(கமநல சேவை உத்தியோகத்தர், செல்லம்ஸ் இன்டஸ்ரீஸ், எழில் தொழிலகம், கல்யாண மாலை டார்வின் லங்கா உரிமையாளர்)

அன்னை மடியில் 16.02.1951 இறைவன் மடியில் 03.01.2013

என் ஆருயிர் அப்பாவே நீங்கள் ஆத்மாவாகி ஆண்டொன்று ஆனதே. அன்புக்கும் பாசத்துக்கும் வரைவிலக்கணம் நீங்கள் அப்பா. எங்களுடன் இதயபூர்வமாக உயிருள்ள வரை வாழ்ந்தீர்களே அப்பா. எம் வாழ்வில் முதல் தோல்வி உங்களை நாம் இழந்து தவிக்கும் தவிப்புத்தான் அப்பா. உள்ளத்தில் நல்ல உள்ளம் உங்களைக் காலத்தின் விதி முடித்ததென்று காலனவன் கவர்ந்தபோதும் நாம் மறந்துதான் போய்விடுவோமோ அப்பா. நீங்கள் மீளாத்துயில் கொண்டு ஓராண்டு கடந்தாலும். உங்கள் திருவுருவம் நம் கண்முன்னே ஓவியமாய் வியாபித்து நிற்குதப்பா. நாம் செய்யும் நற்செயல் அனைத்தும் உங்கள் ஆசீயுடன் எம் அருகில் நீங்கள் நின்று செய்வதைப்போல் தோன்றுகின்றது அப்பா. வரும் யுகத்தை எமக்குக் காட்டிய தூரதரிசனே எம் நெஞ்சினிலே உங்கள் நினைவை சிலுவைபோல் சுமக்கின்றோம் அப்பா. தினம் தினம் உங்கள் குரல் கேளாமல் இருள் சூழ்ந்த வானமாய் துடிக்கின்றோம் அப்பா. நீங்கள் இல்லாக் குறை தீர்க்க யாருண்டு இவ்வுலகில் எங்கள் தெய்வமே. ஆருயிர் கணவனாய். பாசமிகு தந்தையாய். கனிவுள்ள மாமனாய். தங்கத் தாத்தாவாய். உற்றார் உறவினரை. நண்பரை அரவணைக்கும் களஞ்சியமாய் வாழ்ந்தீர்களே அப்பா. காலங்கள் ஓராண்டு போனாலும் நீங்கிடுமோ உங்கள் நினைவலைகள். உங்கள் சிரித்த முகம் மறந்திடுமோ இவ்வுலகம். எங்கள் அழகான குடும்பத்தின் இதய தீபம் நீங்களே. என்றும் எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவலைகளை சுவாசித்துக்கொண்டு ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

ஆருயிர் மனைவி. பாசமிகுந்த பிள்ளைகள். மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.

(சி.10283) (45.6.3) மாபொல, வத்தளை.

## திறமையான தலைவர் ராகுல் காந்தி

### *வீரப்ப மொய்லி புகழாரம்*

புதுடில்லி, டிசெ.23

ராகுல் காந்தி இந்தியாவின் மிகத் திறமையான தலைவர் என்று புகழ்ந்து தள்ளியுள்ளார் மத்திய அமைச்சர் வீரப்ப மொய்லி.

"காங்கிரஸ் கட்சியின் உண்மையான தலைவர், பிரதமர் பதவிக்கு பொருத்தமானவர் ராகுல் காந்தி. இளைஞர்களின் தேவை அறிந்து செயற்படும் ஓர் இளைஞர். இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரும் அவரது ஆளுமைத் தன்மையை விரும்புகின்றனர்" என்று தெரிவித்துள்ளார் அவர்.

அதேவேளை, பதவி விலகிய ஜெயந்தி நடராஜனின் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சு ராகுல் காந்தியால் மத்திய அமைச்சர் வீரப்ப மொய்லியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ற)

# ஆம் ஆத்மி கைகளில் புதுடில்லியின் ஆட்சி?

புதுடில்லி, டிசெ.23

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சி அமைப்பதற்கு பெரும்பாலான மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று அந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி சட்ட சபைத் தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், ஆம் ஆத்மி கட்சி ஆட்சியமைப்பதற்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு வழங்கத் தயாராக உள்ளது என்று தெரிவித்திருந்தது. ஆனால் ஆட்சி அமைக்கலாமா என்பது குறித்து மக்களின் கருத்துக்களை கேட்ட பின்னரே முடிவு செய்யப்படும் என்று ஆம் ஆத்மி கட்சி தெரிவித்தது.

பொதுமக்களிடம் அந்தக் கட்சி சுமார் 10 லட்சம் கடிதங்கள் மூலமும் மற்றும் தொலைபேசி குறுந்தகவல், இணையதளம் மூலமும் கருத்து கேட்டிருந்தது. அதில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சிஅமைக்கபெரும்பான்மையான மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று அந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் இன்று கூறும்போது,

"டெல்லியில் ஆட்சி அமைக்க இணையதளம், தொலைபேசி குறுந்தகவல் மற்றும் கடிதங்கள் மூலம் பொதுமக்களிடம் ஆம் ஆத்மி கட்சி கருத்து கேட்டுள்ளது. அதில் ஆம் ஆத்மி ஆட்சி அமைக்க பெரும்பான்மையான மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆட்சி அமைக்குமாறு ஒரு கட்சியை மக்கள் கேட்டுக்கொள்வது இதுவே முதல்முறை ஆகும். டெல்லியில் ஆட்சி அமைக்கும் பொறுப்பை ஏற்க மறுத்து பா.ஜ.க. ஓடி ஒளிகிறது. ஆம் ஆத்மி கட்சிக்கு ஆட்சியை பிடிப்பது முக்கியமல்ல. விலைவாசி உள்ளிட்ட பிரச்சினைகளுக்காக போராடுவதே எங்கள் நோக்கம். நாடு முழுவதும் அரசியலை சுத்தம் செய்ய ஆம்ஆத்மிகட்சிஉறுதிகொண்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## லிபியாவில் குண்டுவெடிப்பு: 6 பேர் சாவு

பெங்காஸி, டிசெ.23
லிபியாவின் கிழக்கு பகுதியில் உள்ள 2ஆவது பெரிய நகரமான பெங்காசியில் நேற்று கார்க்குண்டு ஒன்று வெடித்தது. அதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.
கிழக்கு லிபியாவில், பெங்காஸி நகரின் அருகே உள்ள பாதுகாப்புச் சோதனைச் சாவடி மீதே வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார் மோதி வெடித்துள்ளது. அதில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பொதுமக்கள் உட்பட 8 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.
இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு பெரும்பாலான நாடுகள் தங்கள் நாட்டின் தூதரகங்களை மூடியுள்ளன. விமான சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# ஈரானுக்கு எதிராக புதிய தடைகள் தேவையில்லை

### அமெரிக்க ஜனாதிபதி தெரிவிப்பு



வொஷிங்டன், டிசெ.23
ஈரான் மீது புதிய பொருளாதார தடைகள் விதிக்க வேண்டிய தேவை தற்போது இல்லை என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.
ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுக்களில் ஈரானின் அணு சக்தித் திட்டங்கள் தொடர்பாக அமெரிக்கா, ரஷ்யா உட்பட 6 நாடுகளுக்கும், ஈரானுக்கும் உடன்பாடு எட்டப்பட்டது. இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது.
இந்தநிலையில் ஈரானுக்கு எதிராகப் புதிய தடைகளை விதிக்க வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தி வருகின்றனர்.
அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி பராக் ஒபாமா இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"ஈரானுடன் செய்து கொண்ட உடன்பாடு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதை நிறைவேற்றும் விடயத்தில் சந்தேகப்படத் தேவை இல்லை. ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைவிதிப்பதற்குத் தற்போது அவசியம் இல்லை.
அதில் தலையிட்டால் அமெரிக்காவின் பாதுகாப்புக்குச் சவாலாக அமைந்துவிடும். நாடாளுமன்றத்தில் புதிய பொருளாதாரத் தடை விதிப்பதை தவிர்த்து தூதரக முறையில் அணுக முன்வர வேண்டும். உடன்பாட்டை ஈரான் மீறினால் அதன்பின்னர் பொருளாதாரத் தடை விதிப்பது குறித்து முடிவு எடுக்கலாம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## நான்காவது அணு உலையை உருவாக்கியது பாகிஸ்தான்



நியூயோர்க், டிசெ.23
பாகிஸ்தான் இரகசியமாக அமைத்து வரும் நான்காவது அணு உலையின் கட்டுமானப் பணிகள் முடியும் நிலையில் உள்ளன என்று தகவல் வெளியிட்டுள்ளது அமெரிக்காவின் அறிவியல் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்பு.
அந்த அணு உலையில் அணு ஆயுதங்களை உருவாக்குவதற்கான மூலப் பொருள் தயாரிக்க பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது என்றும் அந்த அமைப்பு மேலும் குற்றஞ்சாட்டியுள்ளது.
பாகிஸ்தான் கட்டி வரும் அணு உலையைச் செயற்கைக் கோள் உதவியுடன் அமெரிக்க அமைப்பு பல ஆண்டுகளாகக் கண்காணித்து வருகிறது. இந்தநிலையிலேயே அந்த அமைப்பு இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது.
இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,
"கடந்த நவம்பர் மாதம் எடுக்கப்பட்ட செயற்கைக் கோள் படத்தில் 4ஆவது அணு உலை முடிவடையும் நிலையில் உள்ளது. அணு உலையில் சிறிய வகை அணு ஆயுதங்களைத் தயாரிக்க உதவும் புளூடோனியம் என்ற மூலப் பொருளைத் தயாரிக்கப் பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. அதற்கான தொழில்நுட்பங்களை தவறான முறையில் பாகிஸ்தான் கொள்முதல் செய்துள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## அமெ. விமானங்கள் மீது உகண்டாவில் தாக்குதல்



போர், டிசெ.23
தெற்கு சூடானில் அமெரிக்க விமானம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
தெற்கு சூடானில் அந்த நாட்டு ஜனாதிபதி சல்வா கீருக்கு எதிராகப் புரட்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அதனால் கடந்த சில நாள்களாக தென்சூடான் இராணுவத்துக்கும் புரட்சியாளர்களுக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகிறது. தற்போது அது உள் நாட்டு போராக மாறியுள்ளது.
எண்ணெய் வளம்மிக்கஜோங்லி மாகாணத்தில் உள்ள போர் என்ற நகரம் தற்போது புரட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு இராணுவத்துக்கும், புரட்சியரளருக்கும் இடையே சண்டை தீவிரம் அடைந்துள்ளது.
அங்கு நிலவும் பதற்ற நிலையை அடுத்து, அமெரிக்கா தெற்கு சூடானில் உள்ள தனது நாட்டு மக்களை திரும்ப அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்துள்ளது. அதற்காக 45 இராணுவ வீரர்களுடன் 3 போர் விமானங்கள் தெற்கு சூடானுக்கு அனுப்பப்பட்டன.
அவை போர் நகரில் தரை இறங்க முயன்றபோது அவை மீது துப்பாக்கி சூடு மற்றும் ரொக்கெற் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
அதில் ஒரு போர் விமானத்தின் பெட்ரோல் தாங்கி சேதம் அடைந்தது. அதையடுத்துப் போர் விமானங்கள் தெற்கு சூடானின் போர் நகரின் எல்லையில் உள்ள உகண்டாவில் உடனடியாகத் தரையிறக்கப்பட்டன.
புரட்சியாளர்களின் தாக்குதலில் 4 அமெரிக்க வீரர்கள் காயம் அடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## அடைத்து வைக்கப்பட்டிருந்த 19 கர்ப்பிணிகள் மீட்பு

ஆபிரிக்காவின் எண்ணெய் வளம் மிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் பெரும்பாலான மக்கள் ஏழ்மை நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அங்கு திருமணத்துக்கு முன்னரே குழந்தையைப் பிரசவிப்பது என்பது சர்வசாதாரண செயலாகவே கருதப்படுகின்றது. திருமணத்துக்கு முன்னர் கருத்தரிக்கும் சில பெண்கள், சமூகத்துக்குப் பயந்து உள்ளூரை விட்டு வெளியேறி, ரகசியமான இடங்களில் தங்கியிருந்து பிரசவத்துக்கு பின்னர் பெற்றெடுத்த குழந்தைகளை அடிமாட்டு விலைக்கு விற்று விட்டு, மீண்டும் ஒன்றும் அறியாதவர்களைப் போன்று தங்கள் வீடு வந்து சேர்ந்து விடுவது அங்கு வாடிக்கை.
இத்தகைய பெண்களுக்கு அடைக்கலம் தருவதற்கென்றே 'பிழைக்கத்' தெரிந்த சில பெண்கள், 'மகப்பேறு தொழிற்சாலை'களை நடத்தி வருகின்றனர்.
அவைபோன்றரகசியபிரசவக் கூடங்களைத் தேடிக் கண்டுபிடித்து, அங்கு அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்களை மீட்கும் நடவடிக்கையில் நைஜீரிய பொலிஸார் தற்போது மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். தென்கிழக்கு மாநிலமான அபியாவில் நேற்றுமுன்தினம் அதிரடி தேடுதல் நடத்தியுள்ள பொலிஸார், 15 முதல் 23 வயதுக்குட்பட்ட 19 கர்ப்பிணிப் பெண்களை மீட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## அமெரிக்காவில் சூறாவளி இருவர் சாவு: பலர் காயம்

நியூயோர்க், டிசெ.23
மத்திய மற்றும் தெற்கு அமெரிக்காவைத் தாக்கிய சூறாவளியால் இருவர் உயிரிழந்தனர்.
வடக்கு மிசிசிபி பகுதியில் நகரும் வீடு ஒன்று கவிழ்ந்ததில் ஒருவரும், தென்கிழக்கு மிசிசிபி பகுதியில் சாலையின் குறுக்கே கிடந்த மரத்தில் கார் மோதியதில் மற்றொருவரும் உயிரிழந்தனர்.
ஆர்கன்சாஸ் பகுதியில் வீசிய பலத்த சூறாவளிக் காற்றில் 5 பேர் காயமடைந்துள்ளனர் என்றும், 24க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)



சிரியாவில் அலப்போ நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் கிளர்ச்சியாளர்கள். அலப்போ நகரின் பெரும் பகுதிகள் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்தநிலையில் இராணுவத்தினர் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் உள்ள முக்கிய மருத்துவமனை ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி அதனையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட லொறி ஒன்றை மருத்துமனைக்கு முன்னால் வெடிக்க வைத்த கிளர்ச்சியாளர்கள்,அதன் பின்னர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் ஏராளமானோர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புலம் பெயர்ந்தவர்கள் இவ்வாண்டு அதிகரிப்பு

லண்டன், டிசெ.23
உலகம் முழுவதிலும் புலம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு மிக அதிகமாக உள்ளது என்று கவலை வெளியிட்டுள்ளது ஐ.நா அகதிகள் நிறுவனம்.
இதுதொடர்பாக ஐ.நா அகதிகள் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,
போர்க் காலங்களிலோ அல்லது இயற்கைப் பேரழிவினாலோ மக்கள் நாட்டை விட்டு வேறு நாடுகளுக்கு அல்லது உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்து போவது என்பது இயல்பானது.
அவ்வாறு உள்நாட்டுக்குள்ளே புலம் பெயர்ந்தவர்கள், புதிதாக அகதிகள் நிலைக்கு உள்ளானவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை மற்ற ஆண்டுகளை விட இந்த 2013ஆம் ஆண்டில் மிக அதிகமான எண்ணிக்கையில் உள்ளது. இந்த ஆண்டு சிரியாவில் இருந்தே அதிகமான மக்கள் வெளியேறியுள்ளனர்.
உலகம் முழுவதிலும் கடந்த 2012ஆம் ஆண்டு 76 லட்ச மக்கள் புலம் பெயர்ந்தனர். ஆனால் இந்த ஆண்டில் முதல் 6 மாதத்திலேயே 59 லட்ச மக்கள் தங்கள் வீடுகளையும் உடைமைகளையும் விட்டு புலம் பெயர்ந்துள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## 2013 மோசமான ஆண்டு: ஒபாமா கூறுகின்றார்



நியூயோர்க், டிசெ.23
2013 ஆம் ஆண்டு தனது பதவிக் காலங்களில் மிகவும் மோசமான வருடமாக அமைந்தது என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.
வருட இறுதி ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இந்த வருடத்தில் தம்மால் கொண்டுவரப்பட்ட சுகாதார நல திட்டம் சர்ச்சையை தோற்றுவித்தமை , இரண்டு வார காலமாக நாட்டில் அரச பணிகள் ஸ்தம்பிதமடைந்தமை போன்றவை பெரும் தவறுகள் எனவும் சுட்டிக்காட்டிய ஒபாமா, காங்கிரஸின் சில செயற்பாடுகள் தமக்கு ஏமாற்றமளித்தன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன் புலனாய்வுத் தகவல்களை கசிய விட்டதன் மூலம் எட்வெட் ஸ்நோடன் தேவையற்ற குழப்பங்களை நாட்டில் ஏற்படுத்தி விட்டார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## இந்து இளைஞர் மன்றம் ஆரம்பம்

தென்மராட்சி, டிசெ.23


வரணியில் இந்து இளைஞர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வரணிப் பிரதேசத்தில் உள்ள குடமியன், நாவற்காடு, வரணி வடக்கு, மாசேரி, இடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி, தாவளை - இயற்றாலை, வரணி-இயற்றாலை ஆகிய எட்டு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த இந்து இளைஞர்களை உள்ளடக்கி குறித்த மன்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வரணி சிட்டிவேரம் அற நெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்ற ஆரம்பக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் கே.ராஜமோகன், உபதலைவர் ந.நர்மதன், செயலாளர் சி.சிவச்சந்திரன், உதவிச் செயலாளர் பா.நிரோஜன், பொருளாளர் க.விஷ்ணுகரன் மேலும் எட்டுப் பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ந-9)

# நல்லூரில் சிறப்புற நடந்த திருவாசக விழா



யாழ்ப்பாணம், டிசெ.23

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் திருவாசக விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி அனந்தலெட்சுமி மாணிக்கசர்மா தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் மற்றும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ப.ஜெயகுமார குருக்கள் ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தனர். தொடர்ந்து நந்திக் கொடியேற்றல், விசேட பூசைகள் என்பன இடம்பெற்றன.

நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், துர்க்கா தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், கு.பாலசண்முகன், இந்து கலாசார உத்தி யோகத்தர் திருமதி தர்பணா சுதர்சன், திருமதி ஞானேஸ்வரி துஷ்யந்தன் மற்றும் பிரதம விருந்தினர் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

திருவாசக விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சு மற்றும் திருவாசகப் பண்ணிசைப் போட்டிகளில் வெற்றி பெற்ற 326 மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கல் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம் பெற்றன. (ஒ-7)

**மணல் விற்பனைக்கு**

கட்டட வேலைகளுக்கும், பூச்சுவேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்குண்டு.

4½ ரக்டர் 19000/-

தொடர்பு:கண்ணா

077 676 6499/077 759 0792

(42963)(4.6.3)

**சாவகச்சேரி சிற்றி லயன்ஸ் கழகம் தென்மராட்சி பிரதேச மாணவர்களின் நலன் கருதி பின்வரும் பயிற்சிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது**

தையல், வூல்ப் நூல் பின்னுதல், சிகை அலங்காரம், கேக் ஐசிங், சிறுவர்களுக்கான அடிப்படை ஆங்கிலப் பயிற்சி (தரம் - 3 தொடக்கம் தரம் - 5 வரை)

- O/L, A/L. மாணவர்களுக்கான ஆங்கில எழுத்துப் பேச்சுப்பயிற்சி சிங்கள எழுத்துப் பேச்சுப்பயிற்சி, சிறுவர்களுக்கான அடிப்படை கணினிப்பயிற்சி (தரம்- 3 தொடக்கம்),
- O/L, A/L, மாணவர்களுக்கான கணினிப் பயிற்சி. வசதிகுறைந்த மாணவர்களுக்கு இலவசம்.

விண்ணப்ப முடிவு திகதி: 31.12.2013

தொடர்பு: ஷாம் கொம் கோல்,
தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.
தொ.பே. 077 411 3697/ 021 227 0625

அனைவருக்கும் IIS தனது நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது

IIS CITY CAMPUS

**BTEC HND**
**Higher National Diploma**

- HND in Civil Engineering
- HND in Quantity Surveying
- HND in Business Management
- HND in Computing

கல்வியாண்டு 2014 க்கு மேற்குறிப்பிட்ட உயர்தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்குரிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆர்வமுடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆரம்பம் : 10.01.2014**

மேலதிக விபரங்களுக்கு : 021 4900 900 / 076 697 4188

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

## 13 பயனாளிகளுக்கு வாழ்வாதார தொழில் முயற்சிக் கொடுப்பனவு

அச்சுவேலி, டிசெ.23

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 13 பயனாளிகளுக்கு சமூக சேவைகள் வாழ்வாதார தொழில் முயற்சிக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது.

வாழ்வாதார தொழில் முயற்சிக்கான கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபா. இரண்டு கட்டங்களாக வழங்கப்படும்.

மாடு வளர்த்தல், ஆடு வளர்த்தல், தையல், சிற்றுண்டி தயாரித்தல், உணவு தயாரித்தல் என்ற வகையில் தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கு வசதியாக கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

7500 ரூபா வாழ்வாதார தொழில் முயற்சிக்கான முதலாம் கட்டமாக கொடுப்பனவுகளை பெறுவோர் பெயர் விவரம் வருமாறு:

குணம் இராசம்மா (கோழி வளர்ப்பு) புத்தூர் மேற்கு மருதடி, துரைசிங்கம் ராணி (கோழி வளர்ப்பு) பொக்கணை ஊரெழு, அருளானந்தம் இந்திராணி (மாடு வளர்ப்பு) அன்னங்கை உரும்பிராய், இரத்தினம் நிஷாந்தினி (தையல்) நாவற்காடு அச்சுவேலி, நகுலன் திருமகள் (தையல்) வி.எச்.லேன் இருபாலை, இராசதுரை சந்திரன் (கோழி வளர்ப்பு) புத்தூர் வடக்கு புத்தூர், சிவானந்த சாமி விஜயலட்சுமி (சிற்றுண்டி தயாரிப்பு) சிறுப்பிட்டி கிழக்கு, மகேந்திரம் பத்ம ராணி (மாடு வளர்ப்பு) அச்சு வேலி வடக்கு, பால சுந்தரம் அருள்நேச ராணி (கோழி வளர்ப்பு) குழக்கண்டி கோப் பாய், குகதாஸன் சறோ சினி (ஆடு வளர்ப்பு) இந்து சிட்டி புத்தூர், முக வேள் அஞ்சலி தேவி (உணவு தயா ரித்தல்) நீர்வேலி தெற்கு அம்மன் கோயிலடி, வசிகரன் கலாநிதி (சிற்றுண்டி தயாரித்தல்) வளலாய் அச்சுவேலி, விக்கினேஸ்வரன் ரதிகலா (ஆடு வளர்ப்பு) கம்பன்புலம் நீர்வேலி. (ந-11)

# மிருதங்கம், ஓர்கன் பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி, டிசெ.23

தென்மராட்சி கலை மன்றத்தினர் விரைவில் மிருதங்கம் மற்றும் ஓர்கன் பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளனர். இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களைப் பதிவு செய்யுமாறு மன்றத்தலைவர் க.மோகனராஜலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-9)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது பாடசாலை அதிபர்
ந. அமிர்தநாதன் அவர்களின்
புதல்வன் செல்வன் அ. பிரவீன்
கடந்த 2013 க.பொ.த உ/த
பரீட்சையில் உயிரியல் பிரிவில் 2 A B
பெறுபேற்றைப் பெற்று முல்லைத்தீவு
மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமையையிட்டுப் பாராட்டுவதோடு, மேலும் கல்வியிலும் வாழ்விலும்
சாதனைகள் படைக்க உளங்கனிந்து வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் கழகம்
மு/உடையார்கட்டு அ.த.க. பாடசாலை
(42984)(10.6.3)

**Personal Class** புதிய ஆண்டுக்கான
தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
(42746)(4.6.3)
தொடர்பு: கலியன் றோட், நல்லூர். 077 327 1608

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணம், தீவுப்பகுதி Roman Catholic 1973 January இல் பிறந்த Association of Business Executives (UK) Diploma in Business Administration தகைமையுடைய Jaipur காலில் நடமாடுகின்ற 5'7'' உயரமுடைய, சர்வதேச பாடசாலை மாணவர், தொழில்சார் கல்வி கற்போருக்கு (Professional) வியாபார முகாமைத்துவ பாடங்கள் கற்பிப்பவருக்கு படித்த தொழில் புரியும் மணமகள் தேவை. தொடர்பு: 077 641 0802 (சி/10274) (5.6.3)

நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு

**மாபெரும் சிறப்புத் தள்ளுபடி**

அனைத்து விதமான அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்குத் தேவையான மர, இரும்பு, அலுமினிய பிளாஸ்ரிக் தளபாடங்களை எங்குமில்லாதவாறு வியக்கத்தக்க விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.




230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்திச் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில்)
தெ.பே : 077 358 3879, 077 831 4201
(C 10639)(7.6.3)

## சுகாதார நடைமுறைகளை மீறியவர்களுக்கு தண்டம்

*விதித்தது கிளிநொச்சி நீதிமன்றம்*

கிளிநொச்சியிலும், பூநகரியிலும் சுகாதார நடைமுறைகளை மீறிய இருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் தண்டம் விதித்துள்ளது.

கிளிநொச்சியில் சூழலை மாசுபடுத்தும் வகையில் குப்பைகளை வீசிய ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும், பூநகரிப் பகுதியில் சுகாதாரநடைமுறைகளுக்குஒவ்வாத வகையில் உணவு வகைகளைக் காட்சிப் படுத்திய உணவகஉரிமையாளர்ஒருவருக்கு2 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டமாகவிதிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட இருவரும் கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டது. (க-6)

## அகளங்கனுக்கு 'சொக்கன்' விருது

எழுத்தாளர் கலாநிதி அகளங்கனுக்கு 'சொக்கன்' விருது வழங்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் யாழ்.இலக்கிய வட்டத்தினால் சிறந்த எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டு வருகின்றது.

இந்த முறை தமிழுக்கும் எழுத்துத் துறைக்கும் பெரும் பங்காற்றி வருகின்ற எழுத்தாளர் அகளங்கனுக்கு 'சொக்கன்' விருது வழங்கப்பட்டுள்ளது. வவுனியாவில் இடம்பெற்ற "கம்பனின் நான்" நூல் வெளியீட்டு விழாவில் வைத்து இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.இலக்கிய வட்டத்தின் செயலாளர் நயினை கி.கிருபாணந்தா இந்தவிருதைவழங்கினார்.

எழுத்தாளர் அகளங்கன் பல நூல்களை வெளியிட்டதுடன், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். (க-421)

# வவுனியாவில் இரகசிய முறையில் போதைப் பொருள் விநியோகம்

*கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு: கல்விச் சமூகம் விசனம்*

வவுனியா, டிசெ.23

வவுனியாவில் இரகசியமான முறையில் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் சிலரும் இதனைப் பயன்படுத்துவதால் அவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருவதாக பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

> **தோணிக்கல், மூன்றுமுறிப்பு, தேக்கவத்தை, குட்செட் வீதி, பண்டாரிக்குளம், வெளிக்குளம் உட்பட வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.**

தோணிக்கல், மூன்றுமுறிப்பு, தேக்கவத்தை, குட்செட் வீதி, பண்டாரிக்குளம், வெளிக்குளம் உட்பட வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலேயே போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனை மாணவர்களும் வாங்கிப் பயன்படுத்து வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் சிலவற்றில் மாணவர்களுக்கிடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்படுவதாகவும் அதனைத்தீர்த்து வைப் பதற்குத் தாம் பெரும் பாடு படுவதாகவும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இத்தகைய மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் ஆர்வம் குன்றி வருவதையும், சந்திகளில் கூடி நின்று வீதியால் செல்லும் மாணவிகளுடன் தகாதவார்த்தை பேசுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நடைபாதை வியாபாரிகள் போன்று திரியும் சிலரே போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பொதுமக்கள், பொது நிறுவனங்கள், சிவில் பாதுகாப்பு குழுக்களின் பங்களிப்பு மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாட்டின் மூலமே இதனைத் தடுத்து நிறுத்தலாம் என மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர்கள் தெரிவிக்கின்றனர். போதைப் பொருள் பயன்பாட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-402)

## சிரமங்களை எதிர்கொள்ளும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

வவுனியா, டிசெ.23

வவுனியா மாவட்டத்தில் புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தாம் கடமையின்போது சில சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவித் துள்ளனர்.

தேர்தல் காலத்தில் நியமனங்களைப் பெற்ற இவர்கள் அரசியல் நோக்குடைய வேலைகளில் ஈடுபடுமாறு சில அதிகாரிகளால் நிர்ப்பந்திக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

தமக்கு மேல் உள்ள அதிகாரிகளின் கடும் வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுவது, தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி புதிதாக வந்தவர்களை இடமாற்றத்துக்கு உள்ளாக்குவது, கடமைப் பட்டியலைச் சீராக வழங்காமை போன்ற செயற்பாடுகளால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். (க-402)

## நிரந்தரக் கட்டடம் அமைத்துத் தருக

*கிளிநொச்சிச் சந்தையில் கீரை விற்பனையில் ஈடுபடும் பெண்கள் கோரிக்கை*



கிளிநொச்சிச் சந்தையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக கீரை விற்பனையில் ஈடுபடும் பெண்கள் தமக்கு நிரந்தரக் கட்டடம் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

"கீரை வியாபாரத்தில் ஈடுபடும் நாம் நீண்டகாலமாக வெயில், மழை என்பவற்றின் மத்தியிலே வியாபாரத் தில் ஈடுபட்டு வருகின்றோம்.

வியாபாரத்தில் பொருள்களைப் பாதுகாக்கக்கூடிய எந்த வசதியையும் எக்காலத்திலும் சந்தை நிர்வாகம் எமக்கு ஏற்படுத்தித் தரவில்லை, வரியை மட்டும் வாங்குகிறார்கள்" என்று இவர்கள் தெரிவித்தனர். (வ-18)

## பனம் விதைகளை நடுகை செய்க வவுனியாவில் மக்கள் கோரிக்கை

வவுனியா, டிசெ.23

கடந்த கால போர் காரணமாக பெருமளவான பனைகள் வவுனியா மாவட்டத்தில் அழிவடைந்துள்ளன.

> **பனை ஓலையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பெட்டி, பாய், விசிறி, குட்டான், கைப்பணிப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.**

ஆரோக்கியமுள்ள எதிர்காலச் சந்ததியை கட்டியெழுப்ப பனம் பொருள்கள் அவசியமானவை. எனவே இங்கு பனம்விதைகளைநடவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது வவுனியாவில் பனம் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வரு கின்றது. அத்துடன் பனை ஓலையிலிருந்து உற்பத்தி செய்யப் படும் பெட்டி, பாய், விசிறி, குட்டான், கைப்பணிப் பொருள்களுக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

பனாட்டு, பனங்கட்டி, ஒடியல், ஒடியல்மா, ஒடியல் கூழ், கள்ளு இவற்றை விலைகொடுத்துவாங்குவதற்கு கடைகளைத் தேடி அலைய வேண்டியுள்ளது. மேலும் இந்தப் பொருள்களுக்கானவிலையும்அதிகரித்துள்ளது.

வவுனியாவுக்கு வரும் உல்லாசப் பயணிகள், உணவுப் பண்டங்கள் தொடர்பாக ஆராய்வதிலும், கிடைத்தற்கு அருமையான பனம் உற்பத்திப் பொருள்களை வாங்குவதிலும் ஆர் வம் காட்டுகின்றனர்.

பனம் பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்க பனம்விதைகளை நடுவதன் மூலம் எதிர்காலத்தில் வவுனியா மாவட்டத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் பனம் உணவுப் பொருள்களை உண்பதன் மூலம் திடகாத்திரமான உடல் ஆரோக்கியத்தையும் பேண முடியும் என வவுனியா மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-402)

## பெரிய கடையில் மதுபான நிலையம்; உடனடியாக அப்புறப்படுத்துங்கள்

*கோருகிறார் செல்வம் அடைக்கலநாதன்*

மன்னார்,டிசெ.23

மன்னார் பெரியகடை கிராமத்தில் மக்கள் குடியிருப்புக்கு அண்மையில் அமைக்கப்படும் மதுபான விற்பனை நிலையத்தை அங்கிருந்து அகற்ற உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

பெரிய கடை கிராம மக்களின் குடியிருப்புகளுக்கு அண்மையில் இரகசியமானமுறையில் மதுபான விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாகத் தற்போது தான் கிராம மக்களுக்குத் தெரிய வந்துள்ளது. ஏற்கனவே மன்னார் சௌத்பார் பகுதியில் அமைந்திருந்த இரண்டு மதுபான விற்பனை நிலையங்களும் அப்பகுதி மக்களின் எதிர்ப்பால் மூடப்பட்டுள்ளன.

இந்த நிலை யில் இரகசியமான முறையில் பெரிய கடைப் பகுதியில் இந்த மதுபான. விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு வந்துள்ளது.

அப்பகுதியில் ஏராளமான பாடசாலை மாணவர்கள்,யுவதிகள் வசிக்கும்நிலையில்போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு ஒரு சிலரின் ஆதரவுடன் குறித்த மது விற்பனை நிலையம் அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் பல்வேறு கலாசாரச் சீர்கேடுகள் இடம்பெற வாய்ப்பு ஏற்படும் என அப்பகுதிப் பெண்கள் அஞ்சுகின்றனர்.


எனவே குறித்த இடத்தில் மதுபான விற்பனை நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கிய அதிகாரிகள் உடனடியாக அதனை இரத்துச் செய்ய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (க-12)

## குறைவடைந்து காணப்படும் வவுனிக்குளத்தின் நீர்மட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளத்தின் நீர் மட்டம் 13 அடிகள் என்ற அளவுடன் தாழ்நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. துணுக்காய், மாந்தைகிழக்குஆகியஇடங்களிலுள்ள குளங்களின் நீர்மட்டம் குறைந்து காணப்படுவதால் விவசாயிகள் நெற் செய்கையில் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

தற்போது இந்தக் குளத்திலிருந்து நீர்ப்பாசனம் மிகக்குறைந்த அளவிலேயே இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் மழை வீழ்ச்சி குறைவடைந்தால் நெற்பயிர்ச் செய்கையில் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் இங்குள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-18)



கிளிநொச்சி சந்தையில் பல இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் வியாபாரிகளும் நுகர்வோரும் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். (ந-18)

# திட்டமிட்ட சதி நடவடிக்கை

## கல்முனை தமிழ் உப - பிரதேச செயலகம் தரமுயர்த்தும் விவகாரம் தொடர்பில் கல்முனை முதல்வர்



அம்பாறை.டிசெ.23

கல்முனை தமிழ் உப - பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விவகாரம் தமிழ்- முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் நோக்கில் சில பேரினவாத சக்திகளினாலும் தேசியவாதிகளாலும் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்ற ஒரு சதி நடவடிக்கையாகும் என்று கல்முனை மாநகர முதல்வர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:-

பேரினவாதிகள் பின்னணியாக இருந்து கொண்டு செயற்படுத்தும் கல்முனை தமிழ் உப பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் என்கின்ற விடயத்தில் இரு சமூகங்களும் மிகக் கவனமாக செயற்பட வேண்டும்.

விசேடமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இருந்து வருகின்ற நல்லுறவை சீர்குலைக்கும் நோக்கிலேயே சில பேரின சக்திகள் இதனைத் தூண்டியிருப்பதாக நான் கருதுகின்றேன்.

உண்மையில் கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தொடர்பிலான எந்தவொரு தீர்மானத்தையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், மேல் மட்டத்திலும் கீழ் மட்டத்திலும் சுமுகமாக பேசித் தீர்வு காண வேண்டும்.


இந்த விடயத்தை வைத்து இரண்டுதரப்பினருக்கும் இடையிலான உறவை சீர்குலைப்பதற்கு மேற்கொள்ளப்படும் சதி வலையில் யாரும் வீழ்ந்து விடக்கூடாது என நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மேலும் இது தமிழ் பேசும் சமூகத்தினரின் பலத்தை உடைத்தெறிவதற்கான ஒரு சதித் திட்டமாகும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது.

எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்- முஸ்லிம் சமூகங்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதற்கும் கிழக்கு மாகாணத்தில் ஒன்றிணைந்து ஆட்சி செய்வதற்குமான வாய்ப்பை இல்லாதொழிக்கும் ஒரு சதித் திட்டமாகவும் இதைப் பார்க்க வேண்டியுள்ளது.

அத்துடன் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக இரு சமூகங்களும் தமக்குள் ஒன்றுபட்டு குரல் எழுப்புவதற்கான சூழ்நிலையை நிரந்தரமாக இல்லாமல் செய்வதற்கான ஒரு தந்திரமாகவே கல்முனை விவகாரம் கையாளப்படுகிறது என்பதை தமிழ் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும் - என்றும் கல்முனை மாநகரமுதல்வர் மேலும் தெரிவித்தார். (வ-104)

# கைகளினால் இறால் பிடிக்கும் மாணவர்கள்




மட்டக்களப்பு, டிசெ.23

மட்டக்களப்பு வாவியின் அருகிலுள்ள நீர்த்தேக்கங்களில் வலைகளைப் பாவிக்காமல் கைகளால் இறால்களைப் பிடிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைகளால் இறால்களைப் பிடிப்பதை மாணவர்கள் உட்பட பலர் தங்களது பொழுது போக்குத் தொழிலாகவும் கொண்டுள்ளனர்.

கொத்துக்குளம் வாவியின் அருகில் மணல் அகழ்வதால் ஏற்படும் குழிகளில் மாரி காலங்களில் நீர் தேங்கி நிற்பதோடு ஆற்று நீரும் வந்து சேர்வதனால் அதனுடன் இறால் களும் மீன்களும் வந்தடை கின்றன.

நீருக்கு அடியிலுள்ள இறால் கள் இரு கைகளினாலும் நீரினுள் அமிழ்த்திப் பொத்திப் பிடிக்கப்படுகின்றன.

இதன்போது இறாலின் முன் பக்கமுள்ள ஊசி போன்ற முள் கைகளைக் குத்துவதாகவும் இதனால் வலி ஏற்படுவதாக வும் மாணவர்கள் கூறினர். இருப்பினும் அதைப் பொருட்ப டுத்தாது இறால்களைப் பிடிப்பதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு 2 கிலோ வீதம் இறால்களைப் பிடிக்கின்றனர். இவ் வாறு பிடிக்கப்படும் இறால்கள் ஒரு கிலோ 500 ரூபா வுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. (வ)

# ஜனவரியில் கடமையேற்கவும்

## இல்லாவிடில் கொடுப்பனவில்லை என்கிறார் மட்டு. கல்வி பணிப்பாளர்

திருமலை. டிசெ.23

மட்டக்களப்பு, கல்குடா கல்வி வலயத்திலிருந்து வேறு வலயங்களில் தற்காலிகமாகக் கடமையாற்றும் ஆசிரி யர்கள் அடுத்தவருடம் ஜனவரி முதலாம் திக திக்கு முன்னர் தமது வலயத்தில் கடமை யேற்க வேண்டும் என்று வலய கல்வி பணிப்பாளர்எஸ்.ஸ்ரீகிருஸ்ணராஜா தெரிவித்தார்.

அவ்வாறு செயற்படாவிடின் அவர்களது சம்பளம் இடை நிறுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.


இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதா வது:-

தற்காலிக இடமாற்றங்களை பெற்ற 27 பேர் வேறு வலயங் களில் கடமைகளில் உள் ளனர். அவர்களின் இடமாற் றங்கள் இந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவ டைகிறது. அவர்களுக்கான சம்பளத்தை கல்குடா வலயம் வழங்கி வருகிறது.

ஆசிரியர்களுக்கான தட்டுப் பாடுகள் நிலவுகின்ற நிலையில் தொடர்ந்தும் இவர்கள் வேறு வலயங்களில் கடமையாற்ற முடியாது. எனவே குறித்த 27 பேரும் எதிர்வரும் 2014ஆம் ஆண்டில் தமது கடமைகளை கல்குடா வலயத்தில் பொறுப்பேற்க வேண் டும்.

தற்போது அவர்களில் ஒன்பது பேர் மட்டக்களப்பு வலயத் திலும் மூன்று பேர் சம்மாந் துறை வலயத்திலும் எட்டு பேர் கல்முனை வலயத்திலும் ஐந்து பேர் பட்டிருப்பு வலயத்திலும் தலா ஒருவர் என்ற அடிப்படையில் அக்கரைப் பற்று மற்றும் மட்டக்களப்பு மத்தி ஆகியவற்றிலும் கடமையாற்றுகின்றனர். கல்குடா வலயத்திலுள்ள மாணவர்களின் நலன்கருதி இந்த ஆசிரியர்கள் 27 பேரும் தமது வலயங்களுக்கு கட மைக்குச் சமுகமளிக்க வேண் டும் -என்றுள்ளது. (வ)

# மட்டக்களப்பு இந்து ஆலயங்கள் நேற்று உடைக்கப்பட்டு திருட்டு



மட்டக்களப்பு, டிசெ.23

மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள இரண்டு இந்து ஆலயங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

300 வருடங்கள் பழைமை வாய்ந்த ஆரையம்பதி எள்ளிச்சேனை பிள்ளையார் ஆலயம் மற்றும் 100 வருடங்கள் பழைமை வாய்ந்த ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம் ஆகிய னவே உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள் ளன.

> "–"
> நாணயத் தாள்களும் கொள்ளையிடப் பட்டுள்ளன.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் ஆலய பரிபாலனசபையினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கிருந்த நாணயத்தாள்களும் அபகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான் குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)


இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**முருகேசு பாக்கியநாதன்** (சொக்கர்)

(உரிமையாளர் - விநாயகர் ரேணிங் வேக்ஸ்)



மலர்வு
22.07.1948

உதிர்வு
23.12.2011

இரண்டாண்டுகள் சென்றாலும் - அப்பா
மாறுமோ உங்கள் நினைவு
எம்மைக் கண்களாய்க் காத்து,
கரங்களில் ஏந்தி சிறப்புடனும்
அருமை பெருமையாகவும்
வளர்த்தீர்கள் அப்பா!
அமைதியான பேச்சும் - உங்கள்
புன்னகை சிரிப்பும் தத்துவ
வார்த்தைகளும் மாறாத ரணமாக
பதித்து விட்டு சென்றீர்கள் அப்பா!
உண்மை அன்பின் ஒளியே!
எங்கள் அப்பாவே!
இன்னமும் தேடுகிறோம்.....வாடுகிறோம்
எங்கு சென்றீர்கள்? ஏன் எமைப் பிரிந்தீர்கள்.

என்றும் உங்கள் உயிருடன் கலந்திருக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
ஞானப்பிரகாசம் வீதி, மல்வம், உடுவில்.

(42096) (12.3.6)

# கடன் பெறுவதற்காகத் தகவல்களை திரிபுபடுத்தி வெளியிடுகின்றது அரசு

*நாடாளுமன்றில் அநுரகுமார குற்றச்சாட்டு*




கொழும்பு.டிசெ.23

அரசு, கடன்களைப் பெறுவதற்காக மத்திய வங்கி மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தகவல்களைத்திரிபுபடுத்தி வெளியிடுகிறது எனத் தெரிவித்த ஜனநாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, இது விவகாரம் தொடர்பில் ஆராய ஆணைக் குழுவொன்று நிறுவப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அத்துடன், 2013ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் 5.5 சதவீதமாக இருந்த பொரு ளாதார வளர்ச்சி வேகத்தை 6 சதவீதமாக மாற்றுமாறு அழுத் தம் கொடுக்கப்பட்டது என இலங்கை குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் தேசிய கணக்குப் பிரிவு பணிப்பாளரே வாக்கு மூலம் அளித்திருக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிதி திட்டமிடல் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

மேலும் அவர் தெரிவித் தவை வருமாறு:-

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ஒரு குடும்பமும், அதற்கு நெருக்கமானவர்களும் மட்டுமே பொறுப்புக் கூற வேண்டும்.

அதைவிடுத்து, பி.பி.ஜயசுந்தரவை குற்றஞ் சாட்டுவதில் பயனில்லை. மத்திய வங்கியின் பொருளாதாரத் தகவல் பற்றி மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால், இன்று அதை நீங் கள் இல்லாது செய்துள்ளீர்கள்.

2013ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 5.5 சதவீதமாக இருந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை 6 சதவீதமாக மாற்றுமாறு தனக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது என இலங்கை குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் தேசிய கணக்குப் பிரிவின் பணிப்பாளர் வாக்குமூலம் அளித்துள்ளார். அந்த அதிகாரிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டால் அதற்கு நீங்கள் பொறுப்புக் கூறவேண்டும்.

மத்திய வங்கி மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களத்தின் தகவல்கள் இரவு நேரங்களில் தொலைபேசி அழைப்புகளூடாக திரிபுபடுத்தப்படு கின்றன.

எனவே, இது குறித்து ஆராயப்படவேண்டும் - என்றார்.

## கலகம் செய்த மாணவரின் பெறுபேறு இடைநிறுத்தம்

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு*




கொழும்பு.டிசெ.23

அண்மையில் நடந்த ஜி.சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையின் போது அம்பலாங்கொடை தேவானந்த மகாவித்தியாலயத்தின் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை விதிகளை மீறி அநாகரிகமாக நடந்து கொண்ட ஐந்து மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் இடை நிறுத்தப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் என். ஜே. புஷ்பகுமார தெரிவித்திருக்கிறார்.

இந்த மாணவர்கள் மீது தீவிர ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணை முடிவில் அவர்கள் மீதான குற்றச் சாட்டுகள் நிரூபணமானால் தற்சமயம் இடை நிறுத்தப்பட்டுள்ள அவர்களது பரீட்சைப் பெறுபேறுகள் முற்றாகவே நிராகரிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார், பரீட்சை நிலையப் பொறுப்பாளர் மற்றும் தேவானந்த மகாவித்தியாலய அதிபர் ஆகிய மூன்று தரப்புகளிலிருந்தும் அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கைகளின் பிரகாரம் இறுதி முடிவு எடுக்கப்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நால்வருக்கு தூக்கு



கொழும்பு.டிசெ.23

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கொலை செய்து அவரிடமிருந்து பொருள்களை களவாடியதுடன் ஏனைய மூவரை அங்கவீனமாக்கினர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட 4 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நால்வர் மீதும் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் நிரூபணமாக்கப்பட்டதையடுத்து மொனராகலை மேல் நீதி மன்றம் கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் தீர்ப்பை வழங்கியது.

பண்டல்கும்பர - புத்தல வீதியில் வெஹரகொட பகுதியில் 2002 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் திகதி கைக்குண்டை வெடிக்கவைத்தே பொலிஸ் கான்ஸ டபிள் படுகொலை செய்யப் பட்டார். அத்துடன் இன்னும் மூவர் அங்கவீனமாக்கப்பட்ட னர்.

இச்சம்பவம் தொடர்பில் குறித்த நால்வர் மீதும் சுமத்திப்பட்டிருந்த குற்றச் சாட்டுகள் நிரூபணமாக்கப்பட்டதையடுத்தே அவர்களை குற்ற வாளிகளாக இனங்கண்ட மொனராகலை மேல் நீதிமன்றம் அவர்களுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. (ஓ-சி)

## ஐ.தே.க.விலிருந்து நீக்கப்பட்டார் மேல்மாகாண உறுப்பினர் நிமால்

மேல் மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் நிமால் ஆர் பீரிஸ், உடன் நடைமுறைக்கு வரும் வகையில் கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பை மீறிச் செயற்பட்டு வருவதன் காரணமாக அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று கட்சியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் வேறு கட்சியில் உறுப்பினர் அந்தஸ்து பெற்று அமைப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால் ஐ.தே.க. தலைமைத்துவ சபையின் ஆலோசனைக்கு அமைய கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவால் நிமால் ஆர் பீரிஸ் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-சி)



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 55 ஆவது வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய பிரகடனம் திஸ்ஸ அத்தநாயக்கவால், ரணில் விக்கிரம சிங்க முன்னிலையில், கருஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டது. (ஓ)

## விநாயகர் சிலையை விற்க முயன்றோர் மடக்கிப்பிடிப்பு

கொழும்பு.டிசெ.23

மாணிக்கக்கற்கள் பதிக்கப்பட்ட பழைய விநாயகர் சிலையை மூன்றரை கோடி ரூபாவுக்கு விற்க முயன்ற நால்வரை அநுராதபுரம் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

வர்த்தகர்கள் போன்று மாறுவேடத்தில் சென்ற பொலிஸாரே குறித்த நால்வரையும் கைது செய்துள்ளனர் என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போர் முடிவடைந்த பின்னர் இந்துக் கோவில்கள் உடைப்பும் சுவாமி சிலைகள் திருடப்படுவதும் நாளாந்தம் அரங்கேறிவருகின்றன.

"-"

மாணிக்கக்கற்கள் பதிக்கப்பட்ட பழைய விநாயகர் சிலையை மூன்றரை கோடி ரூபாவுக்கு விற்க முயற்சி.

முதலில் வடக்குக் கிழக்கில் ஆரம்பமான கோவில் உடைப்புகள், விக்கிரகம் திருட்டுகள் தற்போது நாடு முழுவதும் தமிழர்கள் வாழும் பகுதிகளில் அரங்கேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-சி)

## தெற்கில் நத்தார் பண்டிகை களைகட்டியது வர்த்தகம்



கொழும்பு.டிசெ.23

தென்னிலங்கையில் நத்தார் பண்டிகை வர்த்தகம் இந்த நாள்களில் களைகட்டியுள்ளது. கிறிஸ்தவ மக்கள் வாழும் பகுதிகளில் வியாபாரம் சுறுசுறுப்பாக இடம்பெறுகிறது.

மக்கள் பண்டிகைக்குத் தேவை யான பொருள்களையும் துணிவகைகளையும் நகரப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்து வருகின்றனர். வீதியோரங்களில் கிறிஸ் மஸ் மரம் விற்பனையும் அமோகமாக இடம் பெறுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (ஓ-சி)

# மஹிந்த அரசுக்கு எதிராக படை திரண்டு போராட வாரீர்

*எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு*

கொழும்பு.டிசெ.23

"எதிர்க்கட்சியில் இருந்தது போதும். அடுத்த வருடத்தில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக கட்சியின் செயற்பாட்டாளர்களிடம் முக்கிய பல பொறுப்புகளை ஒப்படைத்து அவற்றை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களையும் வழங்கியுள்ளோம். அரசுக்கு எதிரான அமைப்புகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். பொறுத்தது போதும். அனைவரும் வீதிக்குஇறங்கிசட்டைக்கையை மடித்துக்கொண்டு உறுதியுடன் போராட வேண்டும்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசி யத் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றகட்சியின்55ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐ.தே.கட்சிக்குள் பிரச்சினையை ஏற்படுத்தி கட்சியை அழிக்கும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்படுகின்றார். போரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் பின்னர் நாட்டை அபிவிருத்தி செய்வோம் என அரசு கூறியது.

ஆனால் போர்க் காலத்தைவிட இப்போதுதான் மக்கள் அதிகமாகத் துன்பப்படுகின்றனர். முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனாநாயக்க முதல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலம் வரை 11பேர் நாட்டை ஆட்சி செய்துள்ளனர். அவர்களின் காலத்தில் நாட்டின் தேசியகடன்1.8றில்லியன்களாகவே இருந்தது.

ஆனால் 2006 முதல் தற்போது வரை யான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இந்தக் கடன் தொகை 4.8 றில்லியன்களாக அதிகரித்துள்ளது. நாட் டின் பொருளாதாரம் முழுமையாக பாதிப்படைந்துள்ளது.

எனவே, இவ்வாறான நிலையில் இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் செயற்பட வேண்டும். ஒன்று எமக்குள் வாதப்பிரதிவாதங்களை வைத்துக் கொண்டு நாம் முன்னோக்கிச் செல்ல முடியாது. அதனால் அவற்றை நாம் பேசித் தீர்க்க வேண்டும். இரண்டாவது, ராஜபக்ஷ அரசுக்கு எதிராக மக்களை அணிதிரட்ட வேண் டும்.

ஏனெனில் எம்மால் எப்போ எதிர்க்கட்சியில் இருந்து கொண்டிருக்க முடியாது. உங்களாலும் அது முடியாது.

எனவே, அடுத்த வருடத்தில் ஐ.தே.க. ஆட்சியை நாட்டில் நிலைநிறுத்த வேண்டும். அதற்காக எனது பொறுப்புகள் அதிகாரங்கள் ஆகியவற்றை கட்சியில் உள்ள ஏனையோருக்கும் பகிர்ந்தளித்துள்ளேன்.

நாம் அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும். எனவே, சட்டைக்கையை மடித்துக்கொண்டு வீதிக்கு இறங்கிப் போராட வேண்டும் - என்றார். (ஓ-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெள்ளம் தலைக்கு மேல் உயர்ந்த பின்னரும் கனவுக்கு ஒவ்வாத கருத்துக்கள் ஏன்?

வைத்தியசாலைக் கட்டடத்தில் இருந்து குதித்துச் சாவைத் தவிர வேறு வழி இல்லை.-

கடந்த பத்து நாள்களுக்கும் கூடுதலாகப் பணிப்புறக்கணிப்புச் செய்துவரும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தொண்டர் பணியா ளர்களில் ஒருவரே மனம் கனன்று மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

வைத்தியசாலையின் ஏனைய பணியாளர் களுடன் தோளோடு தோள் நின்று உழைத்தவர்கள். போதனா வைத்தியசாலையின் தொண்டர் பணியாளர்கள். அந்த வைத்தியசாலையில் அனும திக்கப்படாமல், தமது உறவினர்களில் ஒருவரை- நோயாளி ஒருவரைப் - பார்வையிடுவதற்குச் சென்றவர் ஒருவருக்கும் இது மனதை உருக்கும் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை.

தொண்டர் பணியாளர்கள், வைத்தியசா லையின் ஏனைய நிரந்தர பணியாளர்களைப் போலவே ஓடி ஓடி உழைத்தவர்கள். மெய் வருத் தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார் என்று சொல்வதற்குத் தகுதி பெற்றவர்கள் அவர்கள்.

ஆனால், யாழ்.போதனா வைத்தியசாலையின் நிர்வாகமும், அதனைச் சார்ந்து நிற்கும் அதிகாரி களும், பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு போய் விடும் என்ற எண்ணத்தில்-

தொண்டர் பணியாளர்களுக்கு அவர்களுக்கு உரிய உரிமையை வழங்காது தமது அதிகாரத் தனத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர் என்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அது மட்டுமன்றி தம்மை ஏமாற்றும் செயல் என்றும் ஆதங்கப்படுகின்றனர்.

சுகாதாரத் தொண்டர்கள் ஒரு சில வருடங்களே இந்தப் பணியில் ஈடுபடுகின்றனர் என்று தில்லுமுல்லுப் பண்ணவும், சமரசப் பேச்சுகளில் ஈடுபட்ட சில அதிகாரிகள் முயன்றனர் என்றும் தகவல் வெளிவந்துள்ளது. ஆனால், தாம் 1997 ஆம் ஆண்டு தொடக்கம் பணியாற்றுவதாக, சுகாதாரத் தொண்டர்கள் ஆதாரங்களை வெளியிட்டதும், ஆவணங்களை மேசையில் தூக்கிப் போட்டதும் அதிகாரிகள் திணறியதாகவும் தகவல்கள் உண்டு.

சுகாதாரத் தொண்டர்களின் போராட்டத்தால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் உரிய சிகிச்சையை உரிய வேளையில் பெறமுடியவில்லை.

போர்க் காலத்தில்- அப்போதைய சூழலில் - நோயாளிகளை மேல்மாடிக்குத் தூக்கிச் சென்று சிகிச்சை பெற உதவியவர்கள் சுகாதாரத் தொண்டர்களே என்பதனையும், அதிகாரிகள் மறந்துவிட்டார்கள். அக்காலத்தில் அவர்களின் சேவையைப் பெற்ற நோயாளிகளின் இதயங்களும், அவர்களுக்கு ஆதரவாகவே உள்ளன என்பதனையும் புதிய அதிகாரிகள் மறந்துவிட்டார்கள்; புரிந்துகொள்வதாக இல்லை.

சுகாதாரத் தொண்டர்களில் பலர், ஒன்பது ஆண்டுகளுக்குக் கூடுதலாகவும் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றி உள்ளதாகத் தகவல்கள் உண்டு. வழங்கப்பட்ட கொடுப்பனவு போக்குவரத்துக்கே போதாத நிலையிலும் தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நிலையில் முழு எதிர்பார்ப்போடு, அரசை நம்பி, அதன் நிர்வாகத்தை நம்பி, தொடர்ந்து பணியாற்றி வருபவர்கள் அவர்கள்.

அவர்களிடம் இருந்து அரச சேவையைச் சுரண்டுவதற்குத் துணை நின்ற அதிகாரிகள், இப்போது அவர்களை "அம்போ" எனக் கைவிடும் நிலைக்கு மாறியிருக்கிறார்கள்; மாற்றப்பட்டு இருக்கிறார்கள். இதுவும் ஒருவகைத் துரோகமே.

மனிதாபிமான நோக்கை ,அதன் அடிப்படையில் , சுகாதாரத் தொண்டர்களின் நியமனத்தை - விவகாரத்தை- நோக்குவதற்குப் பலமற்றவர்கள்-

அதிகாரத் தோரணையில் அணுகுவதற்குத் துடிப்பது நியாயமா? அல்லது தர்மம்தானோ..?

இவை யாவற்றுக்கும் மேலாக, "தர்ம ஆஸ்பத்திரி" என்று எமது மூத்த பரம்பரையினால் சிலாகிக்கப்பட்ட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை-

தனியார்துறை ஆஸ்பத்திரிகள்- பணம் பெற்றுக்கொண்டு வைத்திய சேவை வழங்கிய ஆஸ்பத்திரிகள்- குடாநாட்டின் பிரதான பிரதேசங்களில் நிறுவப்பட்ட வேளைகளிலும், குடாநாட்டின் நோயாளர்களுக்கு இலவச சேவை வழங்கும் அரச ஆஸ்பத்திரி கள் தமது சேவைகளில் "சோடை" போனமை மிகக் குறைவு என்பது எந்தத் தருணத்திலும் ஓங்கி உயர்ந்து நின்றதனையும் உணர்ந்து இவ்வேளை விரிவாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரதான அம்சம்.

வெள்ளம் தலைக்கு மேல் உயர்ந்த பின்னரும், கவைக்கொவ்வாத கருத்துக்களை முன் வைக்கும் அரச அதிகாரிகள், மக்களுக்கு உதவுவதை விட, அவர்களுக்கான சேவையை மழுங்கடிக்கும் சூக்குமம் வேண்டாமே..! அது கொய்யப்பட வேண்டிய காலம் இது.

# நெடுந்தீவு றெக்ஷயன் கொலை:

## கமலேந்திரனின் சகோதரி தெரிவித்துள்ள விவரங்கள்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

*சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த பத்தியின் தமிழாக்கம் ஒன்று கடந்த 10.12.2013 உதயனில் பிரசுரமாகியிருந்தது. எனினும் சண்டே ரைம்ஸில் வெளியான குறித்த பத்தியில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கமலேந்திரனின் சகோதரி என்று அடையாளப்படுத்தப்படும் வானதி என்பவர் மறுப்புக் கடிதம் ஒன்றை அந்தப் பத்திரிகைக்கு அனுப்பியிருந்தார். ஆயினும் தமது கட்டுரையின் நம்பகத் தன்மையையும் குறித்த கடிதத்தின் தெரிவிக்கப்பட்ட மறுப்புகளுக்கான பதிலையும் சண்டே ரைம்ஸ் நேற்றைய பதிப்பில் வெளியிட்டுள்ளது. அதன் தமிழாக்கமே இது.*

அரசியல் சிக்கல்கள் விரிவடைந்து கொண்டிருக்கும் நிலையில் கடந்த டிசெம்பர் 8 ஆம் திகதி வெளியான எமது அரசியல் விமர்சனம் தொடர்பாக உப்புவெளி 3ஆம் மைல் போஸ்டில் ஜோசப் ஒழுங்கையிலிருந்து கந்தசாமி வானதி என்பவர் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார். நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டேனியல் றெக்ஷயனின் கொலை பற்றியது இந்த விடயம். இந்தக் கொலை தொடர்பாக வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவரும்,ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தருமான கந்தசாமி கமலேந்திரன் மற்றும் றெக்ஷயனின் மனைவி அனிதா ஆகியோர் கைதாகி இப்போது விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். வானதியின் கடிதம் கிடைப்பதற்கு முன்பதாக ஈ.பி.டி.பியின் பேச்சாளர் நெல்சன் எதிரிசிங்க என்பவர் தொலைபேசியில் அந்தக் கட்சி சார்பில் பேசி அந்தக் கடிதம் கிடைத்திருக்கிறதா என்பதை உறுதி செய்ய முயன்றார். அந்தப் பெண் திருகோணமலையில் இருந்தாலும் கடிதம் கொழும்பிலிருந்தே தொலைநகல் செய்யப்பட்டிருந்தது.

வனிதா திருகோணமலை உப்புவெளி முதியோர் இல்லத்தில் இருப்பது தேடிக் கண்டுபிடிக்கப்பட்டது. தனது தம்பியார் கே.கஜேந்திரன் என்பவர் அமைச்சரும், ஈ.பி.டி.பி தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஒருங்கிணைப்பு செயலாளராகப் பணிபுரிபவராகவும் அவர் தமக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்ததாகவும் வானதி கூறினார். தங்கள் தகப்பனாரைப் பற்றி ஒரு குறிப்பு இருப்பதாகவும் அதனால் அந்தக் கடிதத்தை எழுதும்படியும் அவர் கோரியதாக வானதி கூறினார். -கட்டுரையில் எனது சகோதரர் பயிற்சி பெற்ற கெரில்லா போராளி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் எனது தந்தை கட்சிக்காக நிதி சேகரிக்க கள்ளிறக்குவதில் ஈடுபட்டவர் என்றும் கமலேந்திரன் கள்ளிறக்குபவரின் மகன் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. இவைகளால் எமது குடும்பம் உள ரீதியில் பாதிக்கப் பட்டுள் ளது. அத்துடன் குடும்பத்திலும் பெரிய பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது என்று தெரிவித்துள்ள அவர் எமது குடும்பத்தில் சோபா என்ற பெயரில் எவருமே கிடையாது. நாங்கள் ஏழு சகோதர, சகோதரிகள். நான்கு பெண்கள், மூன்று ஆண்கள். எனது சகோதரன் கமலேந்திரன் 1990 ஆம் ஆண்டில்தான் ஈ.பி.டி.பியில் சேர்ந்தவர். அதன் பின்னர் அவர் பற்றிய விவரங்கள் ஒன்றும் எங்களுக்குத் தெரியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சண்டே ரைம்ஸ் வெளியிட்ட விவரங்களின் காரணமாக எழுந்துள்ள மிகச் சிக்கலான சங்கடங்களைச் சமாளிக்க ஈ.பி.டி.பி முயற்சி செய்கிறதோவென்ற வகையில் இப்பொழுது சிறிது சந்தேகம் எழுந்துள்ளது.

கமலேந்திரன் பயிற்சி பெற்ற ஈ.பி.டி.பியின் கெரில்லா போராளிதான் என்பதை உயர்மட்ட புலனாய்வு அதிகாரிகள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். 1990 ஆம் ஆண்டுக்குப் பல காலம் முன்பிருந்தே அவர் ஈ.பி.டி.பியில் இருந்து வந்தவர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிஸ்டல் துப்பாக்கியொன்றுடன் உருமறைப்பு ஆடையில் அவர் இருக்கும் படம் ஒன்றும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதுவே அவரை வெளிப்படுத்துவதாக இருந்துள்ளது.

எதுவானாலும் வானதி தனது தந்தை கள்ளிறக்கும் தொழிலாளி அல்ல என்று தெரிவித்திருப்பதானது அவர்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டிருந்த போதிலும், சரியானதே. தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதற்குப் பின்னர் "அல்ஜஸீரா" தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்திருந்த போது கந்தசாமி கமலேந்திரனை பேட்டி கண்டிருந்தார். அதன் விவரம் சில தமிழ்த் தொலைக்காட்சிகளில் ஒளி பரப்பப்பட்டிருந்தன. அதில் ஒன்று தர்ம குலசிங்கம் தர்மேந்திரா என்பவரால் நடத்தப்பட்ட தொலைக்காட்சி. அதில் வானதி அல்லது ஈ.பி.டி.பியினர் மறைக்க முயலும் விடயங்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன.அதன் சில பகுதி :

*கேள்வி :* உங்கள் குடும்பத்தவர்களை துரோகிகள் என்று விடுதலைப்புலிகள் ஏன் கருதினார்கள் என்பதை விளக்க முடியுமா?

*பதில் :* 1989 முதற்கொண்டு எமது குடும்பத்தினர் பெரும் கஷ்டத்தை அனுபவித்திருந்தார்கள். நாங்கள் எமது வீட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்டோம். நாங்கள் நாயன்மார்கட்டு, அச்சுவேலி மற்றும் திருகோணமலைப் பகுதிக்குச் சென்றோம். உறவினர்க ளின் வீடுகளில் ஒளிந்திருந்தோம். புலிகளின் துப்பாக்கிகள் ஓய்ந்தவுடன் நாம் எமது வீட்டுக்குத் திரும்பினோம். இருந்தாலும் அமைதியாக வாழவில்லை. எமது குடும்பம் மட்டுமல்ல, துரோகிகளாக புலிகளால் கருதப்பட்ட பலர் ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இருந்தார்கள்.

*கேள்வி :* உமக்கு அப்பொழுது 15 வயது. புலிகள் எவ்வாறு உம்மை நடத்தினார்கள்?

*பதில்:* ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்கள் அனைவரும் கைவிலங்கிடப்பட்டிருந்தனர். இன்றும் கூட தழும்புகளைக் காணலாம். நாங்கள் கால்நடைகள் போல் நடத்தப்பட்டோம்.

*கேள்வி :* உங்கள் கிராமத்திலிருந்து எவ்வாறு துரத்தப்பட்டீர்கள் என்று விளக்க முடியுமா?

*பதில் :* நாட்டைவிட்டு வெளியேறுமாறு நாம் பணிக்கப்பட்டோம். எம்மிடமிருந்த பணம் மற்றும் தங்கம் முதலியவற்றை கடத்தல்காரர்களான புலிகளிடம் கொடுத்துவிட்டோம். மன்னாருக்கப்பால் நாம் கடற்படையால் எதிர்கொள்ளப்பட்டோம். வள்ளம் கரைக்குக் கொண்டு போகப்பட்டு நாங்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டோம்.

*கேள்வி :* கொழும்பில் உங்கள் அனுபவம் எப்படி இருந்தது?

*பதில் :* ஈ.பி.டி.பியினால் மூன்று முகாம்கள் நடத்தப்பட்டன. ஒன்று கொட்டாஞ்சேனை விவேகானந்த பாடசாலையில் அமைந்திருந்தது. டக்ளஸ் தேவானந்தாவுக்கு நாங்கள் முகாமில் இருப்பது அறிவிக்கப்பட்டது. நாங்கள் திருகோணமலைக்குச் சென்று அங்கிருந்து பின்னர் கொழும்புக்குச் சென்றோம்.

*கேள்வி :* டக்ளஸ் தேவானந்தாவை முதன் முதல் சந்தித்த உமது அனுபவத்தைக் கூறவும்.

*பதில் :* முகாமில் அவர் 10 நாள்களுக்கு ஒரு தடவை வந்து பார்த்தார் என்பது நினைவிருக்கிறது. எங்களுக்கு உணவும், சிறுவர்களுக்கு இனிப்புகளும் கொடுத்தார். மக்களோடு கண்ணியமாகக் கதைத்தார். அவருக்கு கீழே ஒருநாள் பணிபுரிய வேண்டும் என்று நான் நினைத்ததுண்டு. அதன் பிறகு அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தேன்.

*கேள்வி :* உங்கள் குடும்பத்துக்கு ஈ.பி.ஆர். எல்.எப் புடன் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளதா?

*பதில் :* ஈ.பி.ஆர்.எல்.எப்பின் நிறுவுநர்களில் ஒருவர் என் தந்தை அவர் கண்ணன் என்று அறியப்பட்டார். என் தாயாரும் இணைந்து கொண்டார். அவர் கல்வயல் அக்கா என்று அழைக் கப்பட்டார்.

*கேள்வி :* உங்கள் இளம் வயதில் ஏற்பட்ட அனுபவம் ஏதாகிலும் நினைவிருக்கிறதா?

*பதில் :* காரைநகர் கடற்படை முகாம் தாக்கப்பட்டது பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். தேவானந்தா அதில் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தார். முதலாவது ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளி கொல்லப்பட்டார். அவ்ர் தேவானந்தாவின் சகோதரி சோபா. அதன் பின்னர் எனது சகோதரிகளில் ஒருவரும் சோபா என்று பெயரிடப்பட்டார். காயமடைந்த பல போராளிகளுக்கு எமது வீட்டில் சிகிச்சையளிக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் எமது சகோதரர்களில் இருவர் பிரேம் மற்றும் ராகவன் வீட்டை விட்டுச் செல்கையில் கடத்தப்பட்டு புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்திய அமைதி காக்கும் படையினால் பின்னர் அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டிருந்தன.

*கேள்வி :* உங்கள் தந்தை மீது புலிகள் இரக்கம் காட்டியிருப்பதாகத் தெரிகிறது. அது சரியா?

பதில் : அவர் நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டார். ஈ.பி.ஆர்.எல்.எப்.பை புலிகள் தடை செய்திருந்த காலம் ஒன்றிருந்தது. அந்தக் காலத்தில் ஈ.பி.எல்.ஆர். எப்பின் மூன்று கள்ளுத் தவறணைக ளுக்கு எனது தந்தை பொறுப்பாக இருந்தார்.

அவர்கள் விதித்த நிபந்தனைகளில் ஒன்று எனது தந்தை ஒரு கள்ளுத் தவறணையை நடத்த வேண்டும் என்பது. அதற்கு என் தந்தை சம்மதம் தெரிவித்தார். இந்தச் சமயத்தில் இந்திய அமைதிப் படை இருந்தது. எனது தந்தை பொறுப்பாய் இருந்த போது தினமும் புலி உறுப்பினர்கள் வந்து வசூலைப் பெற்றுச் செல்வார்கள். ஒரு நாள் தமிழ்ச்செல்வன் அப்பொழுது தினேஷ் என்று அறியப்பட்டவர் வசூலுக்காக வந்திருந்தார். என் தந்தை அங்கு இருக்கவில்லை. என் தாயார் வசூல் பணத்தைக் கையளித்தார். ஆனால் அதில் ஆயிரத்தைத் திரும்பக் கொடுத்தார். எதற்கு என்று கேட்டபோது அவர் பதில் ஒன்றும் கூறவில்லை. அடுத்தநாள் பாப்பா மற்றும் குணா ஆகிய புலிப் போராளிகள் வந்தனர். எமது தந்தை மந்துவில் முகாமுக்கு உடனடியாக வரவேண்டும் என்று தெரிவித்தனர். எனது தந்தை ஆபத்தை உணர்ந்து அம்மாவையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சாவகச்சேரி சென்றடைந்தார். வீதியோரத்திலிருந்த அமைதிப் படை முகாமில் சரணடைந்தார். அதன் பிறகு புலிகள் எமது குடும்பத்தவர்களை கொடுமைப்படுத்தியே வந்தார்கள். எனது தந்தை கொழும்புக்குத் தப்பிச்சென்று தேவானந்தாவின் ஆதரவில் இருந்தார். - இதுவே அந்தப் பேட்டியில் உள்ள முக்கிய விடயங்கள்.

### உண்மையை அழிப்பது சாத்தியமில்லை

முதியோர் முகாமில் வாழுகின்ற கமலேந்திரனின் சகோதரி ஒருவரை கடிதம் ஒன்றை எழுதும்படி செய்து ஒரு திருப்பத்தை ஏற்படுத்திவிட ஈ.பி.டி.பி முயன்றுள்ள போதிலும் உண்மையை மறைத்துவிட முடியாது. இந்த மாதிரி தந்திரங்களில் ஈ.பி.டி.பி ஈடுபடுவதானது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி அரசுக்கு மேலும் சங்கடங்களையே உருவாக்கி நிற்கின்றது.

ஜெனிவா மனித உரிமை சபையை எதிர்கொள்வதற்கு சகலவிதமான வசதிகளையும் ஒருங்கிணைத்து செயற்படுவதற்கு ராஜபக்ஷ அரசு முயற்சித்துக் கொண்டிருக்கும் வேளை இது.

இப்போதைய அரசு ஈ.பி.டி.பியை மட்டுமல்ல குட்டிப் போர்த் தலைவர்கள் போல் மாற்றிவிட்டு குற்றமிழைத்துக் கொண்டிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாக வேண்டும். அதன் மூலம் அதன் நம்பகத்தன்மையை நிலைநாட்ட வேண்டும். அரச கூட்டணி இனிவரும் தேர்தல்களிலும் வெற்றி பெறுவதாக இருந்தாலும் அதில் உள்ள குறைபாடுகள் பெரும் பின்னடைவுகளையே ஏற்படுத்துவதாய் அமையும்.

# இளைஞர்களின் கையில்தான் நாடு

**மதுசாரத்துக்கு எதிரான இளைஞர் அணியின் மாநாட்டில் வடமாகாண முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையில் இருந்து...**

இன்றைய இளைஞர்கள், யுவதிகள்தான் எமது வருங்காலத் தலைமைகள். அவர்களை நம்பித்தான் எமது கலைகள், கலாசாரங்கள், மதங்கள், பண்பாடு, பாரம்பரிய வாழ்க்கைமுறை, பொருளாதாரம், அரசியல் யாவும் இருக்கப் போகின்றன. அவர்கள் தமது கடமைகளையும், கடப்பாடுகளையும் கையேற்க முன்வராவிடில் நாம் இன்று அவர்கள் சார்பில் எடுக்கும் சகல நடவடிக்கைகளும் விழலுக்கிறைத்த நீர் ஆகிவிடும். இப்படியான சூழலில்தான் இளைஞர்கள் சேர்ந்து அணி அமைத்து மதுசாரம், சிகரட், போதைப் பொருள் பாவனை போன்றவற்றை இளைஞர் சமுதாயத்திடம் இருந்து தவிர்க்க, தடுக்க நடவடிக்கைகள் எடுத்து வருவது வரவேற்கப்பட வேண்டிய ஒரு கைங்கரியம்.

### எங்கிருந்து வருகின்றது.....?

போருக்குப் பின்னர் 'மறைமுகமான ஒரு காரியம்' நடைபெற்று வருவதாக நான் உணர்கின்றேன். அதாவது வடமாகாண இளைஞர், யுவதிகளின் தனித்துவத்தை, சுதந்திர எண்ணங்களை, தளை நீக்க விளையும் உணர்வுகளை மழுங்கச் செய்யும் வண்ணமாக நடவடிக்கைகள் முடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. மதுசாரம், சிகரட் கம்பனிகள் ஒரு பக்கம் வெளிப்படையாகத் தமது விற்பனைகளை ஏற்றுவதற்காக நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். அதை விட கண்ணுக்குத் தெரியாத சக்திகள் போதைப்பொருள் பாவனையை மாணவ சமுதாயத்தினரிடையே பெரிதும் பரவவிட்டு வருகின்றனர். யாரூடாக இவை நடைபெறுகின்றன என்பதில் பலத்த சந்தேகம் எமக்கு இருந்தாலும், வெளிப்படை யாக அது பற்றிக் கூற முடியாமல் இருக்கின்றது. ஆனால் நாட்டின் மிக உச்ச மட்டத்தில் அரசியல் பதவி பறிபோகும் அளவுக்குப் போதைப் பொருள் விநியோகம் காரணமாக அமைந்துள்ளதென்றால் எங்கெல்லாம் இருந்து எமக்குப் பாதிப்புக்கள் வரக் கூடும் என்பதை நாங்கள் ஊகித்துணர வேண்டும்.

### இளம் சமூகத்தை நாம் பாதுகாக்க வேண்டும்

சில தடவைகளில் குற்றங்களைப் புரிபவர்களே அதே குற்றங்களைத் தடுக்கும் விழாக்களில் முன்னின்று நடத்துவார்கள். குற்றங்களைப் புரிந்துகொண்டே, குற்றத் தடுப்புக்களில் ஈடுபடுவதாக வெளி உலகத்துக்குக் காட்டுவார்கள். சாதுர்யமான அவர்கள் நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல.

எது எவ்வாறாயினும் எமது மாணவ சமுதாயத்தை நாம் தான் பாதுகாக்க வேண்டும். அவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கையில் எமது இளைஞர், யுவதிகள் ஈடுபாடு காட்டுவது மகிழ்ச்சி தருகின்றது.

### முதியவர்களுக்கு எதிரானதல்ல

நான் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் வடமராட்சியில் ஒரு நிகழ்வில் ஒரு வயோதிபரைச் சந்தித்தேன். மிகத் திடகாத்திரமாகக் காணப்பட்ட அவருடன் பேசத் தொடங்கினேன்.

அவர் தன்னைப் பற்றிச் சொன்னார். நான் அதிகாலை 4 மணிக்கு எழுந்து சென்று துலா மூலம் தண்ணீர் இறைப்பேன். அந்த வேலை முடிந்த உடனே வயலுக்குச் சென்று களை பிடுங்குவேன், வாய்க்கால் வெட்டுவேன். இப்படி காலை 9 மணி ஆகிவிடும். தவறணைக்குச் சென்று 2 போத்தல் நல்ல சுத்தமான கள்ளு வாங்கிக் குடிப்பேன். அதுக்குப் பிறகும் வேலை தான். கொஞ்சம் ஆறியிருந்து வயலில் வேலை செய்துவிட்டு பிற்பகல் 2, 3 மணி போல 2 போத்தல் கள்ளுக் குடிப்பேன். மாலை 5, 6 மணிக்கு வீட்டுக்கு நடந்து போய் குளித்துப் போட்டு சோறு சாப்பிடுவேன். இரவு 7, 8 மணிக்கு படுக்கப்போய் விடுவேன். இவ்வாறு கூறிவிட்டுச் சிரித்தார் அந்தப் பெரியவர்.

இந்த உண்மைச் சம்பவத்தை நான் உங்களுக்கு ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் வயது வந்தவர்கள் சிலர் கள்ளை ஒரு உணவாகக் கருதி உட்கொண்டு வருகின்றார்கள். திடகாத்திரமாகவும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு எதிரானதல்ல இந்த மாநாடு. அவர்கள் தொடர்ந்து புதிதாக இறக்கிய கள்ளுப் பாவனையில் இறங்க நாங்கள் தடைகள் விதிக்கலாகாது.

### இளைஞர் திருந்த வேண்டும்

ஆனால் இன்னொரு சம்பவம் பற்றிக் குறிப்பிடுகின்றேன். அண்மையில் கேள்விப்பட்டது இது. ஒரு ஒழுங்கையினுள் ஒரு சிறிய வெட்டவெளி. மாலை 5.30 மணியானதும் நாள் தோறும் 13 தொடக்கம் 17 வயது வரையிலான இளைஞர்கள் அங்கு கூடுவார்கள். சுமார் 6.30 மணியானதும் ஒவ்வொருவராய் பியர்ப் போத்தல்கள் அங்கு கொண்டுவருவார்கள். மாலை 6.30 தொடக்கம் 7.30, 8 மணி வரையில் அந்த பியர்ப் போத்தல்களை அந்த மாணவர்கள் குடித்துக் காலி செய்து விட்டு வெறும் போத்தல்களை அருகில் இருக்கும் வீட்டுக் காணிக்குள் எறிந்து விட்டுச் செல்வர். அது பற்றிக் கேட்டால் "போத்தல் காரனுக்கு விற்று விடுங்கள் அங்கிள். பணத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறார்கள் என்று பாதிக்கப்பட்ட பக்கத்துக் காணிக்காரர் தெரிவித்தார். அது மட்டுமல்ல அவர்கள் எல்லோருமே சிகரெட் பாவிப்பதாகவும் கூறினார்.

### பெற்றோரும் பிள்ளைகளை கவனிக்க வேண்டும்

இந்தச் சிறு வயதில் வெறிதரும் பானங்களை அவர்கள் அருந்துவதும், சிகரெட் பாவிப்பதும் ஒரு புறமிருக்க இவர்களால் எப்படி வீட்டுக்குப் போய் அடுத்த நாள் பாடங்களைப் படிக்க முடியும்? நித்திரை தான் வரும். இரவு 8 மணி வரைக்கும் பெற்றோர் அவர்களைத் தேடாது இருக்கின்றார்கள் என்றால் ஏதோ பொய் சொல்லி விட்டு அவர்கள் குடிக்கும் இடத்துக்கு வந்து விடுகிறார்கள் என்பது அர்த்தம் அல்லவா? வழக்கமாக பிரத்தியேக வகுப்புக்குச் சென்றதாகக் கூறுவார்கள் என்று நம்புகின்றேன். தாய், தந்தையர்க்குத் தங்கள் வேலைகளைக் கவனிக்க நேரமில்லை. அதனால் இளைஞர், யுவதிகள் வளரும் விதத்தை அவர்கள் சற்றேனும் கூர்ந்து பார்ப்பதில்லை. இதனால் எமது மாணவ சமுதாயம் சீரழிந்து போகின்றது.

எமது இளைஞர்கள் உடல் ரீதியாக முழு வளர்ச்சி அடைய முன்பே இந்த மதுசாரப் பாவனையால் தமக்குத் தாமே பல கெடுதல்களை வரவழைத்துக் கொள்கின்றார்கள். இரு உதடுகளும் நாக்கு உட்பட சகல பிஞ்சு உறுப்புக்களும் இளமையிலேயே மரத்துப் போகின்றன. இதை உணராமல் குடிப்பவர்கள் தமது ஒப்பான வயதில் இருக்கும் மற்றைய மாணவர்களையும் தமது பழக்கத்துக்கு கட்டாயமாக மாற்ற முயற்சிக்கின்றார்கள். மதுசாரம் உடலுக்குள் சென்ற பின்னர் அதனை அகற்றுவதற்காக ஈரல், இதயம், சுவாசத்தொகுதி, குருதிச் சுற்றோட்டத் தொகுதி போன்ற அவயவங்கள் மிகவும் கடுமையாக வழக்கத்துக்கு மாறாக இயங்க வேண்டும். இளைஞர்கள் இதன் காரணத்தினால் நாளடைவில் சீரான உடல் நலத்தை இழந்து விடுகின்றார்கள். இதனால் பின்னாளில் குடும்ப வாழ்க்கையே பாதிக்கப்படுகின்றது.

### உறவு நிலையில் பாதிப்பு


ஒரு மாணவன் தந்தை அவசரத் தேவைக்காகக் கடன் கேட்டதாகக் கூறி தனது தந்தையாரின் மிகக் கிட்டிய நண்பரிடம் கடன் வாங்கித் தனது நண்பர்களுக்குச் சாராயம் வாங்கிக் கொடுத்து சில நாள்கள் அட்டகாச வாழ்க்கை வாழ்ந்து வந்தான். தந்தையாரும், நண்பரும் பின்னர் எங்கோ சந்தித்திருக்கின்றார்கள். நண்பருக்கு தம்மிடம் மகனூடாக மற்றவர் கடன் வாங்கியதை அவருக்குச் சுட்டிக் காட்ட மனமில்லை பாவம்! ஏதோ வீட்டுக் கஷ்டமாக இருக்க வேண்டும் என்று எண்ணி எதுவும் பேசாமல் இருந்து விட்டார். பிரிந்து செல்லும் போது மட்டும் நண்பர் கூறினார். "உனக்கு ஏதாவது பணப் பிரச்சினை இருந்தால் யோசிக்காமல் கேள். அதில் ஒன்றும் வெட்கப்படத் தேவையில்லை" என்றார். 'இது என்ன புதுக் கதை?' என்றார் தந்தையார். மகன் வந்து அவசரத் தேவைக்கு அப்பா பணம் கேட்டதைப் பற்றி நண்பர் கூறியதைக் கேட்ட அந்தத் தந்தையாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. வீட்டுக்குப் போய் மகனைத் தாறுமாறாக 'பெல்டினால்' அடித்தார். நல்ல வேளையாக நண்பரும் அவர் பின்னால் சென்றதால் மகனை ஓரளவு காப்பாற்றக் கூடியதாக இருந்தது' "எதற்காகப் பொய் சொல்லிக் கடன் கேட்டாய்" என்ற கேள்விக்கு மகனிடம் இருந்து பதிலே வரவில்லை. பின்னர் தான் எல்லாம் வெளிச்சத்துக்கு வந்து அந்த மாணவரின் தாய், தந்தை உஷராகி விட்டனர். இப்பேர்ப்பட்ட சம்பவங்களால் குடும்பத்தில் இளைஞர்களுக்கும், பெற்றோருக்கும் இடையிலான சமூக உறவு இந்தப் பாழும் மதுசாரத்தினால் பாதிக்கப்பட்டு வருவதை நீங்கள் உணர வேண்டும்.

அதைவிட மதுசாரம் குடித்து விட்டு வருபவர்கள் தேவையில்லாமல் குடும்பத்தில் சண்டைகளை உருவாக்குவார்கள். குழந்தைகள், பெற்றோர் உறவு, கணவன்-மனைவி உறவு எல்லமே இந்த மதுசாரப் பாவனையால் பாதிக்கப்படுகின்றன. குடும்பத்தில் நிம்மதி இல்லை என்று அந்தக் குடிக்கும் நபர் குடியைக் குறைக்க நடவடிக்கை எடுக்க மாட்டார். தான் படும் பாட்டை எண்ணி மேலும் குடிக்கவே எத்தனிப்பார். இதனால் பிரச்சினைகள் நீண்டு கொண்டே போவன. கடன் தொல்லைகள், குடும்பத்தில் நிம்மதியின்மை, வாக்கு வாதங்கள், அலுவலகத்தில் வேலையில் சிரத்தையின்மை, நோய் நொடிகள் அதிகரித்தல்-இவ் வாறு பாதிப்புக்கள் நீண்டு கொண்டே போவன.

அதே நேரத்தில் குடி உங்களின் தொண்டையை இறுகப் பற்றி வைத்துக் கொண்டு தனக்கு உங்களை அடிமையாக்கும்.

### கல்வியில் உயர்வு பெற்ற யாழ்.சமூகம்

என்னுடைய இளமைக் காலத்தில் பல்கலைக்கழகத்துக்கு பலவித பாடங்களிலும் இலங்கை முழுவதும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தமிழ் பேசுபவராகவே இருந்தார்கள். மருத்துவம், சட்டம், பொறியியல், கணக்கியல், விஞ்ஞானம், கட்டடக் கலை, எழுதுவினைஞர் தொழில் என்று எந்தத் தொழிற் பாடங்களில் பார்த்தாலும் எமது தமிழ் மாணவர்களே முன்னிலையில் நின்றார்கள். காரணம் எமது பெற்றோர்கள் தமது மக்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று பேரவா கொண்டிருந்தார்கள். இன்றைய இந்த மதுசாரக் கலாசார நிலை அந்தக் கல்விக் கலாசாரத்துக்கு இடையூறாக முளைத்துவிட்டது. அத்ற் கேற்றால் போல் எமது பெற்றோர் களும் மக்களுடன் புரிந்துணர்வுடன் நடக்கப் பழகாது இருக்கின்றார்கள்.



### வன்முறைக் கலாசாரம்

இவற்றைவிட அண்மையப் போர்க் காலத்தின் நிமித்தம் எம்மிடையே வன்முறை நாகரிகம் குடிகொண்டு விட்டது. முற்றிவிட்டது என்று கூடக் கூறலாம். அதற்கு உடந்தையாக மதுசாரக் கலாசாரமும் சேர்ந்து விட்டது. தாய், தந்தையர் தமது வாரிசுகளைப் பற்றிக் கூறும் போது ஒருவித பயத்துடன் தான் தமது கருத்துக்களைப் பகிர்கின்றார்கள். அன்புடன், புரிந்துணர்வுடன் இருக்க வேண்டிய உறவு கொச்சைப் படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதுசாரக் கலாசாரம் இருக்கின்றது என்பதை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும். மது அருந்தினால் தாய், தந்தையர், உற்றார், உறவினர், முதுமை அடைந்தோர் யாவரையும் எந்தவித மரியாதையில்லாமல் அழைக்கத் தோன்றும். எம்மை மரியாதையான வாழ்க்கை முறைக்கு அழைத்துச் செல்லும் கற்றறிந்த அல்லது கண்டறிந்த சில கட்டுப்பாடுகள் மதுசாரப் பாவிப்பால் அற்றுப் போகின்றன. ஒருவித போலியான சுதந்திரம் எம்மை ஆள்கொள்கின்றது. எந்த வயோதிபரையும் 'டேய்' என்று அழைக்கத் தயங்குவதில்லை. இப்பேர்ப்பட்ட மதுசாரம் பாவிப்பாளர்கள்.

### திட்டமிட்ட திணிப்பா?

இன்று எமது இளைய சமுதாயத்திடையே மதுசாரம், போதைப்பொருள் பாவனை ஆகியன வேண்டு மென்றே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. பாரம்பரியமாக மரியாதை பேணல், பெற்றோரை மதித்தல், பண்புடைமை போன்ற குணங்களைக் கொண்டு வாழ்ந்த எமது இளைய சமுதாயம் அவற்றை நீக்கி மரியாதை தவறி, பெற்றோர், உற்றோர், ஆசிரியர் ஆகியோரை மதிக்காத ஒரு கலாசாரத்தை அவர்கள் தழுவ வேண்டும் என்ற எண்ணத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதோ என எண்ணத் தோன்றுகிறது. அத்துடன் அவர்கள் இது வரை காட்டி வந்த அவர்களின் கட்டுப்பாடும், கடும் முயற்சிகளும், சுதந்திர வேட்கையும் மழுங்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டு இப்பேர்ப்பட்ட கலாசாரம் இன்று நடைமுறையில் இருந்து வருகின்றதோ நான் அறியேன்.

### நண்பர்களால் முடியும்

இளைஞர்கள் இடையே எவ்வாறு ஒப்பானவர் நெருக்குதல் மூலம் மதுசாரப் பழக்கம் தொத்திக் கொள்கின்றதோ அதே விதத்தில் ஒப்பானவர் நெருக்குதல் காட்டி மதுசாரப் பழக்கத்தை ஒழிக்கவும் செய்யலாம். உதாரணத்துக்குப் புகைப்பிடித்தலைக் கூறலாம். புகை பிடிக்காதவர் மத்தியில் புகை பிடித்தால் தமது வெறுப்பையும், எதிர்ப்பையும் அவர்கள் வெளிக்காட்டும் போது தொடர்ந்து அந்த நபர் புகைப்பிடிப்பது கடினமாக இருக்கும். ஆகவே மதுசார, சிகரெட், போதைப் பொருள் பாவனை எவ்வாறு பரவுகின்றதோ அதே வழியில் அதை அழிக்கவும் முடியும் என்பதை உணர வேண்டும். மிகவும் கண்டிப்பான மாணவர்கள் இந்த மதுசாரப் பழக்கத்தை எம்மீது வேண்டுமென்றே திட்டமிட்டு சிலர் ஏவிவிட்டுள்ளார்கள் என்பதில் முழு நம்பிக்கை பெற்று விட்டார்களாகில் இது வேண்டாம் நமக்கு என்று தம்மைச் சுற்றியுள்ள மாணவ சமுதாயத்துக்கு அறிவுறுத்த முன்வருவார்கள். அவர்களின் கண்டிப்பு நாளடைவில் எமது இளைஞர் சமுதாயத்தை கரை சேர்க்கும் என்று நம்பலாம்.

அதே போன்று மது அருந்திய ஒருவர் புரியும் அட்டகாசங்களை அவருக்குச் சுயபுத்தி வந்த பின் அவருக்கு அடித்துக் கூறி அவர் மனதில் தம்மீது ஒரு வெறுப்பை உருவாக்குதலும் அவர்களைத் திருத்த முயற்சிக்கலாம்.

### மக்கள் ஒன்றிணைந்து விழிப்புடன் செயற்பட வேண்டும்

மதுசாரத்துக்கு எதிராக நாங்கள் யாவரும் சேர்ந்து போதுமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய காலம் வந்துள்ளது. தொடர்ந்து எமது இளைஞர்கள் போதைக்கு அடிமையானால் மதுவுக்கு அடிமையானால் தற்போது வளர்ந்து வரும் மாதுக்கள் அரவணைப்புக்கு அடிமையானால் எமது வருங்காலம் கேள்விக்கிடமாகப் போய்விடும். இங்குள்ள எமது இளைஞர்களை நுகர் இன்பங்களுக்கு அடிமையாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல குழுக்கள் இந்தத் தவறான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள் என்று தெரிகிறது. இவற்றைத் தடுக்க பொலிஸாரின் ஒத்துழைப்பு எமக்கு அவசியம் என்று கூறும் அதே வேளையில் மக்கள் சேர்ந்து தத்தமது இடங்களில் போதிய நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

இன்று கோயில்களில் விக்கிரகங்கள் காணாமற் போவது, பாலியல் வன்புணர்வுக்குஉட்படுத்தப்பட்ட பெண்கள் கிணறுகளில் உயிரற்ற சடலங்களாக மிதத்தல் போன்றவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் எவை சம்பந்தமாகவும் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படவில்லை. ஏன் என்று மக்கள் கேட்க முன்வர வேண்டும். பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் போதிய புரிந்துணர்வும், கூட்டுறவு நம்பிக்கையும் வளர்ந்தால் குற்றவாளிகளை இலகுவில் பிடித்துவிடலாம். மக்கள் கண்காணிப்பு சபைகளை முன்னர் போல் நாம் வடிவமைக்க ஆவன செய்யப்பட வேண்டும் என்று எண்ணுகின்றேன். இது பற்றி உரியவர்களுடன் பேசுவோம். நடவடிக்கைகள் எடுப்போம். மதுசார நடவடிக்கைகள் கட்டுக்கடங்காமல் போவதையும் மக்கள் துணையுடன் கட்டுப்படுத்துவோம் - என்றார்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். மாண வர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**இடபம்:** வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன் மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப் படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**கடகம்** : திடீர் குழப்பம் வந்து செல்லும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். பூரணமடையாத நின்ற வேலைகள் முடியும். உத்தியோகத்தில் திருப்தி உண் டாகும்.

**சிங்கம்:** யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆள்ாவீர்கள். உங்களைப் பற்றி அவதூறாகப் பேசுவார் கள். அதை பெரிதுபடுத்த வேண்டாம். உத்தியோகத்தில் அதி காரிகளை கலந்தாலோசித்து முடிவுகளெடுக்கப் பாருங்கள்.

**கன்னி:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**துலாம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர் கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிக்ரிக்கும்.

**தனுசு:** சோர்வு, சலிப்பு, கோபம் யாவும் நீங்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். உத்தியோகத்தில் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மகரம்:** சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவீர்கள்.

**கும்பம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**மீனம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.


# கர்ம யோகத்தின் குறிக்கோள்



விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

வேதாந்த சமயத்தின் சிறந்த கொள்கை. நாம் பல்வேறு வழியாகப் பயணம் செய் தாலும் , இறுதியில் ஒரே இலக்கைச் சென்றடைவோம் என்பதாகும். இந்த வழிகளை நான் பொதுவாக கர்மநெறி , பக்தி நெறி, யோக நெறி, ஞான நெறி என்று நான்காகப் பிரித்திருக்கிறேன். அதே சமயம், நீங்கள் இந்தப் பிரிவுகள் துல்லியமாகக் கோடிட்டுப் பிரிக்கப்ப டாதது என்பதையும், ஒரு யோகத்துக் குள் இன்னொரு யோகமும் கலந்திருக் கும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் இந்தக் கலப்பில் எந்தவொரு யோகம் அதிகமாக இருக்கி றதோ, அந்த யோகத்தின் பெயரால் நாம் அதை அழைக்கிறோம். பக்தி யோகி என்று ஒருவரை அழைக்கும் போது, அவரிடம் பத்தியோகம் தவிர வேறு எதுவும் சிறிது கூட இல்லையென்றோ, கர்மயோகி என்று ஒருவரை அழைக்கும் போது அவரிடம் கர்ம யோகம் தவிர வேறு எந்த யோகமும் இல்லையென்றோ, ஞான யோகி என்று ஒருவரை அழைக்கும் போது , அவரி டம் ஞானம் தவிர வேறு எதுவும் இல் லையென்றோ நினைத்துவிடக் கூடாது. இந்தப் பிரிவுகள் எல்லாம் எந்த யோகம் ஒருவரிடம் அதிகமாக இருக் கிறதோ, அதற்கு ஏற்ப அவர்களுக்கு வைக்கப்பட்ட பெயர்களாகும். ஆனால், கடைசியில் இந்த நான்கு வகையான யோகங்களும் ஒன்று கலந்து, ஒரே யோகமாக மாறிவிடுவதைக் காண்கி றோம். அதனால் எல்லாச் சமயங்களும் எல்லா வகையான காரியங்களும், வழி பாடும், நம்மை இந்த யோகங்களைக் காட்டும் ஒரே இலக்கை நோக்கியே அழைத்துச் செல்லுகின்றன.

# விண்ணிலிருந்து பேசும் உலகின் முதல் ரோபோ



உலகின் முதலாவது ரோபோ-ஆஸ்ட்ரானாட் (விண்வெளி ஆய்வுக்கான ரோபோ இயந்திர மனி தன்) விண்வெளியில் இருந்துகொண்டு உரையாடி வருவதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்டில் விண்வெளிக்கு அனுப்பி வைக் கப்பட்ட கிரோபோ என்ற ஜப்பானின் சிறிய ரோபோ, இப்போது சர்வதேச விண்வெளி நிலையத்தைச் சென்றடைந்துள்ளது.

சர்வதேச விண்வெளி நிலையத்திலுள்ள ஜப்பானிய கட்டளை அதிகாரி கோய்ச்சி வக்காட்டாவுடன் ரோபோ இயந்திர மனிதன் உரையாடும் காணொலி வெளி யாகியுள்ளது.

கிரோபோவின் உரையாடல் முன்கூட்டியே தீர்மானிக் கப்பட்டிருக்காவிட்டாலும் மனிதர்களைப் போல பதிலளிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக ரோபோவைத் தயாரித்த விஞ்ஞானிகள் கூறுகின்ற னர். புதிய விடயங்களையும் கற்றுக்கொள் வதற்கு இந்த கிரோபாவால் முடியும்.

கிரோபோவுக்கும் கிரோபோவைப் போன்ற ரோபோ விண்வெளி வீரர்களுக்கும் நல்ல எதிர்காலம் இருக்கிறது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நெடிய விண்வெளிப் பயணங்களின் போதான துணையாக மட்டுமல்லாமல் பூமியிலும், வயோதி பர்களுக்கும் தனிமையில் வாழ்பவர்களுக்கும் இந்த ரோபோ பெருந்துணையாக இருக்கும் என்றும் அதனை வடிவமைத்தவர்கள் நம்புகின்றனர்.

**சர்வதேச விண்வெளி நிலையத்திலுள்ள ஜப்பானிய கட்டளை அதிகாரி கோய்ச்சி வக்காட்டாவுடன் ரோபோ இயந்திர மனிதன் உரையாடும் காணொலி வெளியாகியுள்ளது.**

## நாளை

மார்கழி-09
செவ்வாய்க்கிழமை 24.12.2013
திதி: ஸப்தமி பி.இ.02.55 வரை
நட்சத்திரம்:
பூரம் பி.ப.02.53 வரை
சுபநேரம்:
10.56- 12.26 வரை
இராகுகாலம்:03.26 -04.56 வரை

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | 6 | |
| 7 | 9 | 8 | | 1 | 6 | | | 3 |
| | | 5 | | | | | 9 | 2 |
| 8 | | 2 | 5 | 4 | | | | |
| | | 7 | 1 | | 8 | 2 | | |
| | | | | 2 | 9 | 8 | | 4 |
| 2 | 6 | | | | | 5 | | |
| 3 | | | 8 | 5 | | 6 | 4 | 9 |
| | 8 | | | | | | | 7 |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களை [illegible] நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இ[illegible]

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 9 | 3 | 2 | 7 | 8 | 1 | 4 |
| 3 | 8 | 2 | 5 | 4 | 1 | 6 | 7 | 9 |
| 4 | 1 | 7 | 8 | 6 | 9 | 5 | 3 | 2 |
| 7 | 6 | 3 | 4 | 8 | 5 | 9 | 2 | 1 |
| 2 | 9 | 5 | 7 | 1 | 6 | 3 | 4 | 8 |
| 8 | 4 | 1 | 9 | 3 | 2 | 7 | 6 | 5 |
| 5 | 7 | 6 | 2 | 9 | 4 | 1 | 8 | 3 |
| 9 | 3 | 4 | 1 | 7 | 8 | 2 | 5 | 6 |
| 1 | 2 | 8 | 6 | 5 | 3 | 4 | 9 | 7 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டாங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible]றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் [illegible] பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய [illegible]றுவன நிறே[illegible] இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நாம் நாமாக இருக்க...



புன்னகையும் சிரிப்பும் எதற்கும் சோகபாவம் கொள்ளாமல், நகைச்சுவைக்கு முகம் கோணாமல் இருக்க முயலுங்கள். புன்னகையும் சிரிப்பும் எப்போதுமே மகிழ்ச்சியுடன் வைத்திருக்கும். சில நேரங்களில் உங்கள் புன்னகை, யாரோ ஒருவரின் சோக தினத்தையே வேறுவிதமாக மாற்றக்கூடும்.



சு.சாரங்கி

இந்த உலகில் இருக்கும் அனைவருமே ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்க்கையைக் கழிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால், சமயத்தில் அதை எப்படி செயல்படுத்துவது என்று தெரியாமல் குழம்புகிறோம். இத்தகைய குழப்பங்களால் உடல் மற்றும் மனதில் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. சொல்லப்போனால், வாழ்க்கையே சிலருக்கு வெறுமையாகிவிடும். இத்தகைய வெறுமை ஏற்பட்டால், எப்படி உலகில் வாழ வேண்டுமென்ற ஆசை ஏற்படும். எனவே மனதை லேசாகவும், சந்தோஷமாகவும் வைத்திருக்க என்ன செய்ய வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. சிலர் வாழ்க்கையை சந்தோஷமாக அமைத்துக் கொள்ள பல முயற்சிகளை மேற்கொள்கிறோம் என்ற பெயரில் தவறான வழியில் சென்றுவிடுகின்றனர். அவ்வாறு சென்ற பின்னர் அதிலிருந்து மீள்வதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர். ஆகவே எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன்னர், நாம் செய்வது நல்லது தானா என்பதை உறுதிபடுத்திக் கொண்டு, பின்னர் செயற்பட்டால் வாழ்க்கையே சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

*போதுமான உறக்கம்*

இது உங்களை ஆரோக்கியமாக மட்டுமல்ல மகிழ்ச்சியாகவும் வைத்திருக் கும். ஒவ்வொரு இரவும் 8-10 மணிநேரம் உறங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். படுக்கைக்கு போவதற்கு ஒரு மணிநேரம் முன்னதாகவே மனதை லேசாக்கிக் கொள்வது நல்லது. அதிலும் பாட்டு கேட்பது மனதை லேசாக்கும். இதனால் படுத்தவுடன் நல்ல நிம்மதியான தூக்கம் வரும்.

*சத்தான உணவு*

எல்லா நொறுக்குத் தீனிகளையும் குறைத்து விட்டு, தினமும் உணவில் காய்கறிகள் மற்றும் பழங்களின் அளவைஅதிகரிக்கவும். இதனால் உடலில் புத்துணர்ச்சியும், மனதில் உற்சாகமும் அதிகமாகும்.

*அதிகமான நீர்*

தண்ணீரை அதிகம் குடிக்கும் போது, சருமம் பளபளப்பாக இருப்பதால் தோற்றம் பற்றி நம்பிக்கை பெருகுகிறது. மேலும் ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்துக்கும் தண்ணீர் முக்கிய ஆதாரமாக உள்ளது. எனவே சந்தோஷமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க, ஒரு நாளில் 8 டம்ளர் தண்ணீரைக் குடிப்பது அவசியமாகிறது.

*உடற்பயிற்சி*

வேகமான நடை, மிதமான ஓட்டம், அறையில் நடனம் இப்படி ஏதாவது ஒன்றை உடற்பயிற்சிக்காக தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் உடலை உறுதியாகவும், மனதை லேசாவும் உணர வைக்கும் ஒரு மாயமே உடற்பயிற்சியாகும்.

*நண்பர்கள்*

உண்மையான நண்பர்களை அருகில் கொண்டிருப்பதுடன், அவர்களைப் பாராட்டி உற்சாகப் படுத்தும் வழக்கத்தை கடைப்பிடியுங்கள். மேலும் எந்த மாதிரியான அன்பையும், மரியாதை யை யும் மற்றவர்களிடம் எதிர்பார்க்கிறீர்களோ, அவை அனைத்தையும் அவர்களுக்கு வாரி வழங்குங்கள்.

*உதவி*

அம்மாவுக்கோ அல்லது மனைவிக்கோ வீட்டு வேலைகளில் உதவுங்கள். வீட்டை ஒழுங்கு படுத்துங்கள். இவையெல்லாம் அவர்கள் உங்களை மேலும் நேசிக்கத் தூண்டும். இதனால் ஒருவித மனநிறைவு கிட்டும். பொழுதுபோக்கு ஏதாவது ஒன்றில் ஆர்வத்தை செலுத்துங்கள். அது இசையோ, ஓவியமோ அல்லது விளையாட்டாகவோ இருக்கலாம். இதில் கவனத்தை செலுத் தினால், சாதனை புரிய முடியும். மேலும் நம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையும் வளரும்.

*புன்னகையும் சிரிப்பும்*

எதற்கும் சோகபாவம் கொள்ளாமல், நகைச்சுவைக்கு முகம் கோணாமல் இருக்க முயலுங்கள். புன்னகையும் சிரிப்பும் எப்போதுமே மகிழ்ச்சியுடன் வைத்திருக்கும். சில நேரங்களில் உங்கள் புன்னகை, யாரோ ஒருவரின் சோக தினத்தையே வேறுவிதமாக மாற்றக்கூடும்.

*மன அழுத்தத்தை குறைப்பது*

ஒருவரின் ஆரோக்கியத்தை கெடுப்பது மனஅழுத்தம். ஆகவே யோகா போன்ற மனப்பயிற்சிகளில் ஈடுபட்டு, மன அழுத்தத்தை குறைக்க வேண்டும். மேலும் எழுதுவது, புத்தகம் படிப்பது, இசை கேட்பது, இயற்கையை ரசிப்பது போன்ற செயல்களாலும் மனதை லேசாக்கலாம்.

*வெளியே செல்வது*

நண்பர்களோடு வெளியில் செல்வது, நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, உறவினர்களை சந்திப்பது அல்லது சந்தோஷத்திற்காக வெளியே செல்வது அல்லது செல்லப்பிராணியுடன் வெளியில் செல்வது போன்ற ஏதாவது ஒரு செயலை சாதாரண நேரங்களில் செய்தால், மனதில் கஷ்டம் இல்லாமல், மனமும் லேசாகும். ஏனெனில்இதுப்போன்றசுற்றுச்சூழல்தான்எப்போதுமேமனதைலேசாக்கும்சக்திகொண்டது.

*நாம் நாமாக இருப்பது*

இந்த உலகில் பலர் தம்மிடம் இல்லாத ஒன்றை இருப்பதாக காண்பிப்பது, சுமையே. நம்மிடம் இல்லாததற்கா நாம் மற்றவர்களால் நேசிக்கப்படுவதைவிட, இருப்பதற்காக வெறுக்கப்படுவது எவ்வளவோ மேல். இதனால் எப்போதும் நாம் நாமாகவே பிரகாசிக்க முடியும். -

# ஆணுக்கு எதிரானதா பெண்ணியம்?

பொதுவெளிகளிலும் ஊடகங்களிலும் பெண்ணியம் பற்றிய விவாதம் நடக்கும்போது ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. பெண்ணியம் என்றாலே ஆணுக்கு எதிரானது. ஆண் களை அடக்கியாள நினைப்பது அல்லது ஆண்களை முழுவதுமாக வெறுத்து ஒதுக்குவது என்ற கருத்து பரவலாக உள்ளது. குறிப்பாக இது ஆண்களிடமும், அவர்களே பெண்களுக்கான கருத்தையும் உருவாக்கும் அதிகாரத்தில் உள்ளதால் பெண்கள் பலரிடமும் உள்ளது.

பெண்ணியம் என்பது என்ன? முதலில் நடைமுறை சார்ந்து அதை அணுகிப் பார்க்கலாம். இன்று ஒரு பெண் படித்து முடித்து விட்டு வேலைக்குச் செல் கிறாள் என்றால், அதில்கூடப் பெண்ணியம் இருக்கிறது. ஏனென் றால் அந்த உரிமைகூடத் தொடர்ச்சியான சமூக சீர்திருத்தச் செயல்பாடுகளின் விளைவே.

பெண்ணைத் தாயாக, தெய்வமாகப் போற்றுவதான வெற்றுக் கூச்சல்களைப் புறந்தள்ளி நிஜத்தை உணரக் கோருகிறது பெண்ணியம். இப்படி அன்றாட யதார்த்தங்கள், புத்தகங்களில் இருக் கும் பெண்ணியத்துக்கான வரையறைகள், சட்டப் புத்தகங்கள் பேசும் சமநீதி ஆகியவற்றைப் புறக்கணிக்கும் அல்லது கேலி செய்யும் நிலை சமூகத்தில் பலரிடம் உள்ளது.

மறுபுறம் அப்பாவின் அரவணைப்பில் வளர்ந்து, அண்ணனின் பாசத்தில் நனைந்து, கணவனின் காதலில் திளைத்து வாழும் பெண்கள் பெண்ணியமே தேவையில்லை என்கின்றனர். இத்தகைய பெண்கள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தினர். இவர்கள் அனைவரும் ஆண்கள் கொடுத்த சுதந்திரத்தைக் கொண்டு நன்றியோடு வாழ்பவர்கள். இவர்கள் வாழ்க்கையைச் சிக்கலாக்கிக் கொள்ள விரும்பாதவர்கள். ஆனால் அரவணைக்கும் அப்பாவும், பாசம் பொழியும் சகோதரனும், காதல் கணவனும் எடுத்துக் கொடுக்கப் பெண்ணுரிமை என்பதும் சுதந்திரம் என்பதும் சமத்துவம் என்பதும் சுக்கோ மிளகோ இல்லை என்கிற புரிதலில் முகிழ்ப்பதுதான் பெண்ணியம்.

ஓர் ஆண் சினிமா பார்க்க இரவு நேரக் காட்சிக்குத் தன் நண்பர்களுடன் செல்ல முடியும். ஆனால் இன்றைய சூழலில் ஒரு பெண்ணால் அது முடியாது. ஓர் இளைஞன் தன் நண்பர்களுடன் வெளியூர் சென்று எத்தனை நாள்கள் வேண்டுமானாலும் தங்கிவிட்டு வரலாம். ஆனால், ஓர் இளம் பெண் அவ்வாறு செய்ய முடியாது. வேலை நிமித்தமாகவோ கல்லூரிச் சுற்றுலாவுக்கோ சென்றாலும்கூட அதற்கான பயண அட்டவணை, அவள் உடன் செல்பவர்கள் குறித்த விவரங்கள் ஆகியவை அவளின் பெற்றோர் கையில் இருக்கும்.

பொருளாதார ரீதியில் குடும்பத்தைக் காக்க ஓர் ஆண் மகன் வேலைக்குச் சென்றால், அந்தக் குடும்பம் தலையெடுத்துவிட்டது என்கிறது சமுதாயம். அதே குடும்பப் பொருளாதார நிலையைச் சமாளிக்க ஒரு பெண் வேலைக்குச் சென்றால், அது சமுதாயத்தால் பரிதாபத்திற்குரிய நிலையாகப் பார்க்கப்படுகிறது.

19ஆம் நூற்றாண்டுவரை பெண்கள் கல்வி கற்பதே மிகப் பெரிய விஷயமாக இருந்தது. இன்று ஓரளவு கல்வியும் வேலைவாய்ப்பும் பெண்களுக்குக் கிடைத்துள்ளன. இந்த மாற்றங் களைப் பலர் எரிச்சலோடும், சிலர் நிறைவோடும் பார்க்கிறார்கள். ஆனால் பெண்கள் போக வேண்டிய தூரமோ ஒளிவேகப் பயணத்தைக் கோருகிறது.

பெண்ணுரிமை பேசும் சில பெண்கள், ஆண்களுக்கும் பொதுச் சமூகத்துக்கும் எதிராக முன்வைக்கும் விமர்சனங்களில் சமநிலை தவறியிருக்கலாம். அதை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த பெண்ணுரிமைக் கோரிக்கைகளையும் சிறுமைப்படுத்த முயல்வதும் பெண்ணை அடிமைப்படுத்தும் செயலாகவே அமையும்.

பெண்ணுரிமை, பெண்நிலைவாதம், பெண்ணியம் என்பவை அடிப்படையில் சம உரிமைக்கான குரல்கள்தான். இதைப் பெண்கள் மட்டும்தான் எழுப்ப வேண்டும் என்பதில்லை. கல்வி, வேலை, இலட்சியம், பொழுதுபோக்கு, திருமணம், பாதுகாப்பு, நடமாட்டம் என அனைத்திலும் ஆணுக்குக் கிடைக்கும் உரிமைகளும் சுதந்திரமும் பெண்ணுக்கும் கிடைக்க வேண்டும். இது ஆண்களின் உரிமையைப் பறிக்கும் நோக்கம் கொண்டதல்ல. ஆணுக்கு எதிரானதுமல்ல.

பெண்க ள் தங்கள் உரிமையை உணர்ந்து, சமுதாயத்தில் அதனைத் தக்க வைத்துக்கொள்ளவும், பால் சமத்துவத்துக்குப் போராடவும் உதவும் ஒரு வழிகாட்டியே பெண்ணியம். நியாய உணர்வும் சமத்துவத்தில் நம்பிக்கையும் கொண்ட ஆண்களும் இணைந்து பாடுபட வேண்டிய இலட்சியம் இது.



அனுஜன்



யாழ். சமூக செயற்பாட்டு மையம் ஒழுங்கமைத்து நடத்திய "மனிதம் வெல்லும்" நெல்சன் மண்டேலாவின் நினைவுப் பகிர்வுகள் செவ்வாய்க்கிழமை தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுப் பேருரைகளும் நிகழ்த்தப்பட்டன. (ந-10)

## கைவிடப்பட்டிருந்த சைக்கிள் பொலிஸில்

யாழ்ப்பாணம், டிசெ.23

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் கைவிடப்பட்ட நிலையில் நீண்ட நாள்கள் காணப்பட்ட சைக்கிள் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பெண்களுக்கான சைக்கிள் ஒன்று நீண்ட நாள்கள் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. இதனையடுத்து வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்தியதையடுத்து உரிமை கோரப்படாத சைக்கிளை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர். (ந-36)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்துள்ளனர். அவற்றில் சில பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:-

**நெல்லியடி ம.ம.வித்தியாலயம்**

**கணிதம்**

சி.துவாரகன்- 3ஏ, கி.பிரணவன்-ஏ2பி, சி.சுகந்தன்- 3பி, அ.மோகன்லால்-ஏபிசி, பா.டிலக் ஷன்-ஏ2பி, ப.ஹரிதர்ஷன் -ஏபிசி, ஞா.சர்மிலன் -ஏபிசி, வி.முகுந்தன்-பி2சி, நே.அங் கதன்-பி2சி.

**உயிரியல்**

செ.சஞ்சிகா-ஏ2பி, சி.சாகிர்த்தியா-ஏபிசி, பு.பிரவீனன் -ஏபிசி, நே.ஆதித்தியா-3பி, பா.பிரியதர்சினி-2பிசி, வி.கலைவாணி -பி2சி, வி.பிரியா-2பிஎஸ்.

**வர்த்தகம்**

அ.துளசி-2ஏபி, சி.சிந்துஜா-2ஏபி, கி.நிருபன்-2ஏசி, ஆ.ஜிகானந்- 2ஏசி

**கலை**

க.சஞ்சீபா-2ஏபி, இ.ஈஸ்வரன்- ஏபிசி.

**மகாஜனக் கல்லூரி**

**தெல்லிப்பழை**

**உயிரியல்**

வி.பிறேமினி-3பி, ஏ.தர்சன் -2பிசி, வை.ஆரணி- 2சிஎஸ், கே.சுவேந்தினி-3சி, பி.அபிசாயினி-சி2எஸ்.

**கணிதம்**

ஜே.ஜெயக்கமலன்-ஏ2பி, ரி.மதுரா-3சி, பி.திவாகரன்-3சி, பி.மீரஜா.சி2எஸ்.

**வர்த்தகம்**

பி.கஜவதனி-2ஏபி, பி.நிதர்சனா-2ஏபி, பி.கபில்ராஜ்-ஏ2பி, ஆர்.ரேணுகா-பி2சி.

**கலை**

ரி.ஜிவிதா-3ஏ, பி.புகழரசி-3ஏ, எஸ்.அனீஸ்ரா-2ஏபி, எம்.திசபொல-2ஏசி, எஸ்.சோபிகா-2ஏசி, எஸ்.துஸ்யந்தினி-ஏ2பி, பி.விஸ்ணுகீத்-ஏ2பி,வி.வித்ஜா -ஏ2பி, கே.திவ்யா-ஏ2பி, எஸ்.நிரோஜா-ஏ2பி, எஸ்.துசிதா -ஏபிசி, எஸ்.கஜனான்-ஏ2சி, ரி.தனுசா-ஏசிஎஸ், வி.நிசாந்ரட்ணகுமார்-3பி, ஆர்.கோகிலாணி-2பிசி, எஸ்.தீபகுமார் -2பிசி, ரி.கஜலக்சி-2பிசி, எஸ்.பிரதாப்-2பிசி, பி.விஸ்மன்-2பிசி, ஏ.ஸ்ரீசரண்யா-2பிசி, எஸ்.சிவகஜன்-2பிஎஸ், என்.சிந்தூரன்-2பிஎஸ், ரி.புஸ்பரதன்-பி2சி, பி.விஜிதா -பி2சி, எல்.லக்சியா-பி2சி, ரி.சியாமினி-பி2சி, என்.சுகானா-பி2சி, ஆர்.ரஜிதரன்-பி2சி, ஏ.கஜன்-பி2சி, எஸ்.நிந்துஜா-பி2சி, ஏ.உதயசாந்தினி-பி2சி, எஸ்.ரதீஸ்குமார்-பிசிஎஸ், எஸ்.கஜீபன்-பிசிஎஸ், ஆர்.நிருஜா-பிசிஎஸ், எஸ்.தரணிகா-பிசிஎஸ், கே.சர்வஜன்- பிசிஎஸ் ,கே.கிருஜன்-பிசிஎஸ், ஜி.சேருசன்-பிசிஎஸ், ஏ.ரஜினி- பி2எஸ், எம்.குயின்ஷா- பி2எஸ், பி.அனிஸ்ரா-பி2சி.

**யூனியன் கல்லூரி,**

**தெல்லிப்பழை**

**கணிதம்**

சி.சுஜேந்திரன்-3ஏ, த.தர்சனா-3சி, சி.ஜசிகரன்- 2சிஎஸ், க.பிரகாஸ்-2சிஎஸ்.

**உயிரியல்**

பா.துர்க்கா-3சி, தே.ராகவி-பிசிஎஸ், இ.துர்க்காயினி-2சிஎஸ்.

**வர்த்தகம்**

மோ.சித்திராங்கன்-பி2சி, க.சிந்துஜா-3சி.

**கலை**

கோ.பிரியதர்சினி-2ஏபி, க.அர்ச்சிகா-2ஏபி, நி.பர்மினா-ஏபிசி, கு.கீர்த்திகா-ஏபிசி, க.சிவரூபிநாயகி-ஏபிசி, சி.பவீந்திரன் -3பி, ப.பிரசன்னா-2பிசி, ப.பிரசாத்-2பிசி.

**விக்னேஸ்வரா கல்லூரி**

**கணிதம்**

தி.கஜதரன்-3ஏ, தி.பிரமிளா-3சி, செ.நிசாந்தன்-2சிஎஸ், க.எழிலரசி-ஏ2பி.

**உயிரியல்**

அ.ராஜ்கரன்-ஏ2பி, தே.சந்தியா-2பிசி, செ.தினகரன்-3சி, க.கௌதமி-பி2சி.

**வர்த்தகம்**

அ.தேவகமல்-2ஏசி, தே.கருணாகரன்-ஏ2சி.

**கலைப் பிரிவு**

த.சிந்துஜா-ஏபிசி, ந.அருணிகா -ஏ2பி, ந.லக்சிகா- 2பிசி, ந.தேவிகா-ஏபிசி, செ.விதுர்சன்-2பிசி, த.செவ்வந்தி- ஏ2பி.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

**கணிதம்**

வி.யதுர்ஷனன்-3ஏ, எஸ்.சுபர்ணா-சி2எஸ், ரி.நிஷாந்-3ஏ, பி.சங்கீத்-ஏ2பி, கே.சுதர்சன்-2ஏசி, வி.மதுஷா-2ஏபி, எஸ்.டிலோஜன்-ஏ2பி, எஸ்.வேணுஜா-3பி, ஜே.லோகீபன்-ஏபிசி, கே.சயூரன்-3பி, எம்.தனீஸ்ரன்-2பிசி, ரி.சுயந்தன்-3பி, ஜே.ஜதுராஜ்-ஏபிசி, ரி.சிறிகுமரா-2பிசி, எஸ்.பவியா-ஏ2சி, ரி.தேவதயாராஜ்-2பிசி, கே.மோசிகீரன்-ஏபிசி, எம்.விஷ்ணுசரன்-பி2சி, ஏ.ரஉபனா-பி2சி, ரி.தர்மினி-பி2சி, ஏ.கௌதமி-3சி, எம்.பிரசாநந்தன்-3சி, எஸ்.துலக்சன்-ஏபிஎஸ், எஸ்.கோகுலன்-2சிஎஸ், வி.விந்தியா-பி2சி, எஸ்.சர்மினோ-ஏசிஎஸ், எஸ்.ஆதி-பி2எஸ், கே.முரளீதரன்-2சிஎஸ், ரி.நிசாந்-2சிஎஸ்.

**உயிரியல்**

எம்.கீர்த்திகன்-2ஏபி, ரி.டினேஸ்குமார்-ஏ2பி, கே.ஜசிந்தா-2பிசி, ரி.ஜீவனா-2பிசி, பி.யதுர்சன்-2பிசி, ரி.கேமதர்ஷன்-3சி, எஸ்.சதீஸ்குமார்-3சி, எஸ்.ரசிகன்-பி2சி, ரி.தபோஜனன்-பி2சி, கே.மஹிதமன்-2சிஎஸ், ஆர்.ஹம்சன்-2சிஎஸ், கே.கபிலன்-2சிஎஸ்.

**வர்த்தகம்**

எஸ்.சங்கீதா-3ஏ, ஆர்.தனுசியா-2ஏபி, ஜே.ஐஸ்வர்யா-3ஏ, கே.அபிராம்-2ஏபி, ஜி.துஷி யங்கா-3ஏ, எம்.பிரியங்கா-2ஏபி, எஸ்.கௌசிகன்-ஏ2பி, ரி.கஜந்தா-2பிசி, எஸ்.திவ்யா-ஏபிசி, எஸ்.கனிஷ்ரா-பி2சி, என்.பிரசாந்தினி-3சி, ஆர்.தரசுதா-பி2சி, எஸ்.துர்ஷிகா-3சி, ஐ.ஜானுதி- 2பிஎஸ், எல்.கெபின்கரன்-பி2சி, எஸ்.வேணுகா-3சி, ரி.சஜானா-3சி, எஸ்.துஜீவன்-3சி, ஆர்.அபிஷாஜினி-பிசிஎஸ்.

**கலை**

எஸ்.பிரஜீவன்ராம்-3ஏ, ஆர்.டியானா-ஏ2பி, ஜி.கபிலன்-ஏபிசி, பி.மிலக்ஷியா-ஏ2பி, எம்.கஜிபனா-ஏ2பி, கே.சாய்சுஜா-2பிசி, ஆர்.ரகுபரன்-2பிசி, எஸ்.ஹயூரன்-2பிசி, எஸ்.கோகுலராம்-ஏ2சி, கே.துவாரகா-ஏ2சி, பி.தனுசன்-ஏபிசி, ரி.மாதுரி-பி2சி, பி.சஜித்திரா-ஏ2சி, எல்.கிரியராஜ்-பி2சி, ரி.கோபிதா-பி2சி, கே.லகுலன்-ஏ2சி, ஏ.லக்ஷனா-2பிசி, எஸ்.ரஜீத்-பி2சி, கே.ஜான்சியா-2பிசி, ஆர்.திவ்யா-3சி, பி.அபிசுயா-ஏசிஎஸ், வி.கஸ்தூரி-2பிசி, ரி.லக்சியா-பிசிஎஸ், எஸ்.ஹம்சலா-பி2சி, கே.அபிராமி-3சி, எஸ்.ரிஷாந்தினி-ஏபிஎஸ்.

**வட்டு. இந்துக் கல்லூரி**

**உயிரியல்**

த.சிவகணேசன்-ஏபிசி, பி.தயா பரன்-3சி

**வர்த்தகம்**

ஆ.நாகதீபன்-ஏ2பி, சி.கவிதா- 2ஏசி, இ.சரண்யா-ஏபிசி, பா.கஜந் தினி-ஏபிசி.

**கலை**

சி.அனுசியா-2ஏபி, ம.துஷாந் தன்- ஏ2பி, சி.கோபிகா-2ஏசி, க.லக்சிகா-2ஏசி.

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை**

**உயிரியல் (தமிழ் மொழி மூலம்)**

தி.சஜித்ரா-3ஏ, சி.மயூரி-2ஏசி, ஐ.சந் திரிக்கா- ஏ2பி, செ.அனுசிகா-ஏபிசி, க.வர்ணிகா-2பிசி, வி.பவிதா -2பிசி, செ.மகிந்தினி-2பிசி, க.வித்யா- பி2சி, சி.சோபிகா-பி2சி, ச.சிந்துஜா-பிசிஎஸ், து.மயூரிகா-3சி, வி.கிரிஷாயினி-3சி.

**உயிரியல் (ஆங்கில மொழி மூலம்)**

ச.சாருஷா-ஏ2பி, ச.கார்த்தி காயினி-ஏபிசி, கே.கேமசாலினி-ஏபிசி

**கணிதம் (தமிழ் மொழி மூலம்)**

ர.ரம்மியா-3ஏ, சி.சுலோஷினி-3ஏ, ஆ.ஜிரோமி -ஏ2பி, க.லக் ஷனா-2பிசி, க.மாதங்கி-பி2சி, மோ.விதுஷா-3சி, சி.காயத்ரி-3சி.

**கணிதம் (ஆங்கில மொழி மூலம்)**

ரா.அகிலா-3சி

**வர்த்தகம்**

அ.றைசாஜினி-ஏபிசி, மு.மாதங்கி-3பி, கு.கார்த் திகா-ஏ2சி, ம.சரண்யா-பி2சி,ச.சுபர்ணியா-பி2சி.

**கலை**

சு.சுபகரி-2ஏபி, சி.தர்மிலா-2ஏபி, லோ.ஜெசோதா- 2ஏபி,அ.கிரியந்தி-2ஏபி, செ.சங்கீதா-2ஏசி, அ.அனற்றெக்ஷானா- 2ஏசி,ச.ஜானகி-ஏ2பி, த.சிவதர்சினி-ஏபிசி, கி.சிந்துஜா-ஏபிசி, உ.தர் சினி-ஏபிசி, வி.பவிதா-ஏபிசி, பா.ஹம்ஷனா- ஏபிசி, சி.பிரசாளினி-ஏபிசி, ச.பிருந்தா-ஏபிசி, ஈ.பிருந்யா-ஏபிசி, சி.லாவன்யா-ஏபிசி.

**வரணி மத்திய கல்லூரி**

**கலை**

மு.சிந்துஜா-3ஏ, த.அகிலன்-3ஏ, இ.மாதங்கி-2ஏபி, வி.வினோஜா -2ஏபி, கி.லோஜிகா-2ஏசி, க.கஜிந்தன்-2ஏசி, அ.பூரணி-ஏ2பி, இ.நிரோஜன்-ஏ2பி, சு.சுஜீபன்-ஏபிசி, கோ.வினோஜினி- ஏசிஎஸ், தி.கவிதாயினி-ஏசிஎஸ், ஜெ.அர்ச்சகா -ஏ2எஸ், வே.பாலசுதர்சன்- ஏ2எஸ், சு.பிரமீளா-ஏ2எஸ். (ஒ-422-9-10)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலராகிய திருமதி

**டிலோஜினி யூட்வசீகரன்**

அவர்கள் 18.12.2013 அன்று கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தைப் பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் திகழ இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

புதுக்குடியிருப்பு மேற்கு கிராம மக்கள்.

(29718)(5.6.4)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ஆறுமுகம் கனகரத்தினம்**

(சுழிபுரம் கிழக்கு)




சமய இலக்கியத்துறையில் 40 வருடங்களுக்கு மேலாக உன்னத சேவையாற்றி மக்களின் நன்மதிப்பையும், புகழையும் பெற்ற ஓய்வு நிலை ஆசிரியரும், சைவப் புலவரும், சுழிபுரம் யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலை செயலாளருமாகிய ஆ.கனகரத்தினம் அவர்களுக்கு 15.12.2013 அன்று கொழும்பு றோயல் கல்லூரி நவரங்கஹல மண்டபத்தில் இந்து கலாசார திணைக்களத்தினால் "கலாபூஷணம்" அரச விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறித்துப் பெரிதும் மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் பெருமை மேலும் சிறப்படைய, பூரண ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர்.
யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை, சுழிபுரம்.

(12982)(5.6.4)

# வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கும் உடையார்கட்டு மருத்துவமனை

*நாடாளுமன்ற உறுப்பினரிடம் மக்கள் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, டிசெ.23

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உடையார்கட்டு பிரதேச மருத்துவமனை நிரந்தர மருத்துவர் இல்லாத நிலையில் வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வருவதால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கத்திடம் தெரிவித்துள்ளனர்.

இந்த மருத்துவமனைக்குப் பத்து ஏக்கர் காணி ஒதுக்கப்பட்ட போதிலும் எதுவித அடிப்படை வசதிகளுமின்றியும் நிரந்தர வைத்தியர் இல்லாமலும் உள்ளமையால் அந்தப் பகுதி மக்களும் நோயாளர்களும் பல்வேறு சிரமத்தை எதிர்நோக்குவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் உடையார்கட்டு, மூங்கிலாறு ஆகிய பிரதேசங்களுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த மருத்துவமனைக்கு நேரில் சென்று மக்களை சந்தித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பாக அந்த மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மேலும் தெரிவிக்கையில்:

நாளாந்தம் 2 மணிநேரம் மட்டுமே மருத்துவர் கடமையில் உள்ளார். அவசர சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்கள் 13 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கோ அல்லது கிளிநொச்சிக்கோ செல்ல வேண்டியுள்ளது.

விசுவமடு, உடையார்கட்டு, ரெட்பானா, சுதந்திரபுரம் போன்ற சனத்தொகை கூடிய கிராமங்களுக்கென இருக்கும் ஒரேயொரு வைத்தியசாலையின் கூரை ஓடுகள் உடைந்த நிலையில் காணப்படுவதால் மழை காலங்களில் மழை நீர் உட்செல்லும் நிலையும் காணப்படுகின்றது. இதனால் வைத்தியசாலைக்கென ஒதுக்கப்பட்ட புதிய காணியில் நிரந்தர கட்டடத்தை கட்டுவதற்கும் நிரந்தர வைத்தியரை நியமிப்பதற்கும் ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-12)

## வவுனியா நகர சபை பட்ஜெட் நேற்று முதல் மக்கள் பார்வைக்கு

*நகர சபை செயலாளர் தெரிவிப்பு*

வவுனியா, டிசெ.23

வவுனியா நகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா நகர சபை செயலாளர் க.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்றைய தினத்திலிருந்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை மக்களின் பார்வைக்கென வைக்கப்பட்டுள்ளது.

இதனைப் பொதுமக்கள் பார்வையிட்டு ஏதாவது அபிப்பிராயங்கள் இருப்பின் செயலாளர், நகர சபை , வவுனியா எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ 26 ஆம் திகதிக்கு முன்பதாக தெரிவிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

# விவசாய செய்கை நிலங்கள் மாசடைகின்றன பண்டத்தரிப்பில்

*தொழிற்சாலை நடவடிக்கையால்*

வலி.தென்மேற்கு, டிசெ.23

பண்டத்தரிப்பு, கீரிமலை வீதியில் அமைந்துள்ள கல்லுடைக்கும் தொழிற்சாலையாலும், வாகன சுத்திகரிப்பு நிலையத்தாலும் அந்தப் பகுதியிலுள்ள விவசாய நிலங்கள் மாசடைவதுடன் பொதுமக்களும் பாதிக்கப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர் அன்ரன் ஜோன்சன் இதற்கான சுற்றுச் சூழல் பாதுகாப்பு அனுமதி சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்டதா என்ற கேள்வியையும் பதில் தவிசாளரிடம் கோரியுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் விசேட கூட்டம் கடந்த வாரம் பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் ஆரம்பமானது.

கூட்டத்தில் கலந்து கொண்ட எதிரணி உறுப்பினர் அன்ரன் ஜோன்சன் இந்த விடயம் குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மக்கள் செறிந்து வாழும் பண்டத்தரிப்பு கீரிமலை வீதியில் இயங்கி வரும் கல்லுடைக்கும் தொழிற்சாலையாலும் வாகன சுத்திகரிப்பு நிலையத்தாலும் அந்தப் பகுதியில் வாழும் மக்கள் சுகாதார சீர்கேட்டுக்கும் சிரமங்களுக்கும் உள்ளாகின்றனர்.

கல்லுடைக்கும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் தூசிப் படலத்தால் விவசாய நிலங்கள் மாசடைவதுடன் பயிர்களும் நோய்த்தாக்கத்துக்குள்ளாகின்றன. வாகன சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுகள் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுத்துவதுடன் போக்குவரத்துக்கும் இடையூறாக அமைந்துள்ளது. மக்களைப் பாதிக்கக் கூடிய மேற்படி வேலைத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் போது சுற்றுச் சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ள வேண்டும்-என்றார். (வ-115)

## தொழிற்பூங்காவுக்கு உதவி



கைதடி, டிசெ.23

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற்பூங்காவுக்கு சமூக நலன்விரும்பிகள் அண்மையில் நிதியுதவிகளையும் உலர் உணவுப் பொருள்களையும் வழங்கியுள்ளனர்.

ஜேர்மனி நாட்டில் இயங்கி வரும் 'தமிழ்மன்றம்' எனும் அமைப்பு ரூபா ஐம்பதாயிரத்தை அதன் தலைவர் சி.தர்மராஜா மூலம் வழங்கியிருந்தனர். அந்த நிதியை அவரின் உறவினர்கள் அண்மையில் தொழிற்பூங்காவில் தங்கியுள்ளோரிடம் கையளித்தனர்.

இதேவேளை மட்டுவில் தெற்கைச் சேர்ந்த செல்வி வசீகரன் அஞ்சலோவின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது உறவினரான வெள்ளையர் மதினா பத்தா யிரம் ரூபா பெறுமதியான பால்மா வகைகள் மற்றும் உணவுப் பொருள்களையும் அண்மையில் வழங்கியிருந்தார். (வ-288)

# அரிசி ஆலையை இயக்க சொந்தமாக காணி தேவை

*மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு சிலாவத்தை கிராமத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் தொழில் முயற்சிக்கென அமைக்கப்பட்ட அரிசி ஆலைக்கு நிரந்தரக் காணியொன்றை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு சிலாவத்தை , சிலாவத்தை தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரம், சுய தொழில் முயற்சி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் அரச சார்பற்ற நிறுவனம் அரிசி ஆலைக்குரிய சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான இயந்திரங்களை கடந்த ஆண்டு தனியார் காணியொன்றில் அமைந்துள்ள கட்டடத்தில் பொருத்தியது. குறித்த அரிசி ஆலையும் இயங்கி வந்தது.

ஆனால் அந்தத் தனியார் கட்டடத்தை அதன் உரிமையாளர் மீளப் பெற்றுக் கொண்டதால் அரிசி ஆலை இயங்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.சகிலாவிடம் கேட்ட போது:

இந்த விடயம் உண்மையானது. தற்போது சிலா வத்தை , சிலாவத்தை தெற்கு ஆகிய பகுதிகளில் சுமார் 130 மாற்றுத் திறனாளிகள் உள்ளனர்.

இந்த நிலையில் இரண்டு லட்சத்துக்கு மேலான பெறுமதியுடைய இயந்திரங்கள் தற்போது செயற்படாத நிலையில் இந்த அரிசி ஆலையை அமைப்பதற்குச் சொந்தமாகக் காணி யொன்று தேவைப்படுகின்றது.

காணி வழங்கப்படுமாயின் இந்த ஆலையை இயக்குவதன் மூலமாக மாற்றுத் திறனாளிகள் பயனடை வார்களெனத் தெரிவித்தார். (க-6)

## சில்லறை இல்லாததால் இறக்கிவிடப்பட்ட வயோதிபர்

பயணக் கட்டணத்தைச் சில்லறையாக செலுத் தாததால் பயணியை இறக்கி நடுத் தெருவில் விட்ட நடத்துநரின் செயலால் மனமுடைந்த பயணி நடந்து வீடு சென்ற சம்பவம் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை மாலை 4 மணியளவில் வவுனியா தனியார் பஸ் ஒன்றில் ஏறிய வயோதிப ரொருவர் நொச்சிமோட்டைக்கான ரிக்கற்றைப் பெற்றார். அவரிடம் நூறு ரூபா தாள் காசு மட்டுமே இருந்தது.

சில்லறைக்காசு எதுவும் இல்லை. அதனால் அவர் தாண்டிக் குளத்தில் நடத்துநரால் இறக்கி விடப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ரு-402)

# நெடுந்தீவுப் பிரதேசப் பாடசாலைகளின் கனடா பழைய மாணவர் சங்க விழா



யாழ்ப்பாணம், டிசெ.23

நெடுந்தீவு பாடசாலைகளின் கனடா பழைய மாணவர் சங்கம் தனது பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி அதன் நெடுந்தீவுக்கிளை நடத்திய விழாவும், மலர் வெளியீடும் திங்கட்கிழமை நெடுந்தீவு பிரதேச சபை தேவா கலையரங்கில் நடைபெற்றன.

நெடுந்தீவு கிளைத் தலைவர் எ.அருந்தவசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் உதவிச் செயலாளரும், நெடுந்தீவின் முன்னாள் உதவி அரச அதிபருமான ஜே.எக்ஸ்.செல்வநாயகம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு பலநோ.கூ.சங்கத் தலைவர் அ.வெ.அரியநாயகம், பல.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ்.கோபாலசிங்கம், கனடாவைச் சேர்ந்த கே.சவரிமுத்து உட்பட கடற்படை, பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக விருந்தினர்கள் ஊர்வலமாக மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு பிரதம விருந்தினர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் மங்கள விளக்கேற்ற நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தலைமையுரையைத் தொடர்ந்து ஆசியுரைகள், விருந்தினர் உரைகள், கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. விழாவில் முதியவர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கான சேமிப்புத் தொகைக்கான வங்கிப் புத்தகங்கள் பார்வை குறைந்த பல்கலைக் கழக மாணவி உட்பட பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிகளையும் விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர். நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர்.

கனடா சங்கத் தின் சார்பில் கிளைத் தலைவர் எ.அருந்தவசீலன் பொன் னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டார். 'பகிர்' விழா மலர் வெளி யீடும் இடம் பெற்றது. (வ-7)

## பிடுங்கிச் செல்லப்படும் வீதியோரச் சூலங்கள்

*இரும்பு சேகரிப்போர் கைவரிசை*

*சுழிபுரம், டிசெ.23*

*கிராமப்புறங்களில் பழைய இரும்புகளை சேகரிக்கச் செல்லும் வியாபாரிகள் வீதியோரங்களில் காவல் தெய்வங்களாக வைக்கப்பட்டுள்ள வைரவர் சூலத்தையும் விட்டு வைக்கவில்லை. சன நடமாட்டம் இல்லாத இடங்களில் வியாபாரிகள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.*

*குறிப்பாக சுழிபுரம், மாதகல் பகுதிகளில் வீதியோரங்களில் காவல் தெய்வங்களாக வைரவர் சூலம் ஆங்காங்கே இருப்பதை அவதானித்த வியாபாரிகள் சனநடமாட்டத்தை அவதானித்து சூலத்தை பிடுங்கிச் செல்கின்றனர்.*

**“ ”**

**சூலம் ஆங்காங்கே இருப்பதை அவதானித்த வியாபாரிகள் சன நடமாட்டத்தை அவதானித்து சூலத்தைப் பிடுங்கிச் செல்கின்றனர்.**

*தொழிலுக்குச் செல்வோர் தமது காவல் தெய்வங்களை வழிபடுவதற்கு சூலம் வைக்கப்பட்டிருந்த இடங்களுக்கு வழிபாடு செய்யச் சென்று ஏமாற்றத்துடன் செல்கின்றனர்.*

*இரும்பு வியாபாரிகளது இத்த கைய செயலால் மதவழிபாடுகளை கூட மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.* (வ-14-28)


# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**சீனிவாசகம் பரமேஸ்வரன்**

திதி: சஷ்டி

தோற்றம்
09.01.1924

மறைவு
21.12.2005



பாசத்துடன் அரவணைத்து அன்புடன் எம்மைத் தாங்கி எம் குடும்பத்தைக் கட்டிக் காத்த எமது அன்புத் தந்தை இன்று எம்மை விட்டுப் பிரிந்து எட்டு ஆண்டுகள் ஆனாலும் நீங்காத உங்கள் நினைவுகளுடன்

நவக்கிரி,
புத்தூர்.

ஏங்கித் தவிக்கும்
குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**கனகசபை கவீந்திரராசா (ஐயர்)**

திதி : ஷஷ்டி
(23.12.2013)

மலர்வு
25*01*1959



உதிர்வு
14*01*2012

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு மறைந்ததையா!
நம்பமுடியவில்லை!
எம் உள்ளங்களில் என்றும் நிறைந்திருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காரைக்கால் வீதி,
இணுவில்.

குடும்பத்தினர்.

(42876) (7.6.3)

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் புவனேந்திரன்

**(இளைப்பாறிய உத்தியோகத்தர்-RedBarna,UN)**



நல்லூரைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் புவனேந்திரன் (இளைப்பாறிய உத்தியோகத்தர்-Redbarna,UN) 21.12.2013 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் சோமசுந்தரம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் பாசமிகு ஏகபுதல்வனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி ஆறுமுகம் தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி பாக்கியத்தின் (ஓய்வுநிலை உதவி நூலகர்-யாழ். பொதுசன நூலகம்) பாசமிகு கணவரும், ஜெயராணி, ஜெயகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்துச்சாமி, முத்துக்குமாரு (லண்டன்), காலஞ் சென்ற விவேகானந்தன் மற்றும் ஜெகநாதன் (பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.), Dr.சிவநேசன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சிவராம், ஜனனி, பிரசாந்தன், நிஷானி, வாரணி, மாதுகா, சனுஜா, தசாங்கினி, சிவறஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனும், அஞ்சலா, மெலனி, மோகன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 மணியளவில் இல.118, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 217 9518
021 300 1095

தகவல்:
திருமதி பாக்கியம்
(மனைவி)

# புனரமைப்பு பணி இன்றி அம்பலப்பெருமாள்குளம்

அக்கராயன்,டிசெ.23

துணுக்காய் அம்பலப்பெருமாள் குளம் 3 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைப்புப் பணிகள் நிறைவு பெறாது அரை குறையாகக் காணப்படுகிறது.

இந்தக் குளத்தின் அணைக்கட்டு அரிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் குளத்தின் உட்பகுதியில் அலைக்கற்கள் பரவப்பட வில்லை.

450 ஏக்கர் நீர்ப்பாசனம் வழங்கக் கூடிய இந்தக்குளம் நீண்ட காலமாக புனரமைக்கப்படமால் இருப்பது தொடர்பாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலர், முல்லை அரச அதிபர் ஆகியோரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குளப் புனரமைப்பின் மந்த கதி தொடர்பாக வட மாகாண விவசாய அமைச்சர் கவனம் செலுத்த வேண்டுமென கிராம விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பெரும் மழைப் பொழிவு இடம்பெறுமானால் குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலை காணப்படுகின்றது.

1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் குளத்தை நம்பி 100 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-18)

# திருவாசக விழா

புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் ஆலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம்பெறும். தொடர்ந்து 'திருவாசகத்தேன்' எனும் பொருளில் சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசனும், 'மார்கழியும் திருவாசகமும்' எனும் தலைப்பில் சைவப் புலவர் ஏ.அனுசாந்தனும் சொற்பொழிவாற்றுவார்கள். (ந)

# விழிப்புணர்வு ஒன்றுகூடல்

மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக "பெடாஸ்ரா" நிறுவனம் விழிப்புணர்வு ஒன்றுகூடலை நடத்தவுள்ளது. இந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு எஸ். எழில்வேந்தன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் மாற்றுத் திறனாளிகள், மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக இயங்குகின்ற சமூக நிறுவனங்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம். (ந-288)

# விசர் நாய்களால் கடியுண்ட ஐவர்

விசர் நாய்களால் வயோதிபத் தம்பதியினர், 2 சிறுவர்கள் உட்பட ஐவர் கடியுண்டனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நுணாவில் மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வாரித்தம்பி (வயது-86) அவரது மனைவியான வாரித்தம்பி ராஜலட்சுமி (வயது-83) சாவகச்சேரி வினாசித்தம்பி வீதியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் மெரிதிகா (வயது-71), பரமானந்தன் தேனுஜன் (வயது-12), சாவகச்சேரி பொலிஸ் நிலைய வீதியைச் சேர்ந்த உபேந்திரன் உஷாளினி (வயது-9) ஆகியோரே விசர் நாய்களினால் கடியுண்டவர்கள் ஆவர்.

ஐவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ-9)

# கௌரவிப்பு



வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைச்சேர்ந்த கவிஞர் வல்லிபுரம் யோகானந்தசிவம் அண்மையில் கலா பூஷணம்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். (ஒ)

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்




நெடுந்தீவு கஸ்பார் செல்வம் பேனாட் யாழ்ப்பாணம் நீதிநிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி ஆர்.எஸ்.மகேந்திராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் நெடுந்தீவு றோ.க.வித்தியாலயம், நெடுந்தீவு மகாவித்தியாலயம், ஆனைப்பந்தி உயர் கல்வி நிறுவனத்தின் பழைய மாணவராவார். ஆங்கில ஆசிரியராக நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயம் என்பவற்றில் பணியாற்றிய பேனாட், சிங்கப்பூர், ரியாத் சவூதி அரேபியா நாடுகளில் அமெரிக்கத் தூதரக, பாதுகாப்பு உத்தியோகத்தராகவும் இருந்துள்ளார். சமூக சேவையாளரான இவர் நெடுந்தீவு பொலிஸ் பொது மக்கள் சிவில் நிர் வாகத்தின் பிரதிநிதியாகவும் ... நீத தோணிமயர் மீள் எழுச்சித்திட்டத்தின் செ... ளராகவும் உள்ளார். (ந-7)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு
25.03.1930

இறப்பு
09.12.2013

## அமரர் சுப்பையா சண்முகம்


கடந்த 09.12.2013 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் நாளை (24.12.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் றோட்,
பரவக்குளம், திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சூசை அல்பிறட்



நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சூசை அல்பிறட் 21.12.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசை-மரியாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விசுவாசம் மற்றும் பிரகாசி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், லூசியாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருளப்பு, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஜெயசீலி மற்றும் ஜெயசீலன் (லண்டன்), அருள்சீலி, காலஞ்சென்ற அருள்சீலன் (பிரான்ஸ்) மற்றும் ஞானசீலி, ஞானசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வில்பிறட் (பிரான்ஸ்), வவி (லண்டன்), சிவகுமார் (பிரான்ஸ்), யான்சி ஆகியோரின் அன்பு மாமனாரும் மீரா எம்சியா, விவக்ஷன், வோன்சியா, செறோன் வீசா (லண்டன்), அருண், விதுசா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை.
077 160 6179

தகவல் :
குடும்பத்தினர்.

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆசிரியமணி அமரர்
**நமசிவாயம் வாதவூரர்**
(அளவெட்டி வடக்கு)



மண்ணில் 10.11.1924 — விண்ணில் 27.12.1999

திதி : 23.12.2013

அப்பா நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து
ஈரேழு ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம்.

என்றும் நினைவுடன்
**குடும்பத்தினர்.**
மாவிலங்கை, அளவெட்டி.

(42992)(7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி(ராணி)செல்லையா

(ஓய்வுபெற்ற ஆசிரியை)



வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் டச்சுவீதி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி (ராணி) செல்லையா 21.12.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திய கலாநிதிசி.வை. செல்லையாவின் அன்புமனைவியும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை-சிவஞானம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அருட்செல்வன் (லண்டன்), பாஸ்கரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலகௌரியின் அன்பு மாமியும், நடீஷியா (UK), கவிநயா (UK) மற்றும் ஷஜீவன், அக்ஷனா ஆகியோரின் பாச மிகு பேர்த்தியும், பரராஜசிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற நாகேந்திரன் மற்றும் மகேந்திரன், தெய்வேந்திரன், சந்திரன், பத்மினி ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ் சென்றவர்களான சதா சிவம், தம்பிராசா, அழகரத்தினம் மற்றும் அன்னம்மா, புவனேந்திரன், விஜயசிங்கம் காலஞ் சென்றவர்களான சாவித்திரி, விமலா, வேலாயுதர் மற்றும் கலா, ராஜசேகரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 12.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சுவீதி, உடுவில், சுன்னாகம். (42987)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 01 1945 — மறைவு 23 11 2013



### அமரர் ஆறுமுகம் சிவஞானம்

(கந்தசாமி)

எமது குடும்பத்தின் அணையாத அகலாய் அகத்தில் ஒளி வீசி அன்புச் சுடராகத் திகழ்ந்த அமரர் ஆறுமுகம் சிவஞானம் (கந்தசாமி) அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (23.12.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும், மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தந்தையின் மறைவுச் செய்தி அறிந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டுஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் இரங்கல் செய்தி தந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும், விருந்தோம்பல் செய்தோருக்கும், தொலை தூரங்களிலிருந்து அன்னாரைத் தேடிவந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், மலர் வளையம் செலுத்தி அஞ்சலி செய்தோருக்கும், அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பக்கமிருந்து உதவியோருக்கும், ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.10, தபால்கந்தோர் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 624 ஆசிரியர்களுக்கு உள்ளக இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.23

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 624 ஆசிரியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் உள்ளக இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வலிகாமம் கல்வி வலயத்தில் ஏற்கனவே இடமாற்றங்கள் கோரி ஆசிரியர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் அதிபர்கள், பாட ஆசிரிய ஆலோசகர்களது அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இடமாற்ற சபையின் அங்கீகாரத்துடன் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களது இருப்பிடம் மற்றும் போக்குவரத்து என்பவற்றைக் கருத்திற் கொண்டு இந்த இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 624 ஆசிரியர் களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இவற்றில் முதற்கட்டாக ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இரண்டாம் கட்டமாக இடைநிலை மற்றும் உயர்தரப் பிரிவு ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்படும்.

இதனைவிட வன்னிப் பகுதியில் இருந்து 57 பேருக்கு வலயங்களுக்கு இடையில் இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன - என்றார். (ந-14-86)

## வெவ்வேறு விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, டிசெ.23

ரியூசனுக்குச் சென்ற 8வயது மாணவன் வீதி விபத்தில் சிக்கி காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று மீசாலை பங்களா வீதியில் இடம்பெற்றது.

மாணவனை ஏற்றிச் சென்ற மோட்டார் சைக்கிள் மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மாணவன் தூக்கி வீசப்பட்டு காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மீசாலை ஐயா கடையடியை சேர்ந்த சுபேசன் மதுசன் (வயது-8) என்னும் மாணவன் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-9)

* * *

பஸ்ஸும் ஓட்டோவும் மோதிக் கொண்டதில் ஓட்டோ சாரதி காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவுநாவற்குழி கேரதீவு வீதியில் இடம் பெற்றது. விபத்தில் காயமடைந்த மறவன் புலோவைச் சேர்ந்த சிவபாதம் ஏகானந்தன் (வயது-43) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-9)

## தைப்பொங்கலை முன்னிட்டு போட்டிகள்

எதிர்வரும்தைப்பொங்கல் விழாவையொட்டி நல்லூர் சங்கிலியன் மன்றம் முன்பள்ளிச் சிறுவர்கள், பாடசாலை மாணவர்களுக் கான போட்டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பெயர் மற்றும் விபரங்களை எழுதி விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன் சங்கிலியன் மன்ற நிர்வாகத்திடம் ஒப்படைக்குமாறும் போட்டி நடைபெறும் திகதியும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-7)

## நெஞ்சக் கதவில் கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### கழிவுக்காகிதமும் காசாகலாம்

அசேதனப் பசளைகளின் பாவனையில் எமது பிரதேசம் முன்னிலை வகிப்பதன் மூலம் இந்த நிலமும் நிலத்தடி நீரும் பழுதடைவதுடன், மக்களும் பல்வகை நோய்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். சூழலியலாளர்களாலும் சமூகநலன் விரும்பிகளாலும் தொடர்ந்து சுட்டிக்காட்டப்பட்டுவரும் இந்த விடயம் ஆறிய கஞ்சி பழைய கஞ்சிதானே என்பது போலாகிவிடக்கூடாது. வடக்கின் உள்ளூராட்சி நிறுவனங்களால் சேகரிக்கப்படும் குப்பை கூளங்களைச் சேதனப் பசளைகளாக்கும் திட்டத்துக்கு உசுப்பேற்றுவதன் மூலம் இழப்புக்களைத் தவிர்க்க முடியாதுவிடினும் குறைக்க முடியும். வீட்டுக்கு வீடு மட்டுமல்ல உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் தலையிடி தரும் குப்பை கூளங்கள் அள்ள அள்ளக் குறையாமல் கூடிக்கொண்டே தான் போகும். முன்னாள் உப்பளமாயிருந்து குப்பை கூளங் களின் இந்நாள் இடுகாடாக - சுடுகாடாக மாறிவிட்ட கல்லுண்டாய்வெளி இதற்குச் சான்று.


கழிவுக் காகிதத்திலிருந்து மீள் உற்பத்தியாக காகிதத் தயாரிப்புக்கு வாழைச்சேனை காகித ஆலைக்கு மாதர்ந்தம் தேவைப்படும் கழிவுக் காகிதத்தின் பத்தில் ஒரு பங்குதான் அவர்களுக்குத் தற்போது கிடைக்கின்றதாம். அதேவேளை தமது மாதாந்தத் தேவையின் இரண்டரை மடங்கு கழிவுக் காகிதம் இந்தியாவுக்கு ஏற்றுமதியாகின்றதாம். இது, "இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட மீன்வளம் மிகுந்த ஒரு தீவு. ஆயினும் இலங்கை ரின்மீனை இறக்குமதி செய்கிறது" என்பதன் சகோதரமேதான். ஓ... இலங்கைப் பொருளாதாரமே!

வடக்கின் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஒன்றிணைந்து பொருத்தமானதொரு பொறிமுறையை தெரிவு செய்து கழிவுக் காகித சேகரிப்பு மையம் ஒன்றை உருவாக்கி அவற்றைச் சேகரித்து அனுப்புவதன் மூலம் கணிசமான வருவாயையும் பெற்றுக் கொள்ள முயற்சிக்கலாம். பழைய இரும்பு, உடைந்த பிளாஸ்டிக் ஆகியன போன்று வீடுகளில், அலுவலகங்களில், உணவகங்களில், வீதிகளில் கசக்கி எறியும் காதிகமும் காசாகலாம் என்பதுடன் இது பகுதித் தொழிலாக அன்றி ருசி பிடிபட்டால் முழுநேரத் தொழிலாகவும் மாறிவிடக்கூடும்.

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் தம்பித்துரை

(ஓய்வுபெற்ற உடற்பயிற்சி ஆசான்)



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் தம்பித்துரை நேற்றுமுன்தினம் (21.12.2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சின்னாச்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ் சென்றவர்களான வைத்திலிங்கம்-நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், பத்மாசினி (கனடா), தயாளன் (கனடா), சிவரூபன் (ஹொலண்ட்), சுமதினி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், சீவரெத்தினம் (கனடா), சாந்தினி (கனடா), வனஜா (ஹொலண்ட்), தயாபரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கனகசபை, கந்தையா, சரஸ்வதி, செல்லம்மா, செல்லையா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற வர்களான பொன்னார் - நாகமுத்து, மார்க்கண்டு ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
தொ.பே. 021 224 0562

(42993) (45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# பதவி உயர்வுகள் இதுவரை இல்லை

## 70,000 ஆசிரியர்கள் பாதிப்பு

கொழும்பு,டிசெ.23

2010 ஆம் ஆண்டிலிருந்து கல்வி அமைச்சு எந்தவொரு ஆசிரியருக்கும் பதவி உயர்வுகளை வழங்கவில்லை என்று ஐந்து ஆசிரிய சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

அதனால் தகுதிகளைப் பெற்றுள்ள 70,000 ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகள் வழங்கப் படவில்லை என்று இலங்கை ஆசிரிய சேவைகள் சங்கம், சுயாதீன ஆசிரியர்கள் சங்கம், கத்தோலிக்க ஆசிரிய சங்கம், லங்கா பிரிவெனாக்கள் ஆசிரிய சேவைகள் சங்கம் மற்றும் இலங்கை பாடசாலை அதிபர் சேவைகள் சங்கம் ஆகியன கல்வி அமைச்சருக்கு மனு மூலம் தெரிவித்துள்ளன.

ஆசிரிய பதவி உயர்வுகளை வழங்குவதற்கு ஒவ்வோர் ஆண்டிலும் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இறுதியாக 2010 ஆம் ஆண்டிலேயே கல்விச் செயலரினால் அந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்று ஆசிரியர் சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.

புதிய ஆசிரிய சேவைகள் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்து கடந்த மூன்று

"-"

**ஆசிரிய சேவையில் பதவி உயர்வுகளைப் பெற வேண்டியவர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

ஆண்டுகளாக ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என்று ஆசிரிய சங்கங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆசிரிய சேவையில் பதவி உயர்வுகளைப் பெற வேண்டியவர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று ஆசிரியர் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை தாமதமாகியுள்ள ஆசிரிய பதவி உயர்வுகளை வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சின் செயலர் அனுர திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆசிரிய சங்கங்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டு அந்தப் பதவி உயர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

(ச-22)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவக்கொழுந்து ஆறுமுகம்



சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் சிவக்கொழுந்து 22.12.2013 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் ஆறுமுகத்தின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2013) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு, மீசாலை. (33046) (4.6.3) தகவல்: பிள்ளைகள்.


## வேலையாள் தேவை

பாம் வேலைக்கு ஆள் தேவை.
தொடர்பு 075 9880000

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ்.றோட், இணுவில்.
இரு இடத்திலும்

யாழ் மாவட்டத்தில் உயர் நல்ல பெறுபேறுகளைப் பெற்ற எம் மாணவர்களை வாழ்த்தி, இது போல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட ஆரம்பமாகின்றது

A/L DAY CLASS
கலை, வர்த்தகப்பிரிவு
ஆரம்பம்: 27.12.2013
(வெள்ளி -7.30 A.M)

★ நீங்கள் நன்கு அறிந்த எமது வழமையான ஆசிரிய குழுவினால்....
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

Note: எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தங்கேணியிலும் A/L DAY CLASS ஆரம்பமாகின்றது.
(C/10644)(10.6.3)


## அறியத்தரவும்

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சைவக் குருமார்களின் பிள்ளைகள் 26.12.2013 வியாழக்கிழமைக்கு முன் 076 6166325 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## மிகப் பிந்திய வரவு

கனடா படிக்க உழைக்க
1 மாதத்தில் பறக்கலாம்

3 பேருக்கு மாத்திரமே இவ் அரிய வாய்ப்பு
முடிவு திகதி 26.12.2013

முக்கிய குறிப்பு:- இவை சம்பந்தமான சட்ட ஆவணங்களை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.

www.thisaivisa.com
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 021 221 9016, 021 568 9090


## மரண அறிவித்தல்

### திருமதி கமலா சுப்பிரமணியம்

22.12.2013 உதயன் 20 ஆம் பக்கத்தில் பிரசுரமான மரண அறிவித்தலில் காலமான திருமதி கமலா சுப்பிரமணியம் அவர்களின் புத்திரிகளான ரூபராணி, கலாராணி, ஜெயராணி ஆகியோரின் பெயர்களும் மருமகன் பாலதாஸ் அவர்களின் பெயரும் பேர்த்தி சுபஸ்தியின் பெயரும் பிரசுரத்தில் தவறிவிட்டதை அறியத்தருகின்றோம். (சி/10645) (4.6.3)

## மரண அறிவித்தல்

### சிங்கநாயகம் இராஜசிங்கம்

( ஓய்வு பெற்ற புகையிரத உத்தியோகத்தர்)



சோடாக்கொம்பனி லேன் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி குருக்கள் ஒழுங்கையை வசிப்பிடமாகவும், தற்போது வேப்பங்குளம் வவுனியாவில் வசித்து வந்த வருமான சிங்கநாயகம் இராஜசிங்கம் நேற்று (22.12.2012) ஞாயிற்றுக் கிழமை கால மானார்.

அன்னார் சிங்கநாயகம் - நாகம்மா தம்பதி யரின் அன்புமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் கோணேஸ்வரசிங்கம், கோணேஸ்வரி, துஷ்யந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் கலைமதி, திலகாம்பிகை, சிவபாலன், சசிதரன் ஆகியோரின் அன்புமாமனும் சிந்துஜா, பைரவி, மிதுசாயினி, கார்த்தி, கீர்த்தி, சதுஷினி, சதுஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான பௌமலசிங்கம், துரைசிங்கம், இரத்தினசிங்கம், பாக்கியம், அன்னலட்சுமி மற்றும் இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2013 ) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு வேப்பங்குளம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேப்பங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

6 ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம் வவுனியா. T.P : 024 2226718

தகவல்: குடும்பத்தினர்

## கண்ணீர் காணிக்கை

எமது பாடசாலை அதிபர்

### செல்வி றோசறிஜெயநாயகி அந்தோனிமுத்து



எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் கண்ணும் கருத்துமாக இருந்து அயராது பாடுபட்ட அன்னையே! மாணவரின் கல்வி உயர்வுக்காக கண்டிப்புடனும் அன்புடனும் சேவையாற்றி ஆசிரியர்களுடன் மதிப்புடனும் பரிவுடனும் பழகி பாடசாலையை நடத்திச் சென்ற அதிபர் அவர்களுக்கு எமது இதயம் கனிந்த கண்ணீர்க் காணிக்கைகள்

மல்லாகம். பாடசாலைச் சமூகம், யா/ குளமங்கால் றோ.க வித்தியாலயம்,


## Banking Class (CBF & DBF)

எதிர்வரும் March 2014 இல் Banking (CBF & DBF) பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் அனுபவமும் திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்களினால் நடத்தப்படுகின்றன.

சனி : 8.00 am to 4.30 pm ஞாயிறு : 8.00 am to 4.30 pm

AAT Foundation Level Intermediate Level Final Level

July 2014 இல் AAT Foundation Level, Intermediate Level, Final Level பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு January இல் ஆரம்பமாகவுள்ள வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறுகின்றன. வகுப்புக்கள் யாவும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்.

Spectra Skills
No:19, Stanley Road, Jaffna.
Tel: 021 222 1422, 021 222 1423


## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை



வட்டக்கச்சி இராமநாதபுரத்தைப் பிறப்பிடமாகவும், உயிலங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை 21.12.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி -நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராஜா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சிவப்பாக்கியம், காலஞ்சென்ற நடராஜா (ராசா), வள்ளியம்மை (கனடா), மகாலிங்கம் (சூட்டி-வட்டக்கச்சி), செல்வராசா (ஜேர்மனி), பரமசிவம் (கனடா), நவரட்ணம் (கனடா), புஸ்பா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி, பாமேஸ்வரி, கந்தசாமி, இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் பாலமனோகரன், பாலமனோகரி, பாலகௌரி, பாலகௌசிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஜனி, பூங்குன்றன், சிவதரன் ஆகியோரின் மாமியாரும், அருண், கஜிபன், அபிவர்ணா, மகிழினி, பவித்திரன், துர்க்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2013) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக உயிலங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயிலங்குளம். தகவல் : குடும்பத்தினர்.

(42996)(7.6.3)

## கண்ணீர் காணிக்கை

எமது பிரதேச செயலக கணக்காளர்
தி. திருவருட்செல்வன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கனகரஞ்சினி திருலோகசிங்கம்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த் திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை. பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்.


## NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

NALIN Information Technologies(Pvt)Ltd.

Mary Christmas & Happy New Year

23- 31 வரை

நத்தார் மற்றும் புது வருடத்தை முன்னிட்டு



கணனிகள், மடிக் கணனிகள்
HSPA Dongle (E-173), Pen drive,
Memory chip(Micro SD), External HDD,
Printer, Headphone அனைத்திற்கும்
விசேட விலைக்கழிவுகள் ! விபரங்கள் நேரில்.



இலவசம் Anti Virus (1y), Mouse, Head Phone
கணனிகள், மடிக் கணனிகள் கொள்வனவு செய்பவர்களுக்கு

No. 195/4, Parameswara Junction, Palaly Road.
021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin_it
Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431

## மது பான்சி

யாழ் வீதி, மானிப்பாய்

புதுவருடம், பொங்கலை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை

24 ஆம் திகதியிலிருந்து தைப்பொங்கல் 15ஆம் திகதி வரை



★ பாடசாலை உபகரணங்கள் அனைத்தும்
★ பாடசாலை பாக் வகைகள்
★ பிளாஸ்ரிக் பொருள்கள்
★ R.P.Co மெத்தைகள்
★ தம்ரோ மெத்தை, தளபாட பொருள்கள்
★ பேபி மெத்தை

✱ பேபி பொருள்கள் அனைத்தும்
✱ டாம்ரா
✱ கிடாரம்
✱ பொங்கல் பானை
✱ தாச்சி வகைகள்
✱ எவர்சில்வர் பொருள்கள்



(C/10287)(10.14)

# பொம்மை ஆட்சியை உருவாக்க ஜெனிவாவில் மேற்குலகம் சதி

## ஹெலஉறுமய தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

ஆப்கானிஸ்தான், ஈராக், எகிப்து மற்றும் லிபியாபோன்று இலங்கையிலும் பொம்மை ஆட்சியொன்றை உருவாக்குவதற்கு முயற்சிக்கும் மேற்குலக நாடுகள் இதற்கான களமாக ஜெனிவாத் தொடரைப் பயன்படுத்துகின்றன என்று அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

எனினும், கியூபா போன்று எமது நாட்டு மக்களும் அரசுடன் இருப்பதால் மேற்குலகின் திட்டம் நிறைவேறாது என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் மற்றும் பிரிட்டனின் அறிவிப்பு தொடர்பில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிப் பொதுச் செயலாளரும் மேல் மாகாணசபை அமைச்சருமான உதய கம்மன்பில கட்சியின் சார்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தமது தாளத்திற்கேற்ப ஆட்டம் போடும் அரசொன்றையே மேற்குலகம் எதிர்பார்க்கின்றது. அவ்வாறானதொரு பொம்மலாட்ட அரசை உருவாக்குவதே அவற்றின் நோக்கமாகும். ஆப்கானிஸ்தான், லிபியா, எகிப்து, ஈராக் போன்ற நாடுகளில் இவ்வாறுதான் நடந்தது. ஆனால், கியூபா 70 வருடங்களாக ஏகாதிபத்திய நாடுகளுக்கு எதிராகப் போராடியது. அந்நாட்டு அரசுடன் மக்கள் இருந்ததால் அந்நாட்டில் தமது திட்டத்தை நிறைவேற்ற இந் நாடுகளால் முடியாமல் போனது. எமது நாட்டு மக்களும் அரசுடன் இருப்பதால் சதித்திட்டங்கள் நிறைவேறாது.

நாம் அரசிலிருந்து வெளியேறினால் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்றால் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. கட்டாயம் வெளியேறுவோம் - என்றும் அவர் கூறினார். (ங-சி)

# நாடாளுமன்றக் கட்டடத்தைப் பார்வையிட முன் அனுமதி இனிமேல் தேவையில்லை

முன் அனுமதி பெறாமலே நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியைப் பார்வையிடுவதற்கும் நாடாளுமன்ற விவாதங்களைச் செவிமடுப்பதற்கும் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கடந்த 13ஆம் திகதி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் பொதுமக்கள் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியைப் பார்வையிடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினரொருவரது பரிந்துரை அவசியமாக இருந்தது.

இந்த நிலையில் கடந்த 12ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முன் அனுமதியின்றி நாடாளுமன்றத்தைப் பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

இதற்கமைய முன்னதாக அனுமதி பெறாது பொதுமக்கள் நாடாளுமன்றத்துக்கு வருவதற்கும், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியின் உட் புறம் தவிர்ந்த சுற்றுப்புறப் பாதுகாப்பு ஒழுங்குகளைத் தளர்த்தி விடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.

அத்துடன் பொதுமக்கள் நாடாளுமன்றுக்கு வந்து அங்கு அனுமதி பெற்றபின் கட்டடத் தொகுதியைப் பார்வையிட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-22)

# போர்க் குற்றவாளியாக மஹிந்தவை அறிவிக்குக

## பழ.நெடுமாறன் வலியுறுத்து

சென்னை, டிசெ.23

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சர்வதேசப் போர்க் குற்றவாளியாக அறிவித்து தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று உலகத்தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மதுரை புதூர் அருகே மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம் சார்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற மனித உரிமை மாநாட்டில், இலங்கையில் மனித உரிமை மீறலும், ஐக்கிய நாடுகள் சபை செயற்பாடும் என்ற தலைப்பில் அவர் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் போர் முடிந்த நிலையிலும், வடக்கு மாகாணம் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. எதிர்க்கட்சியினர் அரசுக்கு எதிராக கருத்துத் தெரிவிக்க அச்சப்படுகின்றனர். புதிதாக தெரிவான இலங்கை இராணு வத்தினருக்கு இந்தியாவே பயிற்சி அளிக்கிறது.

இலங்கையின் வடக்கு மாகாண புதிய முதல்வர் விக்னேஸ்வரனை அங்குள்ள இலங்கை ஆளுநர் முடக்கி வைக்கிறார். அத னால், தனக்கு சர்வதேச அளவில் நெருக்கடி ஏற்படும் என அஞ்சியுள்ள இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ வடக்கு மாகாண முதல்வரை சமரசம் செய்து வருகிறார்.

முதலாவது உலகப் போரில் ஹிட்லரின் நாசிப்படைகள் செய்த படுகொலையை சர்வதேச சங்கம் கண்டுகொள்ள வில்லை. இதனால் அது பின்னர் கலைக்கப்பட்டது. ஆகவே, ராஜபக்ஷவை போர்க் குற்றவாளி யாக்க சர்வதேச சமூகம் முன் வராவிட்டால், ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேசச் சங்கத்தின் கதியே ஏற்படும்.

எதிர்வரும் மார்ச்சில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கியநாடுகள்சபை மனிதஉரிமைகள் மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சர்வதேசப் போர்க் குற்றவாளியாக அறிவித்து தீர்மானம் கொண்டுவர வேண்டும் - என்றார். (வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்கு

நிலைகொள்ளச் செய்யப்பட்டுள்ளதானது, மறைமுக நோக்கங்களுக்காகவே என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவம் எங்கள் இடங்களை அபகரிக்கிறது. எமது நிலம், தொழில், தொழில் வாய்ப்புக்கள் என்பன கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. இதனைவிட தமிழ் விதவைப் பெண்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.

போர் முடிந்த பின்னர் வடக்கில் பொலிஸ் நடவடிக்கைகளை ஏன் இன்னமும் அரசு அதிகரிக்காமல் இருக்கின்றது? என்ற கேள்வியை சாதாரண சிங்கள மக்கள் அரசிடம் கேட்க வேண்டும் என்று முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். (ங-5)

### இடமாற்றம்

வாரம் பூநகரிப் பிரதேச செயலர் வசந்தகுமார் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

பூநகரிப் பிரதேச செயலர் வசந்தகுமார்பணியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார் என எனத்தெரிவிக்கப்படுவது தொடர்பில் அரச அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, அவர் தற்போது கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளதாக்வும் அவருக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (ங-5)

### அடுத்த மாதம்

முறைப்படுத்தும் நடவடிக்கையில் ஒரு பகுதியாக இந்த உண்மை நல்லிணக்க ஆணைக் குழு அமைக்கப்படலாம்.

இதன் முக்கியமான நோக்கம், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கும். நல்லிணக்க ஆணைக்குழு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆகியன ஒன்றுடன் ஒன்று முரண்படாதவாறு இது அமைக்கப்படும்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் வீரமந்திரி இதற்குத் தலைமை தாங்குவதற்கு சிறந்தவராக இருப்பார்.

நீதிபதி உடலகம, மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் அங்கம் வகித்தவர்களான கலாநிதி றொகான் பெரேரா, எச்.எம்.ஜி.எஸ் பாலிஹகார ஆகியோரும் ஆணைக்குழுவின் தலைமைக்குப் பொருத்தமானவர்கள் - என்றார்.

எனினும், இந்த உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது குறித்தோ அதற்குத் தலைவராக யாரை நியமிப்பது என்பது குறித்தோ, இலங்கை அரசு இன்னமும் முடிவு எதையும் எடுக்கவில்லை என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார் - இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-5)

### வாள்வெட்டில்

குழுவைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு எச்சரிக்கையின் பின் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தக்குழுவினரே நேற்றிரவு அந்தப் பகுதிக்கு வந்து குறித்த பாடசாலை மாணவனை வாளால் வெட்டியதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ங-86-400)

### அடுத்த

தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, நிமல்சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், அநுர பிரியதர்சன யாப்பா ஆகியோரின் பெயர்களே அரசின் உத்தேசப் பிரதமர் பட்டியலில் இருப்பதாகவும் தெரியவருகிறது.

அதேவேளை, தேர்தல்கள் நடைபெறவுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அடுத்த பிரதமர் யார் என்று அறிவித்தால் அது அரசுக்குள் மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதால் மாகாண சபைத் தேர்தல்கள் முடிவடையும் வரை புதிய பிரதமர் பெயர் விவரத்தை அரசு அறிவிக்காது என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (ங-சி)

### மன்னாரில்

ஆனந்தி கனகரட்ணம் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன் பின்னர் மன்னார் நீதிவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரின் முன்னிலையில் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட இடத்தை தோண்டும் பணி தொடர்ந்து நடைபெற்றது.

நேற்றுமுன்தினமும் நேற்றும் மனிதப் புதைகுழிகளை தொடர்ந்து தோண்டிய போது மேலும் சில மனித மண்டை ஓடுகளும் எலும்புகள் முதலான எச்சங்களும் மீட்கப்பட்டன. நேற்றுவரை 10சடலங்களின் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேபோன்று இன்னும் பல சடலங்களின் எச்சங்கள் அப்பகுதியில் இருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுவதால் தொடர்ந்து இன்றும் மன்னார் நீதிவானின் முன்னிலையில் மனிதப் புதை குழியைத் தோண்டும் பணிகள் நடைபெறவுள்ளன.

குறித்த மனிதப் புதைகுழி காணப்பட்ட பகுதியில் இராணுவ முகாம் ஒன்று இருந்ததாகவும் தெரியவருகிறது. இந்தப் பகுதியில் ஏராளமான மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வருவது அங்குள்ள மக்கள் மத்தியில் பெரும்பரபரப்பையும் பதற்றத்தையும் தோற்றுவித்துள்ளது. (ங-12)

### வயோதிப

பார்ப்பதற்கு அடிக்கடி சென்று வரும் இவர் சம்பவ தினத்திற்கு முதல்நாள் குறித்த காணியில் உள்ள வீட்டில் தங்கியிருந்துள்ளார். இந்த நிலையிலேயே அவர் நேற்று கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது கை ஒன்று முறிந்த நிலையில் காணப்படுகிறது. எனவே அவரை அடித்து கையை முறித்து கொலை செய்த பின்னர் கிணற்றுக்குள் வீசப்பட்டிருக்கலாம் என்று உறவினர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட வயோதிபப் பெண்ணின் சடலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. திடீர் மரண விசாரணை ஆதிகாரி கே.திருலோகமூர்த்தி சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6)

### சர்வதேசத்தை

திக்கும் உள்நாட்டிலேயே எமக்குப் பொருத்தமான தீர்வைக் காண்பதற்கு சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவும் வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் உள்ளிட்ட வட மாகாண சபை உறுப்பினர்களும் அரசுடன் கைகோர்க்க வேண்டும்" என அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதியின் இந்த அழைப்புத் தொடர்பில் தமது கட்சிகளின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, நவசம சமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிஷக் கட்சி ஆகியவற்றின் முக்கிய உறுப்பினர்கள் மேற்படி கருத்தை வெளியிட்டனர்.

இதுதொடர்பில் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், தலைமைத்துவ சபையின் உறுப்பினருமான மங்கள சமரவீர தெரிவிக்கையில்,

"போர் முடிவடைந்தும் கூட தமிழர்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. காரணம் இந்த அரசுக்கு இவர்களின் பிரச்சினையை தீர்த்துவைக்கவேண்டும் என்ற உண்மையான அக்கறையும், மனோநிலையும் இல்லை. தேசிய ஒருமைப்பாடு தொடர்பில் சிறந்த தீர்வை அரசு கண்டறிந்ததன் பிறகே ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். ஆனால், இங்கு அப்படியல்ல.

இது வெறும் நாடகமாகும். அதா வது, ஜெனிவாக் கூட்டத்தில் தான் தப் பித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியே இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பை அழைத்து இந்த அரசு நாடக மாடுகிறது" என்றார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்ததாவது,

"இனப்பிரச்சினையைத் தீர்க்க கூட்டமைப்பை இந்த அரசு அழைக்க வேண்டிய தேவையே இல்லை. ஏனென்றால், இந்த அரசுக்கு நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையான ஆசனங்கள் இருக்கின்றன. இந்தப் பெரும்பான்மையான பலத்தை வைத்தே தமிழர்களின் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்து வைக்க முடியும். அதுமட்டுமல்ல, அரசுக்கு தமிழர்கள் மீது உண்மையான அக்கறை இருக்குமானால், போர் முடிவடைந்தவுடனேயே அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இவற்றை செய்யாது கூட்டமைப்பை அழைப்பது சர்வதேசத்தை ஏமாற்ற அரசு செய்யும் ஒரு வித்தை இது. கூட்டமைப்பு அரசோடு கைகோர்க்காவிட்டால் வடக்கில் சிவில் ஆளுநரை நியமித்து அங்குள்ள காணிகளை மீண்டும் தமிழர்களுக்கே கொடுக்க ஜனாதிபதியால் முடியாதா?- முடியும். ஆனால், செய்யாது. காரணம், இந்த அழைப்பானது ஐ.நாவிலிருந்து தப்பிக்கவும், கூட்டமைப்புடன் சேர்த்து ஒட்டுமொத்த தமிழர்களையும் ஏமாற்ற அரசினால் போடப்பட்ட திட்டமாகும்" என்றார்.

ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவிக் கையில்,

"கூட்டமைப்புடன் இணைந்துதான் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை. அரசு நினைத்திருந்தால் 2009 ஆம் ஆண்டே இனப்பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும். இதையெல்லாம் விடுத்து தற்போது கூட்டமைப்பை தீர்வுக்கு அழைப்பதானது அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரில் தப்பிக்கவே ஒழிய வேறெந்த நோக்கமுமில்லை" என்றார்.

நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு தெரிவிக்கையில்,

ஒரு பொய்யான செயற்பாட்டையே இந்த அரசு செய்து வருகிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால் முதலில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வடக்கிலுள்ள இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும். இவை மட்டுமன்றி மாகாணசபைகளுக்குள்ள அதிகாரத்தை அவர்களுக்கே கொடுக்க வேண்டும். இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண நினைப்பது முடியாத ஒன்றாகும்" என்றார். (ங-சி)

## யங்ஸ்ரார் வென்றது



யாழ்ப்பாணம், டிசெ.23

வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சாந்தன்-யூட்சசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'பி' அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## சதுரங்கத் தொடர் ஜனவரி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.23

ஆளுநர் செயலகத்தினால் ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்கான வடமாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த 6 வயது, 8 வயது, 10 வயது, 12 வயது, 14 வயது, 16 வயது, 18 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலான சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ங-23)

## வென்றது யங்ஹென்றிஸ்

பருத்தித்துறை, டிசெ.23

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் தனது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 3 ஆம் இடத்துக்கான ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் இளவாலை யங் ஹென்றிஸ் அணியோடு மோதவிருந்த நாச்சிக்குடா சென்.மேரிஸ் போட்டிக்கு வருகை தராமையால் யங் ஹென்றிஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (த-422-23)

# சதுரங்க போட்டியில் பங்கேற்பதற்காக தமிழ் மாணவன் ஹரிகிசன் டுபாய்க்கு


கொழும்பு,டிசெ.23

உலக இளைஞர் அணிகளுக்கிடையிலான சதுரங்க சம்பியன் கிண்ணப் போட்டியில் பங்கேற்பதற்காக கண்டி திருத்துவ கல்லூரியில் நான்காம் தரத்தில் பயிலும் மாணவன் கிருபாகர் ஹரிகிசன் டுபாய் பயணமானார்.

பத்து வயதிற்கு கீழ்ப்பட்ட ஆண்களுக்கான போட்டியிலேயே இவர் பங்கேற்கவுள்ளார்.

இந்த போட்டிகள் டுபாய் அல் ஹாயின் பல்கலைக்கழகத்தில் கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமானதுடன் டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையிலும் நடைபெறும்.

இலங்கையில் நடைபெற்ற ஒன்பது வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் போட்டியில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டுள்ள இவர் போலந்து (2010), இந்தியா (2011), மற்றும் ரஷ்யா(2011) ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேச தரத்திலான போட்டிகளிலும் பங்கேற்று வெற்றியீட்டியுள்ளார்.



இவர், வடமராட்சி உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் கண்டியை வசிப்பிடமாகவும் உடுப்பிட்டி அமெரிக்க மிஷனின் பழைய மாணவருமான குணரத்னம் கிருபாகரன் மற்றும் திகனை மாபேரிதென்ன வித்தியாலயத்தின் ஆசிரியையான காஞ்சனா ஆகியோரின் மகனாவார்.

> இவர் போலந்து (2010), இந்தியா (2011), மற்றும் ரஷ்யா(2011) ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேச தரத்திலான போட்டிகளிலும் பங்கேற்று வெற்றி யீட்டியுள்ளார்.




யாழ்ப்பாணம், வவுனியா மேசைப்பந்தாட்டச் சங்கங்கள் அபான்ஸ், ஸ்ரை இன்ரர் நஷனல் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பெண்களுக்கான போட்டியில் சிறந்த வீராங்கனையாகத் தெரிவாகிய யூனியன் கல்லூரி மாணவி எஸ்.சிந்துஷாவுக்கு பி.என். பெஸ்ரோன்ஜி விருதை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட் வழங்கினார். (ங-23)

## கிரிக்கெட் பயிற்சி முகாம் கனகபுரம் மைதானத்தில்

கிளிநொச்சி டிசெ.23

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றின் கிரிக்கெட் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் கடந்த வெள்ளிக்கிழமை கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.



இதில் யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் லக்சித ஹேரத், மன்னார் - வவுனியா மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் ஜெயக்குமாரன், கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் கங்காதரன் ஆகியோர்பயிற்சிகளை வழங்கினர். இந்தப் பயிற்சி முகாமில் 16 பேர் கலந்து கொண்டனர். (த-23)

## தாவடி காளியம்பாள் தாச்சி அரையிறுதிக்கு

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் மின்னொளியில் நடத்தப்படும் இளைஞர் வெற்றிக் கிண்ணத்துக்கான தாச்சி சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள உதய சூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் உதய சூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்தாடிய தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி 8:3 என்ற பழங்களின் அடிப்படையில் வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ங-23-86)

## மயிலிட்டி கலைமகளை வென்றது கண்ணகி வி.க.

வலி.வடக்கு, டிசெ.23

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தெற்குப் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் மின்னொளியில் நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகமும் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக்கழகம் பெரும் உற்சாகத்துடன் விளையாடி 9:3 என்ற பழங்கள் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் களம் புகுந்த இரு அணிகளும் பெரும் எதிர்பார்ப்புடன் மோதிக் கொண்டன.

ஆனாலும் கண்ணகி விளையாட்டுக்கழகம் மைதானத்தில் தமது திறமையை அதிரடியாக மீண்டும் வெளிப்படுத்தி 4:2 என்ற பழங்கள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

ஆட்ட நிறைவில் கண்ணகி விளையாட்டுக்கழகம் 13:5 என்ற பழங்கள் அடிப்படையில் மயிலிட்டிகலைமகள் விளையாட்டுக் கழகத்தைவென்றது. (த-86-23)

## மயிலங்காடு ஞானமுருகன் வாகை

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில்இடம்பெற்றுவருகின்றன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்[illegible]



ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. பரபரப்பான இந்த ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையா[illegible]ழக அணி 2:1 என்ற கோ[illegible]ணக்கில் வெற்றி பெற[illegible]து. (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.23

சரவத்தை நியூ வொரியஸ் விளையாட்டுக் கழகம் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நியூ வொரியர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றவத்தசிவாணந்தா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. 8 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ங-23)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தெற்குப் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினரால் இளைஞர் வெற்றி கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள உதய சூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தையிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ங-23-86)

## அரையிறுதி ஆட்டத்துக்கு குருநகர் பாடும் மீன் தகுதி




யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற காலிறுதி யாட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

அதில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் 6:0 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# ஆசியக் கிண்ணத்தைப் புறக்கணித்து நெருக்கடி கொடுக்குமா பாகிஸ்தான்?




பங்களாதேஷில் நடக்கவுள்ள ஆசியக் கிண்ண, 20/20 உலகக் கிண்ணத் தொடரைப் பாகிஸ்தான் புறக்கணிக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

பங்களாதேஷில் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் என நான்கு நாடு கள் பங்கேற்கும் ஆசியக் கிண்ணத் கிரிக் கெட் தொடர் நடக்கவுள்ளது.

இதனைத் தொடர்ந்து அடுத்து மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை 20/20 உலகக் கிண்ணத் தொடர் நடக்கவுள் ளன.

இதற்கிடயே சமீபகாலமாக பங் களாதேஷில் பாகிஸ்தானுக்கு எதிரான நிலைமை காணப்படுவ தால், ஆசியக் கிண்ண, உலக கிண்ண 20/20 தொடர் திட்ட மிட்டபடி நடக்குமா என்ற கேள் விக்குறி எழுந்துள்ளது.

இதுதவிர, பங்களாதேஷ் பய ணத்தை பாகிஸ்தான் ரத்து செய்ய லாம் என்றும் தகவல்கள் தெரி விக்கின்றன. மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக பாகிஸ் தானுக்கு, பங்களாதேஷ் அணி செல்ல மறுத்து வருவதாலும், இதனை புறக்கணித்து நெருக்கடி கொடுக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

> ”
> சமீபகாலமாக பங்களாதேஷில் பாகிஸ்தானுக்கு எதிரான நிலைமை காணப்படுவ தால், ஆசிய கிண்ண, உலக கிண்ண 20/20 தொடர் திட்டமிட்டபடி நடக்குமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.

# சுவான் திடீர் ஓய்வு

சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாகத் திடீரென அறிவித்துள்ளார். இங்கிலாந்து அணியின் அனுபவச் சுழற்பந்து வீச்சாளர் சுவான் (வயது-34).

ஆஸ்திரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட பாரம்பரிய ஆஷஸ் தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் மூன்று போட்டிகளிலும் படுதோல்வியடைந்த இங்கிலாந்து அணி தொடரை 0:3 என இழந்தது.

இதில் பங்கேற்று வரும் சுவான் சர்வதேசப் போட்டிகள் மற்றும் முதல் தர போட்டிகளில் இருந்து உடனடியாக ஓய்வு பெறுவதாகத் திடீரென அறிவித்துள்ளார். சுவான் இதுவரை 60 டெஸ்ட் போட்டிகளில் 255 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். தவிர, 79 ஒருநாள் போட்டிகளில் 104 இலக்குகளை வீழ்த்தியுள்ளார். (த)



**சுவான் இதுவரை 60 டெஸ்ட் போட்டிகளில் 255 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். தவிர, 79 ஒருநாள் போட்டிகளில் 104 இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.**



# கங்குலியின் கிரிக்கெட் அக்கடமிக்குத் தடை

முன்னாள் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலியின் கிரிக்கெட் அக்கடமி உட்பட மொத் தம் 13 பயிற்சி மையங்களுக்கு, பெங்கால் கிரிக் கெட் சங்கம் ஓர் ஆண்டு தடை விதித்துள்ளது.

கொல்கத்தாவில் பெங்கால் கிரிக்கெட் சங்கம் சார்பில், கடந்த செப்ரெம்பர் மாதம் ஜூனியர் (17 வயது) மற்றும் சப்-ஜூனியர் (14 வயது) அம்பர் ராய் கிரிக்கெட் தொடர் நடந்தது. இதில் முன்னாள் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி, முன்னாள் பெங்கால் அணித்தலை வர் சம்பரன் பானர்ஜி உள்ளிட்டோரின் கிரிக்கெட் அக்கடமிகள் பங்கேற்றன.

இத்தொடரில் பங்கேற்ற 13 கிரிக்கெட் அக்கடமி களின் வீரர்கள் வயதில் மோசடி நடந்தி ருப்பதை பெங்கால் கிரிக்கெட் சங்கம் கண்டுபிடித்தது. இதில் கங்குலி, சம்பரன் பானர்ஜி ஆகியோரின் கிரிக்கெட் அக்கடமிகளும் அடங் கும்.

இதனைத் தொடர்ந்து கங்குலி உள்ளிட்டோரின் 13 கிரிக்கெட் அக்கடமிகளுக்கும் ஓர் ஆண்டு தடை விதித்தது. தவிர, வயதில் மோசடி செய்து விளையாடிய 42 வீரர்களுக்கு இரண்டு ஆண்டு கள் தடை விதிக்கப்பட்டன.

இதுகுறித்து பெங்கால் கிரிக்கெட் சங்கத்தின் இணைச் செயலாளர் சுபிர் கங்குலி கூறுகை யில், இது போன்ற மோசடி மீண்டும் கண்டு பிடிக் கப்படுமானால், சம்பந்தப்பட்ட கிரிக்கெட் அக்கட மிகளுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் என்றும் வீரர்களுக்கு 10 ஆண்டுகள் தடை விதிக்கப்படும் எனவும் கூறியுள்ளார். (த)


# பெங்களூர் அணியின் பயிற்சியாளர் வெட்டோரி?

ஐ.பி.எல் அணிகளில் ஒன்றான பெங்களூர் அணிக்கு நியூசிலாந்து வீரர் டானியல் வெட்டோரி பயிற்சியாளராக நியமிக்கப்படுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நியூசிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் டானியல் வெட் டோரி(வயது 34). கடந்த 2008ஆம் ஆண்டில் டில்லி அணிக் காக விளை யாடினார். அதன் பின்னர் கடந்த 2011ஆம் ஆண்டு முதல் பெங்களூர் அணிக்கு மாறினார். இளம் வீரர்களின் வருகை அதிகரித் ததை அடுத்து, கடந்த ஆண்டில் வெட்டோரி போட்டிகளில் பங்கேற்க வில்லை. இதற்குப் பதிலாக அறிவிக்கப் படாத ஆலோசகராக இருந்தார்.

இதற்கிடையே அடுத்த ஐ.பி.எல் தொடரில் வெட் டோரியை அணிக்குப் பயிற்சியாளராக நியமிக்க அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளதாகத் தக வல்கள் வெளியாகியுள்ளன. விரைவில் இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)






# களமிறங்குகிறார் மீண்டும் பெல்ப்ஸ்?

அமெரிக்காவைச் சேர்ந்த நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ், மீண்டும் போட்டிகளில் கலந்து கொள்ள வுள்ளதாக வதந்திகள் பரவி வருகின்றன.

ஒலிம்பிக் போட்டியில் மட்டும் 18 தங்கங்களை அறுவடை செய்தவர் பெல்ப்ஸ். இவர், தனது 18ஆவது தங் கத்தை கடந்த ஆண்டு நடை பெற்ற லண்டன் ஒலிம்பிக் கில் வென்றார். அதன்பின், நீச்சல் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தி ருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் சம்பியன் ஷிப்பில் விளையாட அவர் தகுதி பெற்றார். இது குறித்து பெல்ப்ஸிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு, எதிர்வரும் ஆண்டுகளில் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது' என்று சூசகமாகப் பதில் அளித்தார்.

நீச்சல் போட்டிகளில் தான் பங்கேற்க மாட்டேன்' என்று உறுதிபட அவர் தெரிவிக்காததால், மீண்டும் அவரை நீச்சல் குளத்தில் காணலாம் என்று வதந்திகள் பரவி வருகின்றன. (த)

# சுந்தர்சன் நிறுவனத்தின்

## மாபெரும் மலிவு விற்பனையில் பரிசு வென்ற 50 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள்

**1 ஆம் பரிசு – Abans Double Door Fridge** திரு. த. அகிலன் – சாவற்கட்டு
**2 ஆம் பரிசு – LG Washing Machine** திரு. ஜெ. றொஷான் – சாவகச்சேரி
**3 ஆம் பரிசு – Microwave Oven** திரு. ந. பிருந்தன் – கோண்டாவில்

**4 - 10 ஆம் பரிசில்கள் - Mixture Grinder**
ந. சதீஸ்குமார் – மல்லாகம்/ச. லோகநாதன் – கோண்டாவில்/அ. குணமணி – அச்சுவேலி/ ஜெ. விதுஷன் – கைதடி/த. பரஞ்சோதி – முள்ளியவளை/கே. சுரேஸ்குமார் – மாதகல்/ பா. சண்முகம் – புத்தூர்

**11 - 20 ஆம் பரிசில்கள் - Pedestal Fan**
வே. லெபோன்ஜெயதாஸ் – மாதகல்/சி. நஜிதா – சுன்னாகம்/ஏ.பியூலா – நவாலி/வி.சுரேந்திரன் – கே.கே.எஸ் வீதி/ஏ.நிரஞ்சன் – யாழ்ப்பாணம்/க.செல்வகுமார் – கோப்பாய்/லெ.ஜெனுஷ்கா – மாதகல்/எஸ்.சிவரூபன் – சங்கானை/எம்.விஜேந்ரா – திருநெல்வேலி/தியூன்சியஸ் – மன்னார்

**21 - 30 ஆம் பரிசில்கள் - Mobile Phone**
சுதந்தகுமார் – ஜெயபுரம்/சோ.ஜங்கரன் – புலோலி/ஆர்.ஹாதிகா – யாழ்ப்பாணம்/எஸ்.ரஜீவன் – கொழும்புத்துறை/க.கைத்தாம்பிள்ளை – பண்டத்தரிப்பு/வி.காந்தரூபன் – கரவெட்டி/வி.அபிராமன் – இணுவில்/ரி.தேசானா – வல்வெட்டித்துறை/வி.அக்ஷயாரகதன் – யாழ்ப்பாணம்/சி.ஜோரேந்திரன் – சுன்னாகம்

**31 - 40 ஆம் பரிசில்கள் - Toaster**
ஏ.எம்.றியானி – மானிப்பாய்/வி.சாந்திகா – சுதுமலை/ம.ஜானகி – யாழ்ப்பாணம்/எம். பிரைட்மன் – புங்கையூர்/ரி.புனிதவதி – சுப்பிரான்/துயாகரன் – கோண்டாவில்/எஸ். ஜெஸனி – சாவகச்சேரி/எஸ்.றஜீவன் – கொழும்புத்துறை/ஜா.லிங்கேஸ்வரன் – சுதுமலை/எஸ்.ஜெயரட்ணம் – சுழிபுரம்

**41 - 50 ஆம் பரிசில்கள் - Iron**
வித்தியாகௌரி – மானிப்பாய்/ப.விஜயலட்சுமி – மானிப்பாய்/எஸ்.கஸ்தூரன் – மானிப்பாய்/பி.பரமேஸ்வரி – காரைநகர்/பே.சடாசிவம் – கொக்குவில்/ரி.ஏ.றாஜ்குமார் – மானிப்பாய்/றா.கலைச்செல்வி – கொக்குவில்/எஸ்.விஜயகுமாரி – வட்டுக்கோட்டை/து.சுகந்தன் – மாதகல்/எஸ்.சுபாங்கி – இணுவில்



# NEW SCIENCE HALL

KANNATHIDDY JAFFNA.

## 2016 A/L

## கணித உயிரியல் பிரிவு

| PHYSICS | CHEMISTRY | BIOLOGY | COM.MATHS |
|---|---|---|---|
| திரு.S.சோதிலிங்கம் | திரு.K.சிவத்திரன் | வழமையான ஆசிரியர் | திரு.S.செந்தில்ராஜ் |
| திரு.G.பிரபா | திரு.N.மகேஸ்வரன் | திரு.T.தம்பிராஜா | திரு.S.செந்தில்நாதன் |
| திரு.N.கபிலன் | திரு.G.BENO | திரு.T.கெங்காதரன் | திரு.S.சிவகரன் |
| திரு.K.செல்வன் | திரு.T.சுசாந்தன் | | |

**ஆரம்பம் 28.12.2013**

**SAT. 8.30 A.M**

(சி/10400)(7.6.3)



# NEW SCIENCE WORLD

**VICTORY MUST**

Navalar road junction, Brown road, Jaffna.
Web : www.physicsocean.com Email : info@physicsocean.com

## 2014 A/L DAY CLASSES

**ஆரம்பம்: 23.12.2013 7.30 A.M**

**பௌதீகவியல்**
Mr. R. KUGEN
Mr. R. KUMARAN

**இரசாயனவியல்**
Mr. DIAS
Mr. T.SIVAKUMAR

**உயிரியல்**
Mr. S. PONTHIVAGARAN
Mr. V. UMASHANKAR

(42996)(10.6)

## 2016 A/L SCIENCE

**ஆரம்பம்**

**28.12.2013**

**7.30 A.M**

**பௌதீகவியல்**
திரு. R. குமரன்
திரு. R. குகன்

**இரசாயனவியல்**
திரு. டயஸ்
Tamil & English Medium
திரு. T. சிவகுமார்

**உயிரியல்**
திரு. S. பொன்திவாகரன்
திரு. V. உமாசங்கர்

### மாதாந்த தொடர் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் உயிரியல் 2014 A/L

ஆசிரியர்: சு.பொன்திவாகரன்

| பெயர் | புள்ளி | நிலை | பாடசாலை |
|---|---|---|---|
| 01. அபிராமி சோதிதாசன் | 91 | 1 | J/VGHS |
| 02. யதுஷனா அருணகிரிவாசன் | 89 | 2 | J/VGHS |
| 03. பாலகுமார் பாலஜீவன் | 87 | 3 | J/KHC |
| 04. பிரணவி தியாகமூர்த்தி | 81 | 4 | J/VGHS |
| 05. நிருஷிகா சண்முகநாதன் | 81 | 4 | J/CGC |
| 06. துஷியந்தி கவிராஜன் | 79 | 6 | J/VGHS |
| 07. சௌயா காயாரோகணன் | 79 | 6 | J/VGHS |
| 08. மகேசன் பிரகாந்த் | 77 | 8 | JHC |
| 09. இராஜரட்ணம் பானுவரன் | 77 | 8 | JHC |
| 10. ஜேன் மதுஷா செல்வராஜா | 73 | 10 | J/CGC |
| 11. சந்திரகுமார் தனன்சயன் | 73 | 10 | JHC |
| 12. கிருபாகரன் ஜெனார்த்தனன் | 73 | 10 | J/CMMV |
| 13. சரண்யா அமரசிங்கம் | 73 | 10 | J/VGHS |
| 14. பாலச்சந்திரன் பார்த்தீபன் | 73 | 10 | J/KHC |
| 15. சந்திரசேகரன் நிதர்சன் | 71 | 15 | J/KHC |
| 16. வைஷ்ணவி தங்கராஜா | 71 | 15 | J/VGHS |
| 17. கிருஷாந்தி குமரநாதன் | 69 | 17 | J/HLC |
| 18. மிதிலா சிவநாதன் | 68 | 18 | J/CGC |
| 19. நடராசா சிவகரன் | 67 | 19 | J/KHC |
| 20. கிருஷா பத்மநாதன் | 67 | 19 | J/KHC |
| 21. பூலோகநாதன் சிவரூபன் | 67 | 19 | JC |
| 22. கணேசன் சுகிதரன் | 66 | 22 | J/KHC |
| 23. துவாரகா விசுவகேது | 66 | 22 | JUC |
| 24. ஜெயச்சந்திரன் ஜூலியன் | 66 | 22 | J/SPC |
| 25. தனுஜா அமிர்தலிங்கம் | 65 | 25 | J/VGHS |
| 26. திவ்யா ஜெயானந்தராஜன் | 65 | 25 | J/VGHS |
| 27. தட்சாயினி ரங்கநாதன் | 64 | 27 | J/HLC |
| 28. தவஸ்கந்த ராதவன் | 64 | 28 | JHC |
| 29. சிவராசா நிமலன் | 64 | 29 | J/KHC |
| 30. தர்மராசா ஜனகன | 63 | 30 | MU/PCC |
| 31. லக்ஷிகா இளமுருகன் | 63 | 30 | J/VGHS |
| 32. ஜெயக்குமார் ஆரூரன் | 63 | 30 | JHC |
| 33. ரேணுகா பாலசிங்கம் | 62 | 33 | JUC |
| 34. விஜயகுமார் யதுஷன் | 62 | 33 | J/StJC |
| 35. கணபதிப்பிள்ளை ராகுலன் | 62 | 33 | JHC |
| 36. நகுலேஸ்வரன் மயூரன் | 62 | 33 | JHC |
| 37. கோபாலசுதந்திரன் விஷாகபவன் | 61 | 37 | JHC |
| 38. சகிலா சிவசுப்பிரமணியம் | 61 | 37 | J/VGHS |
| 39. பாலசுந்தரம் பிரேமன் | 61 | 37 | Kn/KHC |
| 40. பிரியங்கா அருள்வதனன் | 61 | 37 | J/UGC |
| 41. அபிநயா கண்ணதாஸ் | 60 | 41 | J/VGHS |
| 42. சர்மிளா சிறிஸ்கந்தராஜா | 60 | 42 | J/HLC |


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.